Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.

வெளியீடு : 4-5-2012 Issued : 4-5-2012

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, பிப்ரவரி 2, 2012—தொகுதி 18—எண் 3**

**Thursday, the 2nd February 2012—Volume 18—No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

**2–2–2012**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 347-395 |
| **2. அறிக்கை அளித்தல்—** | |
| எதிர்க்கட்சித் தலைவர் திரு. விஜயகாந்த் மற்றும் தே.மு.தி.க. உறுப்பினர்கள் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை | 395-396 |
| **3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—** | |
| தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 | 396 |
| **4. அரசினர் தீர்மானங்கள்—** | 397-399 |
| (அ) ஆளுநர் உரை மீதான விவாதத்தைத் தள்ளி வைத்தல் | 397 |
| (ஆ) திரு. விஜயகாந்த், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தே.மு.தி.க. உறுப்பினர்கள் மீதான உரிமை மீறல் பிரச்சினையில் அவை உரிமைக் குழு அளித்த பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளுதல் | 397-399 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 398 |
| திரு. ச. இராமச்சந்திரன் | 398-399 |
| **5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி | 400-520 |
| டாக்டர் சி. விஜயபாஸ்கர் | 400-412 |
| முனைவர் கோவி. செழியன் | 412-429 |
| *மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி | 416-422, |
| *மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் | 416-417, 497,509 |

பக்கங்கள்

**5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 417-418, 449,454

*மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் 418-419

*மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் 419,428, 435-436, 472-477, 491-496

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 421-423, 425,427,515

*மாண்புமிகு திருமதி பா. வளர்மதி 422,477-478

*திரு. க. பாலகிருஷ்ணன் 423, 501

*மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 424-425, 487-491, 498,499,504, 507-508

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா 426

*மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் 426,466,470, 471,503

*திரு. ரா. சரத்குமார் 427,456-464

*திரு. பி.வி. கதிரவன் 429-433, 436-437

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி 433-434, 518-519

திரு. சு. குணசேகரன் 434,437-438, 469,512-513

*திரு. என்.ஆர். ரெங்கராஜன் 437,449-455

*திரு. பழ. கருப்பையா 438-440



பக்கங்கள்

**5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி

முனைவர் செ.கு. தமிழரசன் 440-449

மாண்புமிகு திரு. இரா. காமராஜ் 451,511-514

*மாண்புமிகு திரு. செ. தாமோதரன் 453

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம் 455, 492

திரு. ப. டில்லி பாபு 464-472, 476-480

*மாண்புமிகு திரு. பி. தங்கமணி 467-471

**5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி

செல்வி கே. பாலபாரதி 470-474,475

*திரு. ஆர்.பி. உதயகுமார் 480-486

திரு. ம. கலை அரசு 486-494

*மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய் 493

*டாக்டர் க. கிருஷ்ணசாமி 494-505

*மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன் 501

*மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு 505-506

திரு. எஸ்.பி. முத்துக்குமரன் 506-511, 514-515

திரு. அ. கணேஷ்குமார் 515-520

**6. அறிவிப்பு—**

பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளையொட்டி 3–2–2012 அன்று பேரவை நிகழ்ச்சிகள் பிற்பகல் 1–00 மணியளவில் முடிவுறுதல் 455

**7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 520-521

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2043, தை 19

## 2012 பிப்ரவரி 2, வியாழக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர்."

சொற்களின் வகை, தொகைகளை அறிந்த நல்லவர்கள் அவையில் நிறைந்திருப்பவர்களின் தன்மை அறிந்து அதற்கேற்ப பேச வேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நல்ல குறளா? எல்லோரும் ஆமோதித்துவிட்டீர்கள்!

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**21—**

### துணை மின் நிலையம்

***5314—திரு. செ. காமராஜ்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2012 பிப்ரவரி 2

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, காணியாளம்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். கிருஷ்ணராயபுரம் தொகுதி, காணியாளம்பட்டியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டு, நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் துவக்கப்பட்டு முடிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.

**திரு. செ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கிருஷ்ணராயபுரம் தொகுதி, காணியாளம்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்க அனுமதி வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி பல கோடி சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.

**திரு. எம்.கே. அசோக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, என்னுடைய வேளச்சேரி தொகுதிக்கு உட்பட்ட தரமணி பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியினுடைய தேவைகளை ஆய்வு செய்து, தேவை ஏற்படின், அதுகுறித்து மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ஆவன செய்யும்.



2012 பிப்ரவரி 2]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மின் நிலையங்களில் பழுதடையும் மின் மாற்றிகளைப் புதிதாக மாற்றியமைக்க, போதுமான எண்ணிக்கையில் அந்தந்த கோட்டப் பொறியாளர்களின் எல்லைகளிலேயே கையிருப்பில் வைத்துக்கொள்ள அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த துணை மின் நிலையங்களிலே பழுதடைந்த மின் மாற்றிகள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் உடனடியாகச் சரி செய்வதற்குரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு மின்சார வாரியம் இப்பொழுது எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**22—**

### கூட்டுக் குடிநீர்

***1261—திரு. ஆ. ராமசாமி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி, நிலக்கோட்டை பகுதியில் வைகை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2012 பிப்ரவரி 2

வைகையில் போதுமான அளவு நீராதாரம் இல்லாததால், திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள நத்தம், சாணார்பட்டி, ஆத்தூர், வத்தலகுண்டு, நிலக்கோட்டை, திண்டுக்கல், ரெட்டியார்சத்திரம், பழனி, ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, வேடசந்தூர், வடமதுரை மற்றும் குஜிலியம்பாறை ஒன்றியங்களைச் சேர்ந்த 1,039 ஊரகக் குடியிருப்புகளுக்கு காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் நிலக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த 79 கிராமங்களும் பயன்பெறும்வண்ணம் சேர்க்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி அவர்கள்.

**திரு. ஆ. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினுடைய தண்ணீர் போதாது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரியப்படுத்திக் கொள்கின்றேன். அணைக்கரைப்பட்டியில் தண்ணீரைத் தேக்குவதற்காக தடுப்பணை கட்டினால், மண் அரித்துக்கொண்டு போகாத அளவிற்குப் போட்டால், நமக்கு தண்ணீர் அதிகமாகக் கிடைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல ஆலோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், வைகை ஆற்றில் போதிய நீர் ஆதாரமேயில்லை. தடுப்பணை கட்டுவதால் நீர் தேங்கி நீர் கிடைப்பது என்பது வேறு. நீர் ஆதாரமே இல்லாத காரணத்தினால்தான், ஏற்கெனவே நிலக்கோட்டை தொகுதியில் 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் வைகை ஆற்றிலிருந்து கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அவற்றின் வாயிலாக அந்தத் தொகுதியில் மொத்தம் 125 குடியிருப்புகளுக்கு தண்ணீர் கொடுக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், 187 கை பம்புகளும், 232 மின் விசைப் பம்புகளும், 236 மேல்நிலை நீர்த்தேக்கத்



2012 பிப்ரவரி 2]

தொட்டிகளும் கட்டப்பட்டிருக்கின்றன. இவை அனைத்தும் இருந்தும்கூட, முழுமையாகத் தண்ணீர் கொடுக்கப்படுகிறதா என்று சொன்னால், முழுமையாகத் தண்ணீர் கிடைப்பது இல்லை. அதனால்தான், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திண்டுக்கல் மாவட்டம் முழுவதும், குறிப்பாக, நிலக்கோட்டை தொகுதி மக்களுக்கு நிறைவான தண்ணீர் கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான், காவிரி ஆற்றின் நீர் ஆதாரத்தைக் கொண்டு, கிட்டத்தட்ட 1,039 குடியிருப்புகளுக்குத் தேவையான குடி தண்ணீரை எடுக்கவேண்டுமென்று விரிவான திட்ட அறிக்கையைச் செயல்படுத்த உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வருகின்ற 30–6–2012–ல் ஆய்வறிக்கை கிடைத்தவுடனேயே முறையாக ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி அவர்கள்.

**திரு. ஆ. ராமசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு அவர்கள்.

**திரு. எம்.கே. செல்வராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்ட வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்த வேலைகள் எந்தக் கால அளவில் முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சேலம் நகரத்திற்குள்ளேயே இருக்கிறார். அந்தப் பணி துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவரை அழைத்துச் சென்று நானும் அந்தப் பணியை ஆய்வு செய்தேன். விரைவாக அந்தப்

[2012 பிப்ரவரி 2

பணி முடிக்கப்பட்டு சேலம் நகர மக்களுக்கு குடிநீர் கிடைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றை ஆதாரமாகக் கொண்டு கரூர் அருகே கட்டளை ரங்கநாதபுரத்திலிருந்து வேடசந்தூர் தொகுதிக்குட்பட்ட வேடசந்தூர், குஜிலியம்பாறை, வடமதுரை, ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட ரெட்டியார்சத்திரம், ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஆகிய 6 ஊராட்சி ஒன்றியங்களுக்கு குடிநீர் கொண்டுவருகின்ற பணி ஏற்கெனவே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தப் பணியை விரைவில் முடித்து எப்பொழுது மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், ஏற்கெனவே அந்தக் குழாய்கள் அமைத்த இடங்களிலெல்லாம் சாலைகளை விரிவுபடுத்துகின்ற சமயத்திலே குழாய்களெல்லாம் சேதம் அடைந்திருக்கின்றன. அந்தக் குழாய்களை மீண்டும் பதிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து விரைவிலேயே மக்களுக்கு குடிநீர் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 25 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை அறிமுகப்படுத்தி இப்பொழுது பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கூட்டுக் குடிநீர்த் திட்டமும் இதில் உள்ளடங்கும். அதில் இப்பொழுது 9 கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் முடிவுற்று பயன்பாட்டுக்கு வந்திருக்கின்றன. மீதமுள்ள 16 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கான பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு, பயன்பாட்டுக்கு வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 பிப்ரவரி 2]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதி, வி.கே. புதூர் வட்டம், ஊத்துமலை பகுதியிலுள்ள 25 ஊராட்சிகளுக்கு போதுமான அளவு தாமிரபரணி குடிநீர் வழங்க ஊத்துமலை கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றைத் துவக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு திட்டத்தைக் கூறி, கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு, அவர் சொல்லுகின்ற இடத்தில் நீர் ஆதாரம் இருக்கிறதா என்பதையும் தெரிந்து, அந்த இடத்தில் நீர் ஆதாரம் இல்லை என்று சொன்னால் எங்கு நீர் ஆதாரம் இருக்கிறதோ—இப்பொழுது தமிழகத்தைப் பொறுத்தவரையில் நீர் ஆதாரம் இருக்கின்ற ஒரே ஒரு இடம் காவிரி நீர் ஆற்றுப் படுகைதான்—அந்தப் பகுதியிலிருந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் சட்டமன்றத் தொகுதியில் மேட்டூர் அணை இருந்தும் கொளத்தூர், மேச்சேரி ஒன்றியங்களில் குடிநீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. கடந்த 50 ஆண்டு காலமாக உள்ள அந்த மக்களின் கோரிக்கையான மேச்சேரி—கொளத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை அமல்படுத்தினால், அந்த மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையை அடியோடு தீர்க்கமுடியும். மேட்டூர் அணையைச் சுற்றியுள்ள கிராமங்களை எடுத்துக்கொண்டால், இன்றைக்கு கைக்கு எட்டிய குடி தண்ணீர் வாய்க்கு எட்டாத நிலை உள்ளது.

[2012 பிப்ரவரி 2

இந்த நிலையை மாற்றியமைத்து கொளத்தூர்—மேச்சேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அமல்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கீழே போகின்ற காவிரி ஆற்றைக்கூட இப்போது தடுத்து நிறுத்தி, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கும் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று 2,000 கோடி ரூபாய் நிதி வழங்கி, இப்போது அந்தத் திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மேச்சேரி, மேட்டூர் பகுதிகளில் ஏற்கெனவே குடிதண்ணீர் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், போதிய குடிதண்ணீர் கிடைக்கவில்லை. ஏனென்று சொன்னால், அந்தப் பகுதி வளர்ந்து வருகின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், ஏற்கெனவே கொடுக்கப்படுகின்ற தண்ணீர் போதிய அளவு இல்லாததால், இன்னும் கூடுதலான தண்ணீர் தேவைப்படுகிறது. அதற்கேற்றவாறு திட்டம் தீட்டி அது நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம் மற்றும் திண்டுக்கல் நகரத்தினுடைய குடிநீர்ப் பிரச்சினையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள். வைகை அணையிலிருந்து குழாய் பதித்து நேரடியாகத் தண்ணீர் கொண்டுவருவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பது குறித்து ஆய்வு செய்வதற்கு சென்ற கூட்டத் தொடரிலே ஓர் அறிவிப்பும் செய்தார்கள். அந்த ஆய்வுப் பணியை விரைவில் தொடங்கி, அந்தத் திட்டத்தை நிறைவு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



2012 பிப்ரவரி 2]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குப் பதில் சொல்கின்றபோதே சொன்னேன். வைகை ஆற்றில் போதிய நீராதாரம் இல்லாத காரணத்தினால்தான், காவிரிப் படுகையிலிருந்து தண்ணீர் எடுத்து வந்து 1,039 குடியிருப்புகளுக்குத் தண்ணீர் கொடுக்கக்கூடிய திட்டத்தை, அதாவது கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய் திட்டத்தைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் பார்ப்போம் என்றால், தொடர்ந்து வைகையை நம்பியிருந்தால் நமக்கு முழுமையாகத் தண்ணீர் கிடைக்காது என்பது நன்கு விளங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்தில் காளையார்கோவில் ஒன்றியம், சிவகங்கை ஒன்றியம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், காவிரிக் கூட்டுக் குடிநீர் முதல் திட்டத்தில் விடுபட்ட பகுதியில், கிட்டத்தட்ட ஆயிரம் கிராமங்களுக்கு மேல் இருக்கின்றன. அந்தக் கிராமங்களிலெல்லாம் உப்புத் தண்ணீர்தான் கிடைத்துக் கொண்டிருக்கிறது. எனவே, புதிதாக ஒரு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான மதிப்பீடுகளும் அனுப்பப்பட்ட நிலையில், அந்தத் திட்டத்தை நிறைவேற்றி, விடுபட்டிருக்கின்ற கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டு இருக்கின்ற அத்தனை குடிமக்களுக்கும் போதுமான, நிறைவான பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஏற்கெனவே, காவிரி ஆற்றிலிருந்து மாண்புமிகு உறுப்பினருடைய பகுதிகளுக்குத் தண்ணீர் சென்று

[2012 பிப்ரவரி 2

கொண்டிருக்கிறது. அப்படிச் செல்கின்றபட்சத்தில், நீர் கிடைக்காத பகுதிகளை ஆய்வு செய்து, அந்தப் பகுதிகளுக்கும் நீர் கிடைக்கின்ற வகையில் செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தூத்துக்குடி, கருங்குளம் மற்றும் ஒட்டப்பிடாரம் ஆகிய மூன்று ஒன்றியங்களிலுமே பல்லாண்டுகாலமாக செயல்பட்டு வருகின்ற கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் முறையாகச் செயல்படாததன் விளைவாக, குறிப்பாக, தூத்துக்குடி ஒன்றியத்திற்குட்பட்ட மாப்பிள்ளை ஊரணி என்ற பஞ்சாயத்தில் நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட ஜனத்தொகை உள்ள பகுதியில், கடந்த ஐந்து வருடங்களாகவே மக்கள் ஒரு குடம் தண்ணீரை 5 ரூபாய் முதல் 10 ரூபாய் வரை விலை கொடுத்து வாங்கிப் பயன்படுத்த வேண்டிய ஓர் அவல நிலையில் இருக்கிறார்கள். எனவே, அந்த மக்களுடைய அவல நிலையைப் போக்குகின்ற வகையில், விசேஷமாக ஒரு பிரத்தியேகமான குடிநீர்த் திட்டத்தை அமலாக்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த நிதிநிலை அறிக்கையில், தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த 319 ஊரகக் குடியிருப்புகளுக்கும், 12 ஊராட்சிகளுக்கும் உட்பட்ட அத்தனை குடியிருப்புகளுக்கும் தண்ணீர் கொடுக்கப்பட வேண்டுமென்பதற்காக, ஒரு திட்ட ஆய்வு அறிக்கையை வழங்க ஏற்பாடு செய்து, கிட்டத்தட்ட 1 இலட்சத்து 72 ஆயிரம் மக்கள் பயன்படக்கூடிய வகையிலே ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அனேகமாக அந்த விரிவான திட்ட அறிக்கை, வருகின்ற நிதியாண்டில் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியோடு இங்கே வைக்கப்படும். அதற்குப் பிறகு நடவடிக்கை எடுத்து ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் அந்த நீண்டகாலக் கோரிக்கை, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், இரண்டு ஆண்டுகளுக்குள் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) நிதிநிலை அறிக்கை என்று தவறுதலாகக் கூறிவிட்டேன். அதனை மாற்றி, ‘மானியக் கோரிக்கை விவாதத்தின்போது’ என்று பதியும்படி கேட்டுக்கொள்கிறேன்.



2012 பிப்ரவரி 2]

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

**திரு. அ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடி தொகுதி, கல்லக்குடி, புள்ளம்பாடி பேரூராட்சிகளுக்கு கொள்ளிடம் ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அதன் அளவு போதுமானதாக இல்லாததால், கூடுதலாகக் குடிநீர் எடுத்துக் கொடுப்பதற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளன. அந்தத் திட்டம் எப்பொழுது தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதைப்போல, ஒரு காலகட்டத்தில் அங்கு மக்கள்தொகை உயருகின்றபொழுது, ஏற்கெனவே கொண்டு வரப்பட்ட திட்டங்களின்மூலம் கிடைக்கும் நீராதாரம் போதுமானதாக இருப்பதில்லை. அதன் அடிப்படையிலே அந்தப் பகுதிகளுக்கு எவ்வளவு தண்ணீர் தேவைப்படுகிறது என்பது குறித்து மீண்டும் முறையாக ஆய்வு செய்து, அதுகுறித்த விரிவான அறிக்கை கிடைத்த பின்பு, நிதி ஆதாரம் வருகின்ற நேரத்தில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

[2012 பிப்ரவரி 2

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை குடிநீர்ப் பிரச்சினையில் அரசு மிகுந்த அக்கறையோடு புதிய நீர்நிலைகளைச் சேர்த்து வருகிறது. திருவள்ளூரில் இப்பொழுது இரண்டு ஏரிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. விரிவடைந்திருக்கிற மாநகராட்சி என்கிற அளவிலே, சென்னையை ஒட்டியுள்ள மாதவரம் தொகுதிக்குட்பட்ட ரெட்டை ஏரி என்ற பகுதியை ஆழப்படுத்தி அதைக் குடிநீருக்குப் பயன்படுத்தினால் உதவியாக இருக்கும். மேலும், வடசென்னை மக்களுக்குப் பொழுதுபோக்கு இடமே கிடையாது. அந்த ஏரியைச் சுற்றி பூங்காக்கள் அமைக்கும் பணியையும் சேர்த்துச் செய்ய முடியும். ஆகவே, குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் ஆதாரங்கள் உள்ள ஏரிகள் அனைத்தும் தூர் எடுக்கப்பட வேண்டும், தூர் எடுத்து நீராதாரங்கள் காக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் தமிழ்நாட்டில் இருக்கின்ற 39,000 ஏரிகளும் தூர் எடுக்கப்பட்டு நீராதாரங்கள் சேமிக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற ஏரியும் இதில் உள்ளடங்கும் என்று நான் கருதுகிறேன். அதன் அடிப்படையிலே அந்த ஏரிகளை ஆய்வு செய்து, அவை குடிதண்ணீர் எடுக்க உகந்தவையாக இருக்கின்றனவா என்பதையும் பார்த்து, உகந்தவையாக இருக்கும்பட்சத்தில் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னையைச் சுற்றியுள்ள ஏரிகள் சுத்தமில்லாமல் பல்வேறு வகைளிலே அசுத்தப்பட்டுக் கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிற காரணத்தால், ஏரிகளைத் தூர் வாரினால்கூட அங்கு சேமிக்கப்படுகின்ற தண்ணீர் தூய தண்ணீராக இருக்கிறதா என்பதை ஆய்வு செய்து, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 பிப்ரவரி 2]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில், பூவந்தி கிராமத்தில் இருக்கின்ற மக்களுக்கு குடிநீர் சரிவரக் கிடைப்பதில்லை. அந்தப் பகுதியிலே இருக்கின்ற நிலத்தைத் தோண்டி, நிலத்தடி நீரைக் குடிப்பதற்குப் பயன்படுத்துகின்ற நேரத்தில், அதில் ஏதோ ஒருவிதமான ஆயில் படர்வதைப்போல இருக்கின்றது. ஆகவே, அந்தப் பகுதி மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற மக்கள் குடிநீருக்கு மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பூவந்தி, ஏனாதி, மஞ்சள்குடி போன்ற பகுதிகளிலுள்ள மக்கள் குடிநீருக்கு அவதிப்படுகின்ற காரணத்தால், திருப்புவனம் பகுதியிலிருக்கின்ற மடப்புரம் கிராமத்திற்கு அருகில், வைகை ஆற்றில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்து, பூவந்தியைத் தலைமையிடமாகக் கொண்டு அங்கே ஒரு குடிநீர்த் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தோற்றுவித்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, நிலத்தடி நீர் இப்பொழுது பொதுவாகவே எல்லா பகுதிகளிலுமே நச்சுத்தன்மை உடையதாக இருக்கிறது. தருமபுரி, கிருஷ்ணகிரி, கன்னியாகுமரி மாவட்டங்களில் பார்த்தோமென்றால், தண்ணீரில் ஃப்புளோரைடு கலந்திருக்கிறது. அதைப்போலத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சிவகங்கை மாவட்டத்திலேயும் அந்த ஃப்புளோரைடு நச்சுத்தன்மை இருக்கின்ற காரணத்தினால்தான் அந்தத் தண்ணீர் குடிக்க இயலாமல் இருக்கின்றது. சில இடங்களில் உப்புத் தண்ணீராக இருக்கின்றது. இதைக் கருத்தில் கொண்டுதான், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அப்பகுதி மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும் என்பதற்காகத்தான், ஆற்றுப் படுகையிலேயிருந்து தண்ணீரை எடுத்து ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள ஊரகப் பகுதிகளுக்கும் கொடுத்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைகை ஆற்றின் கரையிலேயிருந்து தண்ணீர் எடுக்க

[2012 பிப்ரவரி 2

வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். ஏற்கெனவே வைகை ஆற்றின் கரையிலிலேயிருந்து எடுக்கப்பட்ட தண்ணீர் போதுமானதாக இல்லாத காரணத்தினால், வேறு திட்டத்தின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பச்சையப்பன் கல்லூரியின் பின்புறம் உள்ள அப்பா ராவ் தோட்டம், ஔவைபுரம் போன்ற பகுதிகள் 25,000–க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளாகும். அந்தப் பகுதிகளில் சுமார் 51 தண்ணீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டு, அவற்றின்மூலமாக ஐந்து வருடங்களாக அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. முறையான தெருக் குழாய்கள் இருந்தும், குழாய்களின் மூலமாகக் குடிதண்ணீர் விநியோகிக்கப்படவில்லை. இதை ஏன் நான் தெளிவாகச் சொல்கிறேன் என்றால், நான் சென்றமுறை இந்த அவையில் இதுபற்றிப் பேசினேன். அதற்கு இன்னும் தீர்வு கிடைக்கவில்லை. மேலும், சென்னை குடிநீர் வாரிய அலுவலகம் அந்தப் பகுதிக்கு அருகில் சுமார் 1½ கிலோ மீட்டர் தொலைவில்தான் உள்ளது. ஆகவே, அந்தப் பகுதி மக்களுக்கு தெருக் குழாய்களின் மூலமாக முறையாகத் தண்ணீர் கிடைக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிக்கு ஒட்டுமொத்தமாக கிட்டத்தட்ட 810 M.L.D. தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. கொள்ளிடம் ஆற்றிலிருந்தும் மற்றும் சுற்றுப்புற ஏரிகளிலிருந்தும் தண்ணீர் கொண்டுவரப்படுகிறது. அதேநேரத்தில் இதுபோன்று உட்பகுதியிலே இருக்கின்ற, பைப்லைன் போகாத பகுதிகளுக்கு லாரியின் மூலமாகத்தான் தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது.



2012 பிப்ரவரி 2]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அந்தப் பகுதிக்கு லாரியின் மூலமாகத்தான் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இன்னும் குடிதண்ணீர் தேவையென்று சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தப் பகுதி மக்களுக்கு நிறைவாக குடிதண்ணீர் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். ராஜலட்சுமி அவர்கள்.

**திருமதி ஆர். ராஜலட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு கோரிக்கை. என்னுடைய தொகுதிக்குட்பட்ட சித்திரைக்குளம் என்பது பழமையும், பெருமையும் வாய்ந்த ஒரு குளமாகும். அந்தக் குளத்தின் அருகே அதிகமான அளவில் ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டதன் காரணமாகவும், அந்தக் குளத்தில் பல காலமாக அசுத்தங்கள் சேர்ந்த காரணத்தாலும் அது மிகவும் பழுதடைந்துள்ளதுடன், அந்தத் தண்ணீர் மிகவும் அசுத்தமான நிலையில் உள்ளது. சென்னையில் உள்ள அனைத்துக் குளங்களும் கிட்டத்தட்ட அந்த நிலையில்தான் உள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திருமதி ஆர். ராஜலட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சித்திரைக் குளத்தைப் பற்றி மீண்டும் மீண்டும் பத்திரிகைகளில் எழுதப்பட்டு வருகிறது. என்னுடைய தொகுதியில் அந்தக் குளம் இருக்கின்ற காரணத்தால், எனக்கு அது மிகுந்த மன வருத்தமாகக்கூட இருக்கிறது. எனவே, ஏதாவது ஒரு விதத்தில் அதனைச் சீர் செய்வதற்கும், அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றவும், கழிவு நீர் அந்தக் குளத்தில்போய்ச் சேராமல் தடுப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகுந்த ஆதங்கத்தோடும், கவலையோடும் இந்தக் கேள்வியை எழுப்பி

[2012 பிப்ரவரி 2

இருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் ஆதங்கப்படவும் தேவையில்லை; கவலைப்படவும் தேவையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்தப் பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது என்பது சற்று கடினம். காரணம், ஆக்கிரமிப்புகளை நாம் அகற்றினால் அடுத்ததாக அந்நடவடிக்கை வேண்டாம் என்று பரிந்துரை செய்கிறார். அது காலத்தின் சூழ்நிலை. நீண்டகாலமாக இருக்கின்றவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அதுவும், குறிப்பாக நமது தோழர்கள் அதற்கு உடனே செங்கொடியைத் தூக்கிவிடுவார்கள். அவர்களுக்கும் நாம் பதில் சொல்லவேண்டிய நிலைமை வந்துவிடும். ஆகவே, அதைச் சற்று ஆய்ந்து, அதற்கேற்றாற்போல் அந்தக் குளத்தைச் சுத்தம் செய்து, அந்தப் பகுதியில் நடைப்பயிற்சி செய்வதற்கு உரிய நல்ல வாய்ப்பை, உரிய சூழ்நிலையை சென்னை மாநகராட்சியின்மூலம் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த வினாவில் மேலும் வேறு யாரும் துணை வினா கேட்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். இந்தக் கேள்விக்குத் துணைக் கேள்விக் கேட்க யாரும் தயாராக இல்லையென்று நினைக்கிறேன்.

வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**23—**

## நியாய விலைக் கடை

***453—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, ஜெ. காருபள்ளி ஊராட்சி, வெங்கட்டாபுரம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2012 பிப்ரவரி 2]

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்குகின்ற தெய்வம், என்னை வாழவைக்கும் தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். வினாக்கள்–விடைகள் நேரத்தில் முதன்முதலில் என்னுடைய விடையை இந்த அவைக்கு அளிக்க விழைகிறேன்.

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) தளி தொகுதி, ஜெ. காருபள்ளி ஊராட்சியிலுள்ள ஜாகிர் காருபள்ளி தாய் நியாய விலைக் கடையிலிருந்து பிரித்து வெங்கட்டாபுரம் கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடையைத் துவக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அனுமதியோடு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள் இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்முதலில் கேள்விக்குப் பதிலளித்த நமது மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதல் கேள்விக்கான பதிலே மிகவும் positive–ஆக, ‘செய்து தரப்படும்’ என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், அதற்காக அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு இன்னொரு கேள்வி. பொதுவாக தமிழ்நாடு முழுவதும் பகுதிநேர நியாய விலைக் கடைகள் துவக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் நிறைய எழுந்து கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே அரசு விதித்திருக்கிற நிபந்தனைகளின் அடிப்படையில், இருக்கக்கூடிய எல்லா கடைகளையும் அரசே முன் நின்று பிரித்து, பகுதிநேரக் கடைகளைத் தொடங்குவதற்கான திட்டத்தை முன்வைத்திருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2012 பிப்ரவரி 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்கள் எளிதாகப் பொருட்கள் வாங்குவதற்கு ஏதுவாக, பொது மக்கள் குடியிருப்பிற்கு அருகிலேயே நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. சாதாரண, ஏழையெளிய, பாமர மக்களுடைய தலைவியாக விளங்குகிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழையெளிய மக்களுக்காக எடுக்கின்ற எந்த ஒரு நடவடிக்கையாக இருந்தாலும், அதிலே மிகுந்த கவனத்துடன் செயல்படுகிறார்கள் என்பதனை இந்த நாடு அறியும். அந்த வகையிலே, எந்த ஒரு குடும்ப அட்டைதாரரும் அவரது குடும்ப அட்டைக்குப் பொருள்கள் பெற 1.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமாகச் செல்லாத வகையிலும், நியாய விலைக் கடைகளின் பொருளாதார நிலை பாதிக்காத வகையிலும், புதிய நியாய விலைக் கடைகளைத் திறக்க அனுமதி வழங்கப்படுகிறது.

ஊரகப் பகுதிகளைப் பொறுத்தவரையில், 800 குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும், 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும் முழுநேர நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட வேண்டும். நகரப் பகுதிகளைப் பொறுத்தவரையில், 800 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும், 1,000 குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும் முழுநேர நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட வேண்டும். பகுதிநேர நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரையில், ஊரக மற்றும் நகரப் பகுதிகளில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். மேற்கண்ட விதிகள் சரியாக இருக்கும்பட்சத்தில், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடைமுறைகளுக்குட்பட்டு பகுதிநேர நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு ஆணைகளைப் பிறப்பித்து வருகின்றனர். அதிக தூரம் உள்ள இடங்கள், மக்கள் எளிதில் சென்றுவர முடியாத பகுதிகள், மலைப் பகுதிகள் மற்றும் சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை எழக்கூடிய கிராமங்கள் போன்ற இடங்களில் நியாய விலைக் கடைகள் அமைப்பதற்கு வாடகையில்லாத கட்டடம் அளிக்க அப்பகுதி மக்கள் முன்வரும் நேர்வுகளில், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையுடன், மேற்கண்ட விதிகளைத் தளர்த்தி, பொது மக்களின் நலன் கருதி அப்பகுதிகளில் புதிய



2012 பிப்ரவரி 2]

பகுதிநேரக் கடைகள் அமைக்க அரசால் அனுமதி வழங்கப்படுகிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவரமாக பதில் சொல்லியிருக்கிறார்கள். இதற்குமேல் ஏதாவது கேள்வி உண்டா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதிக்குட்பட்ட மேல்வயலாமூரிலிருந்து அடுக்குப்பாசி கிராமம், கிட்டத்தட்ட 3½ கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. கடந்த காலங்களில் பல்வேறு முறை அதற்கான கருத்துரு அனுப்பப்பட்ட பிறகும், அரசாங்கத்தின் விதிகளின்படி, தாய்க் கடையில் இருக்க வேண்டிய 500 கார்டுகளுக்கு 26 கார்டுகள் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், கருத்துரு திரும்ப அனுப்பப்பட்டுள்ளது. இதுபோன்று 3½ கிலோ மீட்டர், 4 கிலோ மீட்டர் தூரம் அதிகமாக இருக்கக்கூடிய கிராமங்களுக்குச் சிறப்பு அனுமதி அளித்து அப்பகுதிகளில் நியாய விலைக் கடைகளை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு 1–6–2011 முதல் 31–12–2011 வரை திறக்கப்பட்ட பகுதிநேர நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை 289. மக்களுடைய நலனைக் கருதி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடி நடவடிக்கை எடுத்ததன்பேரில் இவ்வளவு கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன என்கிற நற்செய்தியை நம்முடைய மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய வினா ஆய்வு செய்யப்பட்டு, அதன்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 பிப்ரவரி 2

முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

**திரு. கோவி. சம்பத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் அரசியல் வாரிசாக, தமிழகத்தில் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும், திராவிடத்தின் திருவிளக்கு, தென்னகத்தின் ஒளி விளக்கு, கழக காவல் தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து, பணிவோடு வணங்குகிறேன்.

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதியில், வாணியம்பாடியைத் தவிர்த்து மற்ற பகுதிகளெல்லாம் மலைக் கிராமப் பகுதிகளாக இருக்கின்றன. அந்த மலைக் கிராமப் பகுதிகளிலே பகுதிநேரக் கடைகளைத் திறக்க கடந்த 4, 5 மாதங்களுக்கு முன்பாக கருத்துருக்கள் தயார் செய்யப்பட்டும், இன்றளவும் கடைகள் திறக்கப்படாமல் உள்ளன. குறிப்பாக, விஜிலாபுரம், வலையாம்பட்டு, இராணிப்பேட்டை, திருப்பத்தூர் ஒன்றியத்திலே ஆண்டல்வாடிநத்தம், ஜலகாம்பாறை போன்ற பகுதிகளிலே பகுதிநேரக் கடைகளைத் திறக்க கருத்துருக்கள் தயார் செய்யப்பட்டும், இன்றளவும் திறக்கப்படாமல் உள்ளன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகக் கடைகளைத் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய வினாவில், அவர் குறிப்பிட்டிருந்த அந்தப் பகுதிகளையெல்லாம் ஆய்வு செய்து, உரிய தகுதிகள் இருப்பின், உடனடியாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியோடு அங்கு புதிய கடைகள் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.



2012 பிப்ரவரி 2]

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில், சேடப்பட்டி ஒன்றியத்தில், எஸ். கோட்டைப்பட்டி கிராமத்தில் நியாய விலைக் கடை இயங்கி வருகிறது. அதற்கு 2 கிலோ மீட்டருக்குப் பக்கத்தில், தொட்டடம்பட்டி என்ற கிராமம் இருந்து வருகிறது. அங்கே 350 கார்டுகள் இருக்கின்றன. அங்கு பகுதிநேரக் கடையை ஆரம்பிக்க இந்த அரசு முன்வருமா என்பதை பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே 350 குடும்ப அட்டைகள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். 150 குடும்ப அட்டைகள் இருந்தாலே, பகுதிநேரக் கடை பிரித்துக் கொடுப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆனால், தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். அதாவது, பிரிக்கப்பட்டதற்குப் பின்னர், தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். அப்படியிருந்தால், மாவட்ட ஆட்சித் தலைவரே அதைப் பிரித்துக் கொடுப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனவே, அதுகுறித்து ஆய்வு செய்து, அதனடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**24—**

## தடுப்பணை

***3061—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, கோவிந்தபுரம்–சாத்தனூர் பகுதியில் வீரசோழன் ஆற்றில் கோவிந்தபுரம் அருகில் தடுப்பணை கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2012 பிப்ரவரி 2

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் தொகுதி, கோவிந்தபுரம்–சாத்தனூர் பகுதியில் வீரசோழன் ஆற்றில், கோவிந்தபுரம் அருகிலே தடுப்பணை கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்வியை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள்.

திருவிடைமருதூர் தொகுதி, கோவிந்தபுரம்–சாத்தனூர் பகுதியில் வீரசோழன் ஆற்றில், கோவிந்தபுரம் அருகில் தடுப்பணை கட்டுவதற்கு, வரும் நிதியாண்டில் பகுதி–2 திட்டப் பணிகளில், நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் இந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதியில், கோவிந்தபுரம்–சாத்தனூர் பகுதியில் வீரசோழன் ஆற்றுப் பகுதி உள்ளது. இதன்மூலம், 7 கிலோ மீட்டர் தூரத்தில், கோவிந்தபுரம், மருத்துவக்குடி, அவணியாபுரம், மஞ்சமல்லி, கிள்ளுக்குடி, சிந்தாமணி, உத்தமசோழபுரம், சாத்தனூர் ஆகிய கிராமங்களில் உள்ள 2 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயன்பெறுகின்றன. அந்த விவசாயிகள் பயன்பெறக்கூடிய வகையில், வீரசோழன் ஆற்றில், கோவிந்தபுரம் அருகே தடுப்பணை கட்டித் தரப்படுமா என்பதை பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே நீராதாரம் இருப்பின், அந்த அணையைக் கட்டுவதற்குண்டான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து, அது கட்டப்படும் என்பதை இந்த நேரத்திலே பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.



2012 பிப்ரவரி 2]

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடுப்பணையை இந்தக் கோடைக் காலத்திலேயே கட்டி, தூர் வாருகிற பணியும் அதோடு இணைத்துச் செய்து தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டிலே நிதியொதுக்கி, பணிகள் நடைபெறும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

முற்பகல் 10–35

**திரு. சு. ரவி:** மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து எனது வினாவினைக் கேட்கிறேன். அரக்கோணம் சட்டமன்றத் தொகுதி, சைனபுரம் கிராமத்திலுள்ள ஆயிரக்கணக்கான விவசாய மக்களின் நலன் கருதி, கொசஸ்தலை ஆற்றின் அருகில் தடுப்பணை அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிறைவேற்றப்படாமல் நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்து வருகிறது. எனவே, உடனடியாக, சைனபுரம் கிராமத்தின் அருகே தடுப்பணை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஆண்டிலே அந்தப் பணிகள் நடைபெறும் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார் அவர்கள்.

**திரு. எஸ். செந்தில்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருவெறும்பூர் தொகுதியின் பெரும்பாலான பகுதிகள், மழைக் காலங்களிலே வெள்ளத்தால் பெரிய அளவில் பாதிக்கப்படுகின்றன. அதனால், விவசாயிகளும், பொது மக்களும் பெரிய அளவில் பாதிக்கப்படுகின்றனர். குடியிருப்புப் பகுதிகளிலே வெள்ள நீர் சூழ்ந்து விடுகிறது. எனவே, கல்லணையிலிருந்து, புது ஆறு மற்றும் வெண்ணாறு கீழ்ப்பகுதியிலே, கீழ்ப்போக்கிகள் இரண்டு அமைந்திருக்கின்றன. அவை சரியாகச் சீர் செய்யப்படாமல், வெள்ள நீர் அதன் வழியே வெளியேற முடியாத நிலை இருக்கிறது. எனவே, அந்தக் கீழ்ப்போக்கிகளைச் சீர் செய்யவும், புதியதாக ஒரு கீழ்ப்போக்கி அமைக்கவும் அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட பகுதியில் பெரும்பள்ளம், ஏழெருமைப்பள்ளம் என்ற இரண்டு ஓடைகள் உள்ளன. பெரும்பாலும் மலைப்பகுதியாக, மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் இருக்கிற எங்களது தொகுதியில், மழைக் காலத்திலே பெய்கின்ற மழை நீர் அந்த ஓடைகளிலே சென்று வீணாகக் கடலிலே கலக்கிற நிகழ்வு இருந்து கொண்டிருக்கிறது. அந்த ஓடைகளிலே அணை கட்ட வேண்டுமென்று கடந்த முறை அமைச்சரிடத்திலே சொல்லிய நேரத்தில், அதற்கு ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு அணைகளைக் கட்டுவதற்கு ஒப்புதல் தந்து, அந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்கு முதலிலே நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, அந்த ஓடை நீண்ட தூரத்தில் இருக்கின்ற காரணத்தினால், எந்தெந்த இடங்களிலே அணையைக் கட்டினால் ஏதுவாக இருக்கும் என்று ஆய்வு செய்யும்





பணி தற்போது பொதுப் பணித் துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புவது, ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு அணை என்ற வீதத்தில் அந்த ஓடைகளின் குறுக்கே அணைகளைக் கட்டி, விவசாயத்தையே நம்பியிருக்கிற பகுதியிலே இருக்கிற மக்கள் விவசாயம் செய்வதற்கு ஏதுவாக, விவசாயத்தை மூலதனமாகக் கொண்டு வாழுகிற அந்த மக்களுக்கு அந்தப் பகுதியிலே உபரியாக வருகிற மழை நீரைத் தேக்கி விவசாயத்திற்குப் பயன்படுத்த வசதி செய்து கொடுப்பார்களேயானால், அந்த விவசாய மக்களுக்கு அது பெரிதும் உதவியாக இருக்கும். ஆகவே, ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிற அந்தப் பகுதியிலே ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்கு ஒன்று என்ற வீதத்திலே தடுப்பணைகள் கட்டிக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை நீரைச் சேமிக்க வேண்டும், தண்ணீரை வீணாக்கக் கூடாது என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன்படி, உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனையில் உள்ளது. மிகுதியான நீர் வந்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்டால் அதைத் தடுப்பதற்கு தடுப்பணைகள் கட்டித் தரப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் ஒரு வளமான மாவட்டம். பேச்சிப்பாறை தண்ணீர் வீணாகச் செல்கிறது, பெருஞ்சாணி, சிற்றாறு, தாமிரபரணி, பாலாறு ஆகிய ஆறுகளின் தண்ணீரெல்லாம் வீணாகக் கடலுக்குச் செல்கிறது. அதனால், தண்ணீர்ப் பஞ்சம் அதிகமாக இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே முட்டம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், நேற்று நீங்கள் பேசும்போது, உங்கள் மாவட்டத்திலே

[2012 பிப்ரவரி 2

ஒன்றுமே இல்லை என்று கூறினீர்கள். இன்றைக்கு, வளமான மாவட்டம் என்கிறீர்கள். (சிரிப்பு)

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** சொல்கிறேன். முட்டம் சிற்றூராட்சி, சைமன் காலனி சிற்றூராட்சி, ரீத்தாபுரம் பேரூராட்சி ஆகிய இடங்களிலே தண்ணீரே இல்லை. தடுப்பணை கட்டி அப்பகுதி மக்களுடைய தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ரொம்ப பரிதாபப்பட்டு கேட்கிறார், கொஞ்சம் உதவி பண்ணுங்கள்.

முற்பகல் 10–40

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வைகைச்செல்வன் அவர்கள்.

**டாக்டர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தால், கொண்ட கோலத்தால், வறுமையின் சீலத்தால், வாழும் மக்களுக்கு வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொண்டிருக்கும் உன்னதத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எம். நாகலாபுரம் மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, சுமார் 6 கோடி ரூபாய் செலவில் தடுப்பணை கட்டுவதற்கு ஆணை வழங்கிய, தலைதாழாச் சிங்கம், தன்மானத்தின் தங்கம், எங்கள் தங்கம், ஸ்ரீரங்கம் அம்மா அவர்களுக்கு நன்றியை இந்த நேரத்திலே தொகுதி மக்களின் சார்பாகத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் உள்ள குள்ளூர்சந்தை அணை, இருக்கன்குடி அணை, கோல்வார்பட்டி அணை ஆகியவற்றின் நீர்த்தேக்கத்தை, நீராதாரத்தைப் பெருக்குவதற்கு, தூர் வாருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2012 பிப்ரவரி 2]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனையில் உள்ளது. இந்த நிதியாண்டிலே அந்தப் பணிகள் நடைபெறும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட நெய்யாறு இடதுகரைக் கால்வாய்மூலம் கேரளாவிலிருந்து நெய்யாற்றங்கரை அணையிலிருந்து 1965 ஆம் ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டுவரை நமக்கு நீர் தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருந்தது. 2004–ல் பல காரணங்களுக்காக நீர் வருவது நிறுத்தப்பட்டது. அந்த நெய்யாற்றுத் தண்ணீரை நாம் திரும்பப்பெற பல முயற்சிகளை அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. அந்தவகையில் விவசாயிகளும், பொது மக்களும் தொடர்ந்து வைத்து வந்த கோரிக்கையின் அடிப்படையில், 2–12–2011 அன்று மாண்புமிகு கேரள முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதமும், நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதமும் நான் அனுப்பி இருந்தேன். பொதுப் பணித் துறைச் செயலாளர் மற்றும் தலைமைச் செயலாளர் அவர்களுக்கும் அந்தக் கடிதத்தை அனுப்பியிருந்தேன். 13–12–2011 அன்று நமது மேதகு தமிழக ஆளுநர் அவர்களிடமும் அந்தக் கடிதத்தைக் கொடுத்திருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** அதன் அடிப்படையில் 23–12–2011 அன்று நமது தமிழக அரசின் பொதுப் பணித் துறைச் செயலாளர் அவர்கள் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில், ஒப்பந்தம், தமிழகத்திற்கும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடிதங்கள் எழுதியதைப் பற்றியெல்லாம் நீங்கள் இங்கே பேசிக் கொண்டிருக்கக்கூடாது.

**திருமதி எஸ். விஜயதரணி:** அந்தக் கருத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

[2012 பிப்ரவரி 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** நமது அரசும், கேரள அரசும் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கின்றன. இரண்டு அரசின் அதிகாரிகளுமே 'ஒரு ஒப்பந்தம் தயார் செய்யும் நிலையில் உள்ளது' என்ற கருத்தைக் கூறியிருக்கிறார்கள். இந்தத் தண்ணீரைத் தமிழகத்திற்கு பெறுவது குறித்து நமது அரசும், கேரள அரசும் அதே கருத்தைத் தெரிவித்திருக்கின்றன. Technical discussion 6–5–2011 அன்று முடிவடைந்திருக்கிறது. அந்த அடிப்படையில் நீர் ஆதாரமே இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கும் என்னுடைய தொகுதி மக்களுக்கு இது பெரும் பயனுள்ளதாக இருக்கும் என்ற வகையில், இந்த நீரை விரைவாகப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும். நிறைய முயற்சிகளை நமது அரசு எடுத்திருப்பதால் நிச்சயமாக இதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த விவரங்களை என்னிடம் தந்தால் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பேரையூர் தாலுகா, சதுரகிரி மகாலிங்கம் கோயில் என்பது மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு கோயில். அந்தப் பகுதியிலே மழைக் காலங்களில் பெருக்கெடுத்தோடும் காட்டாற்று வெள்ளத்தைத் தடுக்கிற வகையில் டேராபாறை என்னும் அந்தப் பகுதியில் புதிய அணை கட்டினால் அந்தப் பகுதி விவசாயிகளுக்குப் பயனளிப்பதாக இருக்கும். எனவே, வாரி வாரி அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில், அந்த பேரையூர் தாலுகா விவசாயிகளை மனதில்கொண்டு, டேராபாறை என்னும் இடத்தில் ஒரு புதிய அணையைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



2012 பிப்ரவரி 2]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஆய்வு செய்து, நீராதாரம் இருப்பின் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் உள்ள பெரிய கண்மாய்களில் ஒன்றான சக்கரக்கோட்டை கண்மாயைத் தூர் வாருவதற்கும், அதனுடைய கரையைப் பலப்படுத்தக்கூடிய வகையிலே சுவர் எழுப்புவதற்கும் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு, இந்த நிதியாண்டிலேயே அந்தப் பணிகள் தொடங்க ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**25—**

### சுற்றுலாத் தலம்

***1446—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2012 பிப்ரவரி 2

அந்தியூர் தொகுதி, வரட்டுப்பள்ளம் அணைப் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

ஈரோடு மாவட்டம், அந்தியூர் தொகுதி, வரட்டுப்பள்ளம் அணை, இயற்கை எழில்மிகு சூழலில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அமையப் பெற்றுள்ளது. ஈரோட்டிலிருந்து 50 கிலோ மீட்டர் மற்றும் அந்தியூரிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அந்தியூர் தொகுதி, வரட்டுப்பள்ளம் அணைப் பகுதியில் சுற்றுலா அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூபாய் 50.40 இலட்சத்திற்கான கருத்துரு ஈரோடு மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. அதோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்காமலேயே, அவருடைய பகுதியிலே அந்தியூர்–கொள்ளேகால் சாலை மற்றும் குருநாத சுவாமி கோவில் சாலை ஆகிய சாலைகளின் மேம்பாட்டிற்காக ரூ.27 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் கேட்கப்பட்ட இந்த வசதிகளைச் செய்வதற்கு ஆய்வு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சியர் அவர்களுடைய கருத்துரு ஏற்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசில் வரும் நிதியாண்டில் சுற்றுலாத் துறை மூலமாக நிதியொதுக்கப்பட்டு, பணிகள் முடிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "Achievers never expose themselves, but their achievements expose them" என்று சொல்வார்கள். சாதனையாளர்கள் தங்களை எப்போதும் முன்னிலைப்படுத்திக்கொள்ள மாட்டார்கள்; ஆனால், அவர்கள் செய்த சாதனை அவர்களை முன்னிலைப்படுத்தும் என்ற கருத்திற்கேற்ப, ஒவ்வொரு துறையிலும் சாதனைகளைப் படைத்துக்கொண்டிருக்கும் எங்கள் தாய் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகின்றேன்.



2012 பிப்ரவரி 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதி மலைக் கிராமங்களை உள்ளடக்கிய தொகுதியாகும். அங்கு வாழும் மக்களில் பெரும்பாலோர் விவசாயத் தொழில் செய்து வருகின்றனர். அவர்களுக்கு எந்த ஒரு பொழுதுபோக்கு அம்சமும் இல்லை. மேலும் அவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ளதால், அவர்கள் சுற்றுலாத் தலங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் சுமார் 100 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய நிலையுள்ளது. எனவே அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். இதே கேள்வியை சுமார் எட்டு உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். எல்லா உறுப்பினர்களுக்கும் சேர்த்து, ஒரு கேள்விக்கு 5 நிமிடங்கள்தான் கொடுக்க முடியும். ஒரு கேள்விக்கு 10, 15 நிமிடங்கள் எடுத்துக்கொண்டால் நான் எப்படி கேள்வி நேரத்தை 11–00 மணிக்குள் முடிக்க முடியும்? தயவுசெய்து ஒத்துழைப்புக் கொடுங்கள். கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியாளரிடம் கருத்துரு கேட்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்கள். இந்த நிதியாண்டிலேயே இந்தப் பணியைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து விட்டேன். ஏற்கெனவே அந்தியூர் தொகுதி, வரட்டுப்பள்ளம் அணைப் பகுதியில் சுற்றுலா பயணிகளின் அடிப்படை வசதிகளை மேற்கொள்வது சம்பந்தமாக ரூ.50.40 இலட்சத்திற்கான கருத்துரு மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்டு விட்டது. அது ஆய்விலே இருக்கின்றது. வரும் நிதியாண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அதை நிறைவேற்றும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் சோழவந்தான் தொகுதிக்கு உட்பட்ட சாத்தையாறு அணை மற்றும் தரகலாச்சேரி அருவியை சுற்றுலாத் தலமாக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–50

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்குட்பட்ட சாத்தையாறு அணைப் பகுதியை சுற்றுலாத் தலமாக்குவதற்கும், அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும் மாவட்ட ஆட்சியர் மூலமாக கருத்துரு அனுப்பப்படும்பட்சத்திலே நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்து, சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக நிதி ஒதுக்கீடு செய்வதற்கு ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குன்னம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சாத்தனூர் கிராமத்தில் இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாக ஏற்பட்ட இயற்கை மாற்றத்தால் ஒரு மரம் கல் மரமாக மாறியிருக்கிறது, அது தொல்பொருள் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அப்பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டும். அதேபோன்று, அதனையொட்டி பெரம்பலூர் அருகிலே மயிலூற்று அருவி என்ற அருவி இருக்கிறது. அதேபோல அரியலூர் மாவட்டத்திலே கரைவெட்டி பறவைகள் சரணாலயம் இருக்கிறது. இராஜேந்திர சோழனால் கங்கைகொண்ட சோழபுரத்திலே ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட ஆலயம் இருக்கிறது. அது





தமிழக பொறியியல் திறமையின் உச்சபட்ச அடையாளமாகும். மேலும், பெரம்பலூருக்கு அருகிலே ஆற்காடு நவாப் அவர்களால் அமைக்கப்பட்ட ரஞ்சன்குடி கோட்டை இருக்கிறது. இங்கே திரைப்படங்கள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, இந்தப் பகுதிகளையெல்லாம் ஒருங்கிணைத்து ஒரு Tourism Circuit-ஆக, சுற்றுலா சுற்றுப் பாதையாக அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். குறிப்பாக, இது சென்னைக்கும் திருச்சிக்கும் இடையிலுள்ள சென்னை–திருச்சி நெடுஞ்சாலையிலே அமைந்திருக்கின்றது. திருச்சிக்கும் தஞ்சைக்கும் அருகில் அமைந்திருக்கிறது. எனவே, இந்தப் பகுதிகள் மேம்பட்டால் கிராமப்புறங்கள் சூழ்ந்திருக்கின்ற எங்களுடைய இரண்டு மாவட்டங்களிலும் பொருளாதார வசதி மேம்பட வாய்ப்பாக இருக்கும். எனவே, அமைச்சர் அவர்கள் நேரடியாக இங்கே ஒரு சுற்றுலாவை மேற்கொண்டு, அந்த இயற்கை இன்பத்தை உணர்ந்து இதை சுற்றுலா சுற்றுப் பாதையாக அமைக்க முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சார்ந்த அந்தப் பகுதியிலே, அதிகமான சுற்றுலாப் பயணிகள் வரக்கூடிய வாய்ப்புகள் பற்றியும், வரலாற்று புராதனக் கோயில்கள் இருப்பதைப் பற்றியும் மிக விரிவாகச் சொன்னார்கள். அவர்கள் சொன்னதுபோல, கரைவெட்டி பறவைகள் சரணாலயம் அமைப்பதற்காக ஏற்கெனவே ஆய்வுப் பணிகள் நடைபெற்று, 3.02 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வதற்கான ஆயத்தப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. அதைப்போல அவர்கள், கல் மரமானது பற்றியும், மற்ற பணிகள் பற்றியும், பல்வேறு இடங்களைப் பற்றியும் விவரமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை ஆய்வு செய்து மாவட்ட ஆட்சியர் மூலமாகக் கருத்துரு அனுப்பினால், நேரடியாக அங்கே வந்து பார்வையிட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக சுற்றுலாப் பயணிகள் வருவதற்கான ஆயத்தப் பணிகளைச் செய்ய முன்வரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

[2012 பிப்ரவரி 2

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை பகுதியிலே பிரசித்தி பெற்ற மனோரா சுற்றுலாத் தலம் உள்ளது. அரசு நிதியொதுக்கீடு செய்து அதனுடைய மேம்பாட்டிற்கு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பட்டுக்கோட்டை பகுதியை நாங்கள் ஆய்வு செய்ய வேண்டுமென்று அந்தப் பகுதியிலிருந்து எங்களுக்கு நிறைய கடிதங்கள் வரப்பெற்றுள்ளன. நேரடியாக வந்து ஆய்வு செய்து அதற்கு ஆவன செய்வோம் என்பதை இந்த நேரத்திலே தெளிவுபடுத்தி, தங்கள் பகுதிக்குப் பக்கத்திலே உள்ள மணமேல்குடி பகுதியில்கூட சுற்றுலாப் பயணிகள் வருவதற்காக இந்த நிதியாண்டிலே நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.

**திரு. டி. சுரேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மக்கள் தலைவர் கேப்டன் அவர்களை வணங்கி, எனது செங்கம் தொகுதிக்குட்பட்ட சாத்தனூர் அணை பராமரிப்பின்றி, நீண்ட வருடங்களாக இருக்கின்றது. அந்த சாத்தனூர் அணையைப் பராமரிக்க அரசு முன்வருமா என பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையைப் பொறுத்தவரை, மாவட்ட ஆட்சியரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 பிப்ரவரி 2]

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள திருமூர்த்தி அணைப் பகுதியானது, சுற்றுலாத் தலமாக்கப்படாமல் பல ஆண்டுகாலமாக உள்ளது. அந்தப் பகுதியை சுற்றுலாத் தலமாக்குவதற்கு உரிய நடவடிக்கையை மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம் ஆண்டிப்பாளையம் அணைப் பகுதியை சுற்றுலாத் தலமாக்கி, படகு வசதிகள் செய்திட ஏற்கெனவே மெகா டூரிசம் திட்டம் மூலமாக 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆய்விலே இருக்கின்றது. அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மடத்துக்குளத்திற்குட்பட்ட அந்தப் பகுதியிலே ஆய்வுகள் மேற்கொண்டு மாவட்ட ஆட்சியரிடமிருந்து கருத்துரு பெற்று ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுக்கு மனுக்கள் அனுப்பினால், உடனடியாக சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பதில் தெரிவிக்கின்ற அவரது நடைமுறைக்கு இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்கிறேன். சிதம்பரம் தொகுதியிலே ஏற்கெனவே செயல்பட்டு வந்த பரங்கிப்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட போட் கிளப் என்கிற சுற்றுலா மையம் இப்போது பழுதடைந்திருக்கிறது. அதேபோன்று, சாமியார்பேட்டை, வல்லம்படுகை ஆகிய கிராமங்களில் சுற்றுலா மையங்களை உருவாக்கித் தர வேண்டுமென்கிற கோரிக்கையை அமைச்சர் அவர்கள் பரிசீலித்து அதை நிறைவேற்றித் தருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

[2012 பிப்ரவரி 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அந்தப் பிச்சாவரம் படகுக் குழாம் பகுதிக்கு கடந்த 10 நாட்களுக்கு முன்பாக நேரடியாகச் சென்று ஆய்வு செய்ததில், படகுகள் மட்டுமே பழுதடைந்திருந்தன. படகுகள் குழாம் மிகச் சீராக நடைபெற்று வருகின்றது. ஆகவே, அவர்கள் சொன்னபடி, பரங்கிப்பேட்டை பகுதியைக்கூட சுற்றிப் பார்த்தபோது அங்கே படகுக் குழாம் அமைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. அதற்கான பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியரிடமிருந்து கருத்துரு பெற்று நிதி ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**26—**

## விடுதி

***42—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர் நல மாணவ, மாணவியர் விடுதிகளில் தங்கிப் பயில நிர்ணயிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதியதாக விடுதிகள் துவக்கும்போது அவ்விடுதிகளில் 50 எண்ணிக்கையில் மாணவர் அல்லது மாணவியர்



2012 பிப்ரவரி 2]

தங்கிப் பயிலக்கூடிய வகையில், தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன. ஆதி திராவிடர் நல விடுதிகளில் தங்கி கல்வி பயில்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்த மாணவ/மாணவியரிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் மற்றும் தேவையின் அடிப்படையில் அவ்வப்போது விடுதிகளில் மாணவ/மாணவியர் எண்ணிக்கை உயர்த்தப்பட்டு வருகிறது. 2011–2012 ஆம் ஆண்டில் அதிகப்படியான மாணவ/மாணவியரிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டதால் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆதி திராவிட மக்களின் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டு, விடுதிகளில் கூடுதலாக 1,500 மாணவ/மாணவியரைச் சேர்க்கும் வகையில் கல்லூரி விடுதிகளுக்கு 800 இடங்களையும், பள்ளி விடுதிகளுக்கு 700 இடங்களையும் கூடுதலாக ஏற்படுத்தி (மேசையைத் தட்டும் ஒலி) அரசாணை நிலை எண் 113, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 11–11–2011–ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தாயுள்ளம் கொண்ட தமிழ்நாட்டின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆதி திராவிட மக்களுக்காக பல்வேறு நலத் திட்டங்களை வழங்கி, சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், கிராமப்புறங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த ஆதி திராவிட பெற்றோர்களுடைய நலனைக் கருதி, ஆதி திராவிட மாணவ, மாணவியர் பள்ளிகளுக்குச் சென்று கல்வி பயிலுகின்ற நேரத்தில், அவர்களுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகளையெல்லாம் வழங்கி, உணவுக் கட்டணம், விடுதிகளிலே பயிலுகின்ற மாணவ, மாணவியருக்கு சிறு செலவினங்களுக்கான தொகை ஆகியவற்றை உயர்த்தி, அதுமட்டுமல்லாமல் பத்தாம் வகுப்பு, பதினொன்றாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கின்ற கிராமப்புற மாணவ, மாணவியரின் இடைநிற்றலைத் தவிர்க்க, கல்வி உதவித் தொகை இவற்றையெல்லாம் வழங்கி, கிராமப்புற மாணவ, மாணவியரை உயர் கல்வி படிக்க அனுப்பவேண்டும்

[2012 பிப்ரவரி 2

என்ற அளவிற்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி, அவர்களை வாழவைத்துக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆதி திராவிட மாணவ, மாணவியருடைய விடுதிகளில் 50 பேர் தங்குவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். அதைக் கூடுதலாக்கி, கிராமப்புறங்களில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஆதி திராவிட மாணவ, மாணவியர் அதிகமாக விடுதிகளிலே தங்கிப் பயில்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் 1,254 ஆதி திராவிடர் நல விடுதிகளும், 40 பழங்குடியினர் நல விடுதிகளும் இயங்கி வருகின்றன. இவ்விடுதிகளில் தங்கிப் பயின்று வரும் ஆதி திராவிட மாணவர்களின் எண்ணிக்கை பள்ளி விடுதிகள் 1,107, இவற்றில் 74,123 மாணவர்களும், கல்லூரி விடுதிகள் 114, இவற்றில் 10,827 மாணவ, மாணவியரும், ஐ.டி.ஐ. விடுதிகள் 19, இவற்றில் 1,384 மாணவர்களும், பாலிடெக்னிக் விடுதி 1, அதில் 50 மாணவ, மாணவியரும், சட்டக் கல்லூரி விடுதி 1, அதில் 50 மாணவ, மாணவியரும், பட்ட மேற்படிப்பு விடுதிகள் 12, இவற்றில் 702 மாணவ, மாணவியரும், மொத்தம் 1,254 விடுதிகளில் 87,136 மாணவ, மாணவியரும், பழங்குடியினர் மாணவர் விடுதி 40–ல் 2,072 மாணவ, மாணவியரும், ஆக மொத்தம் 1,294 விடுதிகளில் 89,208 மாணவ, மாணவியர் தங்கிப் பயின்று வருகிறார்கள்.

புதியதாக விடுதிகள் துவக்கும்போது, அவ்விடுதிகளில் 50 மாணவ, மாணவியர் தங்கிப் பயில்கின்ற வகையில் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன. மேலும், விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் கூடுதலாக 10 சதவிகிதம் அளவிற்கு அனுமதிக்க அந்தந்த மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. தேவையின் அடிப்படையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் விடுதிகளில் மாணவ, மாணவியரின் எண்ணிக்கை அவ்வப்போது அதிகரிக்கப்பட்டும் வருகிறது.



2012 பிப்ரவரி 2]

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தவுடன், ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்தவ ஆதி திராவிட மாணவர்கள் அதிக அளவில் விடுதிகளில் தங்கி கல்வி பயில 2011–2012 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் கூடுதலாக 1,500 பேரைச் சேர்க்கின்ற வகையில், மாணவ, மாணவியரின் எண்ணிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இவற்றில் கல்லூரி விடுதிகளுக்கு 800 இடங்களும், பள்ளி விடுதிகளுக்கு 700 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றிற்காக அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் நிதி உதவி பெற்றுவரும் தொண்டு நிறுவனங்கள் மூலமாக இயங்கிவரும் 36 விடுதிகளில் 5,438 மாணவ, மாணவியர் பயின்று வருகிறார்கள். மேலும் கடந்த ஆட்சிக் காலத்தில், 5 ஆண்டுகாலமாக எந்தவொரு விடுதியுமே maintenance செய்யப்படாமல் இருந்தது. இவற்றிற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் ஆதி திராவிட மாணவர்கள் மீது அதிக அக்கறை கொண்டு 83 கோடி ரூபாய் அளவிற்கு 1,059 விடுதிகளில் மராமத்துப் பணிகளைச் செய்வதற்காக அனுமதி வழங்கி, பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு கிராமப்புறங்களில் வாழும் ஏழையெளிய ஆதி திராவிட மக்களுடைய குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காக கடந்த முறை அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபோதும், தற்போது ஆட்சியில் இருக்கின்றபோதும் மாணவ, மாணவியர்களுக்கு விடுதிகளைப் புதியதாகக் கட்டிக் கொடுத்து, அவர்களை வாழவைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிகமாக மனுக்கள் வருகின்ற விடுதிகளிலாவது தேவைக்கேற்ப கூடுதலாக மாணவ, மாணவியரைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2012 பிப்ரவரி 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையின் அடிப்படையில் கூடுதலாக விண்ணப்பங்கள் வரின், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட அளப்பரிய நலப் பணிகளை ஆற்றி வருகிற ஆற்றல்மிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை, (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு கோடிக்கும் மேற்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பிலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நடப்பாண்டிலே மட்டும் 1,500 மாணவர்களுடைய இருக்கையை அதிகரித்திருக்கிறார்கள். எனினும், வளர்ந்து வரும் மக்கட் தொகைக்கேற்ப நடப்பாண்டிலே எந்த அளவிற்கு புதிய விடுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும், எவ்வளவு புதிய கூடுதல் இடங்களை உருவாக்க முடியும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இந்த ஆண்டு 25 புதிய விடுதிகளைத் தொடங்குவதற்கு அனுமதி அளித்துள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.



2012 பிப்ரவரி 2]

**27—**

## மருத்துவக் கருவிகள்

***2081—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருந்துறையில் சாலைப் போக்குவரத்து நிறுவன கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் மருத்துவக் கல்லூரியில் நரம்பியல் துறைக்கு சி.டி. ஸ்கேன் மற்றும் இ.இ.ஜி. கருவிகள் வழங்கவும், சிறப்பு அறுவை சிகிச்சை மருத்துவரை நியமிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுடைய பிள்ளைகள் மருத்துவர்களாக, பொறியாளர்களாக உருவாகவேண்டும் என்பதற்காக, போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்காக 1992–1993 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் குரோம்பேட்டை, பர்கூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் பலதொழில்நுட்பக் கல்லூரிகளும், 1984 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் அவர்களால் ஈரோட்டில் பொறியியல் கல்லூரியும், 1986 ஆம் ஆண்டு பெருந்துறையில் மருத்துவக் கல்லூரியும் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின்மூலம் தொடங்கப்பட்டு இதுவரை 6,742 பொறியாளர்களும், 1,072 மருத்துவர்களும் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள்.

பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேன் மற்றும் இ.இ.ஜி. உபகரணங்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. மேலும் 7 மருத்துவர்களைக்கொண்ட அறுவை சிகிச்சைப் பிரிவும் சிறப்பாக இயங்கி வருகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா

[2012 பிப்ரவரி 2

அவர்களின் பொற்கால ஆட்சியில் விலையில்லாத அரிசி தந்து மக்களின் பசிப் பிணியைப் போக்கியதுபோல, நோயுற்ற மக்களின் துயர் துடைக்க போர் முனையில் வீரர்களுக்கு மருத்துவப் பணியாற்றிய ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் போல, எப்பொழுதெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி தமிழகத்தில் அமைகின்றதோ அப்பொழுதெல்லாம் மக்கள் புதிய திட்டங்களைப் பெறுகின்றார்கள்.

அதுபோல தமிழக மக்களுக்காக விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் கொண்டுவந்து, தமிழக மக்களுடைய பிணியைப் போக்கி வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை விசுவாசத்துடன் பணிந்து வணங்குகிறேன். சாலைப் போக்குவரத்துத் துறை மூலமாகச் செயல்படும் பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையானது, சேலம்–கோயம்புத்தூரை இணைக்கின்ற நான்குவழி தேசிய நெடுஞ்சாலையிலே அமைந்திருக்கின்ற காரணத்தினாலே, விபத்துகள் ஏற்படுகின்றபோது உடலில் முதலிலே அடிபடக்கூடிய பகுதி தலைப்பகுதி என்பதாலே, தினமும் 200 நோயாளிகள் வருகின்றனர். ஆனால், தலை சம்பந்தமான பகுதியை ஆய்ந்து அறியும் சி.டி. ஸ்கேன் கருவி 5–10–2011 முதல் பழுதடைந்துள்ளது.

எனவே, நரம்பு சம்பந்தமான மருத்துவர்களை நியமிக்கவும், இருதயம் (கார்டியாலஜி) சம்பந்தமான மருத்துவர்களை நியமிக்கவும், அதுமட்டுமல்லாமல் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை இந்த மருத்துவமனையிலே செயல்படுத்தவும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் தலைமையிலான இந்த சிறப்பான அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே பழுதடைந்துள்ள சி.டி. ஸ்கேன் கருவி தற்போது சரிசெய்யப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகின்றது. மேலும் மருத்துவப் பணியிடங்கள் காலியாக இருப்பதாகச் சொன்னார்கள். பெருந்துறை மருத்துவமனையில் மருத்துவர் காலிப் பணியிடங்கள் குறித்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய



2012 பிப்ரவரி 2]

அரசால் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**28—**

## தரம் உயர்த்துதல்

***6211—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகளுடன் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கிராமப்புற மக்களின் நல்வாழ்வினைக் கருத்தில்கொண்டு, கடந்த மாதம் 20 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தொடங்கி வைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 38 ஆரம்ப சுகாதார நிலையங்களை, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்தி அனுமதியும் வழங்கியுள்ளார்கள்.

**விடை—**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கின்ற கள்ளிக்குடி பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி 30 படுக்கைகள் வசதியுடன் விரிவாக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விரைவில் கட்டுமானப் பணிகள் பொதுப் பணித் துறையின்மூலம் தொடங்கப்படவுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*[2012 பிப்ரவரி 2*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

*முற்பகல் 11–10*

**திரு. ம. முத்துராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏழு மாத காலத்தில் மக்களின் எண்ணங்களையெல்லாம் நிறைவேற்றுகிற வகையிலே தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக, என்னுடைய தொகுதிக்குட்பட்ட கள்ளிக்குடி 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கு அனுமதி வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எங்கள் தொகுதி மக்களின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம். இப்பகுதி சென்னை–கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் இருக்கிற காரணத்தினால், பல நேரங்களிலே விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு அங்கே வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றிய மக்கட்தொகை 68,263 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் கள்ளிக்குடி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. மேலும், கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் கூடக்கோவில் மற்றும் வில்லூர் ஆகிய ஊர்களிலும் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இன்றைக்கு அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திலே பிரசவ பின் கவனிப்பு அறை கட்டுவதற்கு ரூ.8.80 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவசர சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார். அது கண்டிப்பாகப் பரிசீலனை செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.*



*2012 பிப்ரவரி 2]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

**திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதி, சுந்தரபாண்டியபுரத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்போது 2 படுக்கைகள்தான் இருக்கின்றன. அதை 30 படுக்கைகளுடன் தரம் உயர்த்துவதற்கு அரசு ஆவன செய்யுமா? தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் வசதி பல ஆண்டுகளாக இல்லாத சூழ்நிலை இருந்து வருகிறது. அங்கிருந்து மக்கள் இதற்காக நெல்லைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதால், அங்கு சி.டி. ஸ்கேன் வசதியும் செய்து கொடுக்க முடியுமா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிமுறைகளின்படி ஒரு வட்டாரத்தில் ஒரு பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தைத்தான் மேம்படுத்த இயலும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற ஆரம்ப சுகாதார நிலையம் இந்த விதிக்கு உட்பட்டிருந்தால், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக உயர்த்த மாண்புமிகு அம்மா அவர்களது அரசு கனிவுடன் பரிசீலிக்கும். மேலும், தென்காசியிலே, சி.டி. ஸ்கேன் வசதி கேட்டிருக்கிறீர்கள். அது கண்டிப்பாகப் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No more sub-questions. *வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**29—**

### சொந்தக் கட்டடம்

***661—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

*மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2012 பிப்ரவரி 2

மேட்டுர் தொகுதி, மேட்டூரில் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துச் சமுதாயங்களைச் சேர்ந்த மக்களுக்கும் பாதுகாவலராகவும், நம்பிக்கை நட்சத்திரமாகவும் விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய பதிலைச் சொல்ல விழைகிறேன்.

வாடகைக் கட்டடங்களில் செயல்படும் அனைத்து விடுதிகளும் சொந்தக் கட்டடங்களில் இயங்கவேண்டும்; எந்த விடுதியும் வாடகைக் கட்டடத்திலே இயங்கக்கூடாது என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதன்பேரில், மொத்தமுள்ள 1,238 விடுதிகளில், 938 விடுதிகள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 300 விடுதிகளில் 148 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டும் பணி பொதுப் பணித் துறையின்மூலம் மேற்கொள்ளப்பட்டு, கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. 2011–2012 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதற்காக ரூ.36 கோடி நிதியொதுக்கீடு செய்துள்ளார்கள்.

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், நவப்பட்டி கிராமத்தில் வார்டு எண் 3, பிளாக் 4, டி.எஸ்.என் 2ஏ, 4,200 சதுர மீட்டர் பரப்பில் அரசுப் பள்ளி மாணவியர் விடுதி கட்ட நிலம் தேர்வு செய்யப்பட்டு, நில மாறுதல் முன்மொழிவுகள் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின்பேரில் நில நிருவாக ஆணையருக்கு அனுப்பப்பட்டு, நில நிருவாக ஆணையரின் பரிந்துரையின்பேரில் கடித எண் வி2/20810/2010 நாள் 12–11–2011–இல் வருவாய்த் துறை அரசுச் செயலருக்கு அனுப்பப்பட்டு, அரசின் உத்தரவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

அதைப்போலவே, மேட்டூர் வட்டம், நவப்பட்டி கிராமம், வார்டு எண் 3, பிளாக் 4, டி.எஸ்.என் 2ஏ, 4,200 சதுர மீட்டர் பரப்பளவில் அரசுக் கல்லூரி மாணவியர் விடுதி கட்ட நிலம் தேர்வு செய்யப்பட்டு, நில மாறுதல் முன்மொழிவுகள் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின்பேரில், நில நிருவாக ஆணையருக்கு



2012 பிப்ரவரி 2]

அனுப்பப்பட்டு, நில நிருவாக ஆணையரின் பரிந்துரையின்பேரில், வருவாய்த் துறை அரசுச் செயலருக்கு அனுப்பப்பட்டு, அரசின் உத்தரவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

மேட்டூர் வட்டம் மற்றும் கிராமம், வார்டு 'பி', பிளாக் 9, டி.எஸ்.என் 4/4–இல் அரசுக் கல்லூரி மாணவர் விடுதி கட்ட தகுந்த நிலம் 0.35 சென்ட் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடம் பாரதியார் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதால், பாரதியார் பல்கலைக்கழகத்தின் இசைவு கேட்கப்பட்டுள்ளது. மேட்டூர் வட்டாட்சியர் மற்றும் வருவாய்க் கோட்டாட்சியரிடமிருந்து முன் நுழைவு அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் மாற்று ஏற்பாடாக, விடுதி கட்ட விரைவான நடவடிக்கை மேற்கொள்ளும் விதமாக தகுதியான வேறு இடத்தைத் தேர்வு செய்ய மேட்டூர் வட்டாட்சியர் மற்றும் வருவாய்க் கோட்டாட்சியரிடமிருந்து அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

முற்பகல் 11–15

மேட்டூர் வட்டம், மேட்டூர் நகராட்சி, வார்டு–ஏ, பிளாக் 2ஜே, டி.எஸ்.என். 20–ல் 10,000 சதுர அடி பரப்பளவில் அரசுப் பள்ளி மாணவர்கள் விடுதி கட்ட தகுந்த நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்திற்கு சேலம் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் இசைவு கேட்கப்பட்டுள்ளது. மேட்டூர் வட்டாட்சியர் மற்றும் வருவாய்க் கோட்டாட்சியரிடமிருந்து முன் நுழைவு அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், மாற்று ஏற்பாடாக விடுதி கட்ட விரைவான நடவடிக்கை மேற்கொள்ளும் விதமாக, தகுதியான வேறு இடங்களைத் தேர்வு செய்ய மேட்டூர் வட்டாட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியரின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடுமையான நிதி நெருக்கடி இருந்தாலும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எல்லா துறைகளுக்கும் கோடி கோடிகளாக நலத் திட்டங்களை வழங்கும் அட்சய பாத்திரமாக விளங்குகின்றார்கள்.

[2012 பிப்ரவரி 2

குறிப்பாக, மாண்புமிகு அம்மா அவர்கள், அனைத்து விடுதிகளும் சொந்தக் கட்டடத்தில் இயங்க நிதியொதுக்கியும், இந்த வருடம் புதியதாக பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்களுக்கு 25 விடுதிகளும், சிறுபான்மையினருக்கு மூன்று விடுதிகளையும் ஆரம்பிக்க உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும் ஒவ்வொரு விடுதிகளிலும் 100 மாணவ, மாணவியரைச் சேர்ப்பதற்கும், தேவைப்பட்டால் மேலும் 10 சதவீதம் மாணவர்களைச் சேர்ப்பதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அப்படிப் பார்த்தால், சென்ற வருடங்களோடு நாம் ஒப்பிட்டுப் பார்த்தால், 25 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட விடுதிகள் 50 விடுதிகளுக்குச் சமமாகும். சிறுபான்மையின மக்களுக்காக அம்மா அவர்கள் அளித்துள்ள 3 விடுதிகள் 6 விடுதிகளுக்குச் சமமாகும். மேலும், விடுதியில் தங்கிப் படிக்கும் பள்ளி மாணவ, மாணவியருக்கு உதவித் தொகையை மாதம் ஒன்றுக்கு 450 ரூபாயிலிருந்து 650 ரூபாயாகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 550 ரூபாயிலிருந்து 750 ரூபாயாகவும் உயர்த்தி அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள். விடுதிகளை ஆய்வு செய்யும்போது, அங்கு தங்கும் மாணவ, மாணவியர் திருப்தியாக இருக்கின்றார்கள். உணவும் நன்றாக உள்ளது என்று அவர்கள் அம்மா அவர்களை மனதாரப் பாராட்டுகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், சிறப்பான மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு அம்மா அவர்கள் ஊக்கத் தொகை அளித்து ஊக்குவிக்கின்றார்கள். இத்தகைய நலத் திட்டங்களை அம்மா அவர்கள் அளித்ததற்கு இந்த நேரத்தில் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், மேட்டூர் மாணவர் விடுதி உட்பட, வாடகைக் கட்டடத்தில் இயங்கும் அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் மாண்புமிகு அம்மா அவர்களால் படிப்படியாகக் கட்டித் தரப்படும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமையையும், ஊழலையும் ஒழிக்கவந்த உத்தமத் தலைவர், ஏழை மக்களுக்காக தன் வாழ்க்கையை



2012 பிப்ரவரி 2]

அர்ப்பணித்துக்கொண்ட என் அன்புத் தலைவர் கேப்டன் அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழகம் முழுவதும் உள்ள அரசு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பள்ளி, கல்லூரி விடுதிகளில் வார்டன்கள், காவலர்கள் மற்றும் சமையலர்கள் பணியிடங்கள் காலியாக உள்ளன. குறிப்பாக, சேலம் மாவட்டத்திலே 27 பணியிடங்கள் காலியாக உள்ளன. வார்டன்கள் இல்லாத விடுதிகள் எப்படி இருக்கும் என்பது நம் அனைவருக்கும் தெரியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த காலிப் பணியிடங்களை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள், நீங்கள் கேட்ட கேள்வி மேட்டூர் தொகுதி பற்றியது கேள்வி, மேட்டூரில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது பற்றியது. கட்டடங்கள் கட்டப்படும் என்றுதான் அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்களே! மற்றவற்றிற்குத் தனிக் கேள்வி போடவும்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிக்கை அளித்தல்

### எதிர்க்கட்சித் தலைவர் திரு. விஜயகாந்த் மற்றும் தே.மு.தி.க. உறுப்பினர்கள் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கை அளித்தல். அவை உரிமைக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

***மாண்புமிகு திரு. ப. தனபால், (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை உரிமைக் குழுவின் சார்பில், திரு. விஜயகாந்த், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தே.மு.தி.க. உறுப்பினர்கள் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த குழுவின் அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

அச்சிட்ட அறிக்கையினை அளிக்க போதிய கால அவகாசம் இன்மையால், தட்டச்சு செய்யப்பட்ட அறிக்கையின் 5 நகல்கள் சட்டமன்ற நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. அறிக்கை பின்னர் அச்சிடப்பட்டு, பேரவை உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–20

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.





## 4. அரசினர் தீர்மானங்கள்

### (அ) ஆளுநர் உரை மீதான விவாதத்தைத் தள்ளிவைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். பேரவை விதி 13 (2)—ன்கீழ் ஆளுநர் உரை மீதான விவாதத்தைத் தள்ளி வைத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சட்டமன்றப் பேரவை விதி 13 (2)—ன்கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தள்ளி வைத்து, இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற, திரு. விஜயகாந்த், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மற்றும் தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கையை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 229 (ஆ)—ன்கீழ் இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

### (ஆ) திரு. விஜயகாந்த், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தே.மு.தி.க. உறுப்பினர்கள் மீதான உரிமை மீறல் பிரச்சினையில் அவை உரிமைக் குழு அளித்த பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

[2012 பிப்ரவரி 2

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திரு. விஜயகாந்த், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மற்றும் தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்து, இன்று (2–2–2012) பேரவையில் வைக்கப்பட்ட அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 229 (ஈ)–ன்கீழ் இப்பேரவை ஏற்றுக்கொள்கிறது"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. *(குறுக்கீடுகள்)*

இல்லை, இல்லை. நான் பேசுகிறேன், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா? Please sit down. *(குறுக்கீடுகள்)* Please sit down. அவையினுடைய மரபுப்படி பேரவைத் தலைவர் எழுந்து நிற்கும்போது உறுப்பினர்கள் அனைவரும் உட்கார வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரியும். நான் நிற்கும்போது நீங்கள் நின்றால், அது சரியான மரபாகாது. இந்தச் செயலை நான் அனுமதிக்க முடியாது. *(குறுக்கீடுகள்)* நீங்கள் குறுக்கே, குறுக்கே பேசிக்கொண்டிருந்தால், நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். முதலில் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உரிமைக் குழுவினுடைய தலைவர் அவர்கள் ஓர் அறிக்கையை அவைக்கு அளித்திருக்கிறார்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தீர்மானத்தை அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த பின்னர் அது அவையினுடைய சொத்தாகிறது. அதிலே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் கருத்து சொல்ல உரிமை உண்டு. அவை உரிமைக் குழு முடிவு எடுக்கிறது. அந்த முடிவு



2012 பிப்ரவரி 2] [திரு. ச. இராமச்சந்திரன்]

இந்த அவையிலே பேரவை முன்னவர் மூலமாகத் தீர்மானமாக வருகிறது. தீர்மானம் என்று வந்தவுடன் அது இந்த அவையினுடைய சொத்தாகிறது. இந்த அவையினுடைய சொத்து என்கிறபொழுது அதிலே அனைவரும் தங்களுடைய கருத்துகளைச் சொல்வதற்கு உரிமை உண்டு. அதை ஏன் இல்லை என்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை உரிமைக் குழு என்பது ஒரு தனிக் குழு. All party representation including opposition parties is there in that Committee. அந்தக் குழுவில் உறுப்பினர்கள் கருத்துச் சொல்லி, அதன் பிறகுதான் அந்தக் குழுவினுடைய அறிக்கை இங்கே வைக்கப்படுகிறது. *(குறுக்கீடுகள்)*

இன்று மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்து, அவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி திரு. விஜயகாந்த், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இந்தச் சட்டமன்றக் கூட்டத்திலும், அடுத்த சட்டமன்றக் கூட்டத்திலும் இன்றிலிருந்து தொடர்ந்து 10 நாட்கள் வரை அவை நடவடிக்கைகளிலிருந்து நீக்கம் செய்யப்படுகிறார். இக்காலத்தில் திரு. விஜயகாந்த் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையிலும், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலும் வழங்கப்பட்டுள்ள எந்தவிதமான ஆதாயத்தையும், ஊதியத்தையும், சலுகைகளையும், தகுதிகளையும் பெற முடியாது. *(குறுக்கீடுகள்)*

1–2–2012 அன்று அவைக்கு வந்திருந்து அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்த தே.மு.தி.க. சட்டமன்ற உறுப்பினர்கள், தங்களது பதவியை, உரிமையை வருங்காலங்களில் முறைகேடாகப் பயன்படுத்தாமல் இருக்க வேண்டுமென்ற உத்தரவாதத்துடன், அவர்களை மன்னித்து, இனி பேரவையின் கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும் காப்பதற்கு உறுதுணையாக இருந்து, இதுபோன்ற சூழ்நிலை திரும்பவும் எழாது பார்த்துக்கொள்ள வேண்டும். தற்போது அவர்கள்மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல், மேற்கொண்டு இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டால் கடுமையான தண்டனைக்கு ஆட்படவேண்டியிருக்கும் என்ற எச்சரிக்கையுடன் அவர்கள் மீதான உரிமை மீறல் பிரச்சினை இத்துடன் விட்டுவிடப்படுகிறது. *(குறுக்கீடுகள்)*

*(தேசிய முற்போக்கு திராவிடக் கழக, திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) மற்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

[2012 பிப்ரவரி 2

முற்பகல் 11–25

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். இன்று 14 உறுப்பினர்கள் விவாதத்தில் பேச உள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது உரையினை சுருக்கமாக முடித்துக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள். (குறுக்கீடுகள்)

லாபியில் சத்தம் போடுபவர்களை வெளியேற்ற அவைக் காவலர்கள் நடவடிக்கை எடுக்கவும்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகின்றேன். ஆண்டு கிடந்த தமிழினம் பின்னர் மாண்டு முடித்த நிலை மாற்ற ஆர்ப்பரித்து எழுந்து அற்புத ஆட்சி வழங்கும் அருமருந்து அன்னையே, சந்தியா தாய் தமிழ் மண்ணிற்கு அளித்த சத்தியத் தாயே, அரசியல் ஆலமரமே, அறிவுசார் பெட்டகமே, அநீதி அறுக்கும் கூர் வாளே, (மேசையைத் தட்டும் ஒலி) புனிதத் தலைவராம் புரட்சித் தலைவர் வழிவந்த புண்ணியத் தலைவியே, ஈழத் தமிழனின் இன்னல் துடைக்க நடுவண் அரசின் நயவஞ்சகக் கோட்டையைத் தகர்த்து, சட்டமன்றத்திலே சரித்திரத் தீர்மானம் கொண்டு வந்த 21 ஆம் நூற்றாண்டின் ஜான்சி ராணியே, கச்சத் தீவை மீட்டுச் சேர்க்க கருத்து வாளோடு களம் காணும் இன்றைய தலைமுறையின் பிஸ்மார்க்கே, இரண்டாவது வல்லபாய் பட்டேலே, முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் மூடு மந்திரக்காரர்களின் வஞ்சகம் தடுக்க பென்னி குயிக் மணி மண்டபத்திற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கிய நவீன சாணக்கியரே, அணையின் பாதுகாப்பை உரிமைப்பட்டவருக்கே தரவேண்டும் என்று உலகுக்கே உயர் பாடம் நடத்தி உழவுசெய் மக்களின் உள்ளம் பூரிக்க வைத்திருக்கும் நதி நீர்ச் சட்டங்களின் நாயகியே, சுனாமி தாக்குதலால் சுருண்ட மக்களின் சோகங்களை உடனே தீர்க்க வீரியத் தென்றலாய் நீங்கள் வீசி உழைத்த விதம் கண்டு கடல் நீரும் பின்வாங்கியது அம்மா! காவியம் பாடி உலகமே வணங்கியது.



2012 பிப்ரவரி 2] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

'தானே' புயலில் பாதிக்கப்பட்டோருக்குத் தானே உதவும் தாயாக ஓடிச் சென்று, உள்ளம் கசிந்து, கசியாத ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டித் தரும் காவியத் திருவுருவே, நீதிபதி நிலத்தையே அபகரித்த அராஜகப் பேர்வழிகளிடமிருந்து நிலத்தை மீட்டு நீதிபதிக்கே திருப்பித் தந்து நேர்மையை நிலைநாட்டிய நீதியின் காவல் தெய்வமே, எதிர்பாராத துயரங்களால் இன்னல்படும் ஏழைகளின் கண்ணில் ஊறும் நீர், ஆம், கண்ணீர் கன்னங்களில் உருளும் முன்பே கைதொட்டுத் துடைத்து, "உங்களைக் கையேந்த விடமாட்டேன் நான்" எனக் கனிவோடு உறுதி தந்து, கவலைகளைப் போக்கும் காருண்ய தேவதையே அம்மா, இமைப் பொழுதும் சோராமல் 24 மணி நேரமும் மக்களுக்காக உழைக்கும் மாதரசியே, பொது வாழ்வில் உங்கள் அர்ப்பணிப்பை எண்ணிப் பார்த்தால் உள்ளம் உருகுதம்மா, என் கண்களும் கசியுதம்மா!

எங்களையெல்லாம் பெறாமல் பெற்றெடுத்த பெருந்தெய்வத் தாயே, அம்மா, நீங்கள் வாழும் காலத்தில் நாங்களும் வாழ்வது இப்பிறவிப் பெருமை. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சாதாரண மாணவனாய் கழகக் கொடி பிடித்த என்னை வளர்த்தீர்கள் தாயே, வாழ்வளித்தீர்கள் தாயே, வார்த்தெடுத்தீர்கள் தாயே, எனக்கு வழி காட்டினீர்கள் தாயே, எளியோன் எனக்கு யாதுமாகி நின்ற தாயே! வாழும் ஒவ்வொரு நொடியிலும் நான் வணங்கும் அன்னையே. இரண்டாம் முறை சட்டமன்ற உறுப்பினராக்கி, மாவட்டக் கழகத்தின் செயலாளரும் ஆக்கி, பெருமைமிகு ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை வழிமொழிந்து பேசிடும் வாய்ப்பை எளியோன் எனக்குத் தந்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குக் கோடானுகோடி நன்றிகளைப் பாத மலர்களிலே பணிந்து சமர்ப்பித்து என் உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, கடந்த 7 மாதங்களிலே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக துறைதோறும் ஆய்வுகளை நடத்தி, தமிழ்நாடு எத்தகைய வளர்ச்சியைப் பெற வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் கனவு கண்டாரோ, தமிழ்நாடு எத்தகைய முன்னேற்றத்தை அடைய வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் எண்ணம் கொண்டாரோ, அந்தக் கனவை நனவாக்கக்கூடிய வகையிலே, பலதரப்பட்ட மக்களும் பாராட்டுகின்ற வகையிலே ஆளுநர் உரை

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2012 பிப்ரவரி 2

அமைந்துள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது. ஆளுநர் உரையிலே முத்தான, சத்தான பல அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருப்பதை ஆன்றோர்களும், சான்றோர்களும், சக உறுப்பினர்களும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்த நான்காவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படி நடவடிக்கை மேற்கொள்வதுடன், அது குறித்த செயல் அறிக்கை அடுத்த கூட்டத் தொடரிலே வைக்கப்படும் என்ற உன்னதமான அறிவிப்பு, சமூகப் பாதுகாப்பை உறுதி செய்யக்கூடிய வகையிலே விலையில்லா அரிசி வழங்கிக் கொண்டிருக்கின்ற அரசை ஆளுநர் உரை பாராட்டுவதுடன், இன்றைக்கு ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களும், பொருளாதார மேம்பாட்டிலே சம வாய்ப்பு பெறக்கூடிய வகையிலே கடைக்கோடியில் இருக்கக்கூடிய கிராமத்து ஏழைப் பெண்மணிக்கும் நம்பிக்கையை ஏற்படுத்தும் மக்கள் நலத் திட்டங்கள், கடைக்கோடியில் இருக்கக்கூடிய ஏழைப் பெண்மணிகூட, ஒரு குடும்பத் தலைவிகூட, நம்மாலும் பொருளாதாரத்திலே உயர முடியும் என்ற நம்பிக்கையை உருவாக்கக்கூடிய வகையிலே அவர்களுக்கு விலையில்லாமல் கறவைப் பசுக்கள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் கொடுப்பது போன்ற திட்டங்களை ஆளுநர் உரை பாராட்டியிருக்கின்றது.

முற்பகல் 11–30

பொது வினியோகத் திட்டத்தின்கீழ் அரிசி பெறத் தகுதியுடைய அத்துணைக் குடும்பங்களுக்கும் மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறிகளை விலையில்லாமல் வழங்குகின்ற திட்டம் சீராகச் செயல்படுவதை ஆளுநர் உரை பாராட்டியிருக்கின்றது. மாணவர்களுக்கு மடிக் கணினி வழங்குகின்ற திட்டத்தை ஆளுநர் உரை பாராட்டியிருக்கின்றது. அண்டை மாநிலங்களுடன் இணக்கமான உறவைப் பேணுதல், தமிழகத்திலே 5 ஆண்டுகளுக்குப் பின்னாலே தற்பொழுது அமைதியை நிலைநாட்டி, சட்டம்–ஒழுங்கை நிலைநாட்டி, அபகரிப்பு நிலங்கள் எல்லாம் மீட்கப்படுகின்ற அருமையான நடவடிக்கைகள் மட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் 12–வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே நம்முடைய அம்மா அவர்களுடைய அரசு 1,85,000 கோடி ரூபாயை திட்டப் பணிகளுக்குச் செலவிடத் திட்டமிட்டுள்ளது என்பது பாராட்டுக்குரியது, போற்றுதலுக்குரியது, பெருமைக்குரியது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தொகையானது



2012 பிப்ரவரி 2] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

11–வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே செலவிடப்பட்ட 85,000 கோடி ரூபாயைவிட இரண்டு மடங்கு அதிகமானதாகும் என்பதை எண்ணுகின்றபொழுது, எவ்வளவு வேகத்திலே அரசு முனைப்போடு சென்றுகொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க முடிகின்றது. இந்த உயர் இலக்கு தமிழ்நாட்டை மீண்டும் துரிதமான வளர்ச்சிப் பாதையிலே கொண்டு செல்லும் என்பதிலே ஐயமில்லை.

'தானே' புயலிலே பாதிக்கப்பட்ட கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 1,000 கோடி ரூபாய் செலவிலே ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டப்படும் என்ற மகத்தான திட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு வீடு இழந்த, வழியிழந்த, வாழ்விழந்த அந்த மக்களுடைய உள்ளங்களிலே நம்பிக்கையை விதைத்திருக்கிறது, தாயே!

அதுமட்டுமல்ல தாயே! ஒரு சிறப்பு நேர்வாக, நிலைப் பயிர்களான, முந்திரி, பலா, தென்னை போன்ற விவசாயிகளுக்கான நிரந்தர மறுசீரமைப்பு நடவடிக்கைகள் எல்லாம் இன்றைக்குத் தொடங்கப்படும் என்ற அற்புதமான அறிவிப்பு அந்த மக்களுக்கு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கின்றது, தாயே! கிராமப்புற வறுமை ஒழிப்பு மட்டுமின்றி, நகர்ப்புற வறுமை ஒழிப்புக்காக ஒவ்வொரு குடும்பத்தையும் அடிப்படையாகக் கொண்ட, ஒருங்கிணைந்த புதிய திட்டம் வரவு–செலவுத் திட்டத்திலே அறிவிக்கப்படும் என்ற அறிவிப்பு நகர்ப்புற ஏழைகளிடத்திலே வரவேற்பைப் பெற்றிருக்கிறது, தாயே!

இளைஞர்களை வேலைவாய்ப்பு பெறும் தகுதியுடையவர்களாக உருவாக்குவதற்காக, இளைஞர்களை புதிய தொழில் முனைவோராக ஊக்கப்படுத்துவதற்காக, அவர்களை உற்சாகப்படுத்துவதற்காக வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்காக இருமுனை நடவடிக்கைகள், ஒருங்கிணைந்த திறன் வளர்ச்சிப் பயிற்சிகள், அந்தத் திறன் வளர்ச்சிப் பயிற்சிகள் எப்படி அமைய வேண்டுமென்பதை ஆளுநர் உரை செதுக்கியிருக்கின்றது, தாயே! பயிற்சி மையங்களைத் தேர்ந்தெடுத்தல், பயிற்சி மையங்களைக் கண்காணித்தல், பயிற்சியைப் பெற்றதற்குப் பின்னாலே வேலைவாய்ப்பை அந்த இளைஞர்கள் பெறுகின்றவரையில் அவர்களை முறையாகக் கண்காணித்தல் என இப்படி வகை வகையான திட்டங்களை வாரி வழங்கியிருக்கிறீர்கள், தாயே!

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2012 பிப்ரவரி 2

விவசாய உற்பத்தியைப் பெருக்க இரண்டாம் பசுமைப் புரட்சி; உணவு தானிய உற்பத்தி கடந்த ஆண்டிலே 75.95 இலட்சம் டன் அளவில் இருந்ததை, அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்கு பின்னாலே, முதல் முறையாக 100 இலட்சம் டன் அளவைத் (மேசையைத் தட்டும் ஒலி) தாண்டும் என்கின்ற உயர்ந்த இலக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக்கு பெருமை சேர்க்கின்ற விஷயமாகும் என்பதை நான் பெருமையோடு இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

கால்நடை பராமரிப்புத் துறையின் வளர்ச்சிக்காக எத்தனையோ விரிவாக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பால் உற்பத்தியைப் பெருக்க வெண்மைப் புரட்சி, மீன் வளத் துறையிலே ஆழ்கடல் மீன் பிடிப்பை ஊக்குவித்தல், பதனிடும் வசதிகள், மீன்பிடித் துறைமுகங்கள், நகர்ப்புறத்திலே திடக்கழிவு மேலாண்மை, திருப்பூர் சாயக்கழிவுப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு; இப்படிப் பல திட்டங்கள்.

புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த கால ஆட்சியிலே Software என்று சொல்லக்கூடிய மென்பொருள் உற்பத்தியிலே மிக அதிக முதலீட்டைப் பெற்று, உயர்ந்த நிலையிலே அம்மா அவர்கள் அந்தத் துறையை முன்னேற்றிக் காட்டினார்கள். இப்பொழுது Hardware துறையிலே, அதாவது வன்பொருள் உற்பத்தியிலே அதிக முதலீட்டை ஈர்ப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, அரசுக்கு ஆலோசனை அளிக்க வல்லுநர் குழு அமைக்கப்படும் என்ற அறிவிப்பு, Hardware துறையிலே ஈடுபட்டுள்ளவர்களுக்கு உற்சாகம் அளிக்கக்கூடிய உன்னதமான அறிவிப்பு ஆகின்றது, தாயே!

மின் உற்பத்தியிலே, அடுத்த இரண்டு ஆண்டுகளிலே 4,074 மெகா வாட் அளவிற்கு கூடுதல் மின்சாரம் கிடைக்கும் வகையிலே புதிய திட்டங்கள் செயல்படத் தொடங்கும் என்ற அறிவிப்பு, (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த கால ஆட்சி இருளிலே விட்டுச்சென்ற தமிழகத்தை ஒளியேற்றம் செய்ய வகை செய்கிறது, தாயே!

கல்வித் துறையிலே கல்விப் புரட்சிக்காக 33,681 ஆசிரியர் பணியிடங்கள், 16,549 பகுதிநேர ஆசிரியர்கள், நியமனம், 5,000 ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் நடப்பாண்டிலே அனுமதிக்கப்பட்டுள்ளன என்ற நல்ல செய்தி, கல்வித் துறையிலே இந்தக் கழக அரசு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகின்றது, தாயே!



2012 பிப்ரவரி 2] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

முற்பகல் 11–35

அதுமட்டுமல்ல, இன்றைக்கு கடைக்கோடியில் இருக்கக்கூடிய 1.34 கோடி குடும்பங்கள் பயன்பெறுகின்ற வகையிலே விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. பச்சிளம் குழந்தை சிகிச்சை உட்பட 1,016 சிகிச்சை முறைகளுக்கும், 113 தொடர் சிகிச்சை முறைகளுக்கும், 23 நோய் அறிதல் கண்டுபிடிப்பு முறைகளுக்கும் வழிவகை செய்யக்கூடிய வகையிலே முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், பயனாளி ஆண்டுக்கு ரூ. 1 இலட்சம் வீதம் 4 ஆண்டுகளுக்கு ரூ.4 இலட்சம் பெறக்கூடிய வகையிலே வழிவகை செய்யப்பட்டுள்ளது. இன்னும் சில குறிப்பிட்ட சிகிச்சைகளுக்கு வருடத்திற்கு ரூ.1.50 இலட்சம் பெறவும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது, தாயே! ஏழைத் தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு மகப்பேறு உதவித் தொகையாக ரூ.12,000/–ஐ உயர்த்திக் கொடுத்திருப்பது ஏழைத் தாய்மார்களினுடைய கண்ணீரை மகப்பேறு காலத்திலே துடைப்பதாக அமைந்திருக்கின்றது, தாயே!

உழவர் பாதுகாப்புத் திட்டம், சூரிய மின் வசதிகொண்ட பசுமை வீடுகள் கட்டுகின்ற திட்டம், குக்கிராமங்களை முன்னேற்ற 'தாய்' திட்டம், போக்குவரத்து வசதிக்காக 3,000 புதிய பேருந்துகள், 1,432 பழைய பேருந்துகளுக்கு மறு கட்டுமானம், சென்னையிலே போக்குவரத்து நெரிசலை எதிர்கொள்வதற்காக 'மோனா ரெயில்' திட்டம் என எண்ணிலடங்காத் திட்டங்களை எண்ணிப்பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டங்களையெல்லாம் எண்ணித்தான் இன்றைக்கு மக்கள் துதிபாடிக் கொண்டிருக்கிறார்கள்.

"கன்றின் குரலும், கன்னித் தமிழும்
சொல்லும் வார்த்தை அம்மா, அம்மா,

கருணை தேடி அலையும் உயிர்கள்
உருகும் வார்த்தை அம்மா, அம்மா,

எந்த மனதில் பாசம் உண்டோ,
அந்த மனதில் அம்மா, அம்மா,

ஏழைக் கனவை நினைவு ஆக்க
இறைவன் தந்தான் அம்மா, அம்மா"

என்று இன்றைக்கு மக்கள் அம்மாவை எண்ணி, இந்த ஆட்சியைத் துதிபாடிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [*2012 பிப்ரவரி 2*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நம்முடைய இந்தியாவிலே, அரசியல் தலைவர்கள் பலர் இருக்கிறார்கள். எல்லோருக்கும் ஆட்சி நடத்துகின்ற வாய்ப்பு கிடைப்பதில்லை. வாய்ப்பு கிடைத்த அத்தனைபேரும் அந்த வாய்ப்பிலே சோபிப்பது இல்லை. ஒன்றிரண்டு தலைவர்கள், ஒன்றிரண்டு திட்டங்களுக்காக, ஒருசில காலகட்டங்களிலே எடுத்த நிர்வாக முடிவுகளுக்காக நினைவுகூரப்படுகிறார்கள். ஓரிரு தலைவர்கள், ஒருசில மனிதாபிமான செயல்களுக்காக நினைவுகூர்ந்து பேசப்படுவதும் உண்டு. ஆனால், இந்திய அரசியலிலே இந்தியத் துணைக் கண்டத்திலே, சுதந்திர இந்தியாவிலே, சிறந்த நிர்வாகியாக, மாபெரும் மனிதாபிமானியாக, சிறந்த மதிநுட்பம் வாய்ந்தவராக, சிறந்த அரசியல் விவேகியாக, சிறந்த தீர்க்கதரிசியாக, சிறந்த இராஜதந்திரியாக எல்லாவற்றிற்கும் மேலாக, தன் நிழலிலே நிற்கின்ற 6 கோடி தமிழ் மக்களைக் காக்கின்றவராக, காப்பவராக, (மேசையைத் தட்டும் ஒலி) ஏன், பகைவருக்கும் அருளும் தாயாக நிற்கின்ற இத்துணை சிறப்புகளையும் தன்னகத்தே கொண்ட, எல்லா திட்டங்களுக்காகவும், எல்லாத் தரப்பு மக்களாலும், எல்லா காலகட்டங்களிலும் பேசப்படுகின்ற ஒப்புயர்வற்ற ஒரே பெரும் தலைவி, நம்முடைய அம்மாதான் என்பதை இந்த பெருமைமிக்க அவையிலே நான் பெருமையோடு பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மண்ணில் அவதரித்த மாதவம் அம்மா நீங்கள்! அமெரிக்காவினுடைய தேசப் பிதா என்று அழைக்கப்படுகின்ற, மூன்றாவது ஜனாதிபதி, தாமஸ் ஜெஃபர்சன்,* "A single good Government becomes a blessing to the whole earth" *என்று சொல்கிறார். அதாவது, உலகின் ஏதாவது ஒரு மூலையிலே நடக்கும் உன்னத ஆட்சி ஒட்டுமொத்தப் பூமிப் பந்தின் உயர்ந்த ஆசீர்வாதமாகிறது என்று சொல்கிறார். அப்படிப்பட்ட உன்னதமான, நேர்மையான, நியாயமான ஆட்சியைத் தமிழகத்திலே தந்துகொண்டிருப்பவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள். ஆனால் இன்றைக்கு இந்த உன்னதமான ஆட்சியைக்கூட சிலர் வழக்கமாகக் குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சிலர் புதிதாகக் குறை சொல்ல இப்பொழுது கிளம்பியிருக்கிறார்கள்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். கற்பூரப் பாத்தி கட்டி, அத்தர், புனுகு, ஜவ்வாது உரமிட்டு, பன்னீரைத் தண்ணீராய்ப் பாய்ச்சினாலும் கருவேல மரம், கருவேல மரமாகுமே தவிர, சந்தன மரமாய் மணம் வீசப்போவது இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)*



*2012 பிப்ரவரி 2*] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழுதைப் படைகள் என்றும் களத்திலே வென்றது இல்லை. இந்த போன்சாய் மரங்கள் யாருக்கும் நிழல் தரப்போவது இல்லை. சுவர்க் கோழிகள் கூவி பொழுது விடியப் போவது இல்லை. திரைப்படத்திலே வரும் தீபாவளித் துப்பாக்கிகள் ஒருபோதும் தீவிரவாதத்தை ஒடுக்குவது இல்லை என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் அன்போடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

*முற்பகல் 11–40*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவினுடைய முதல் பெண் டாக்டர், தமிழகத்தைச் சார்ந்த, அதுவும் எங்கள் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி ஆவார்கள். அவர்கள் தேசப் பிதா மகாத்மா காந்தியடிகளுக்கு அரை நூற்றாண்டுகளுக்கு முன்னரே, எண்ணக் குமுறலோடு, ஏக்கத்தோடு ஒரு கடிதத்தை எழுதினார். அந்தக் கடிதத்தினுடைய சில வரிகளை நான் இந்த அவையிலே வாசிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். "இன்றைய சமுதாயத்திலே முன்னேறவும், கல்வி அறிவு பெறவும், உள்ளத்தையும், உடலையும் முன்னேற்றவும், எண்ணிய எண்ணத்தை வெளியிடவும், பெண்களுக்குப் போதிய வசதிகள் இந்த நாட்டிலே கிடைப்பதாக இல்லை. இவற்றைக் களைவதற்கு மகாத்மா காந்தியடிகள், ஏதாவது ஒரு வழிவகை செய்ய வேண்டும்" என்று தேசப் பிதாவிற்கு அன்றைக்கே ஏக்கத்தோடு, எண்ணக் குமுறலோடு இந்தியாவினுடைய முதல் பெண் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார். அரை நூற்றாண்டுக்கு முன்னர், இந்தியாவினுடைய முதல் டாக்டர் பெண்மணிக்கு ஏற்பட்ட எண்ணக் குமுறல்களை, அந்த ஏக்கத்தைப் போக்குகின்ற வண்ணமாக, இன்றைக்கு பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக ஆட்சி நடத்தக்கூடிய முதலமைச்சர் அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு பெண் கல்வியை ஊக்குவிக்கக்கூடிய வகையிலே, அவர்களுடைய உடலையும், உள்ளத்தையும் தூய்மைப்படுத்துகின்ற வகையிலே, திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது.*

*பத்தாம் வகுப்பு படித்த பெண்களுக்கு திருமணத்தின்போது 25,000 ரூபாய் பணமும், தாலிக்கு நான்கு கிராமம் தங்கமும்,*

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2012 பிப்ரவரி 2

பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு படித்த பெண்களுக்கு 50,000 ரூபாய் பணமும், தாலிக்கு நான்கு கிராம் தங்கமும், (மேசையைத் தட்டும் ஒலி) பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் போன்றவற்றையெல்லாம் பெண்களுக்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். பெற்று, பாசப்பட்ட பிள்ளைகளிலே, எந்தப் பிள்ளைக்கு ஆட்சிக் கட்டில் தரலாம் என்று, ஆலாய்ப் பறந்துகொண்டிருக்கின்ற அப்பாக்கள் இருக்கின்ற இந்த நாட்டிலே, யாராலோ பெற்று வீசப்பட்ட பிள்ளைக்கு, அரசுத் தொட்டில் அமைத்துக் கொடுத்திட்ட அதிசயத்தை நிகழ்த்திய அற்புத அம்மா நீங்கள்! (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் சொல்லப்போனால், கிராமப்புற ஏழைப் பெண்களுக்கு, அதுவும் கிராமத்தில் இருக்கக்கூடிய ஏழை வளரிளம் பெண்களுக்கு, அவர்களுடைய உடலைத் தூய்மைப்படுத்துவதற்காக, அவர்களுடைய சுகாதாரத்தை நினைத்து அவர்களுடைய உடலும், உள்ளமும் தூய்மையாக இருக்க வேண்டுமென்பதற்காக, அவர்களுக்கு Sanitary Napkins வழங்கப்படும் என்ற மகத்தான திட்டத்தை இன்றைக்கு பெண்கள், குறிப்பாக பெண் மருத்துவர்கள் வியந்து போற்றுகிறார்கள். கடைக்கோடியில் இருக்கக்கூடிய, கிராமத்தில் இருக்கக்கூடிய வளரிளம் பெண்களுடைய சுகாதார சீர்கேட்டையெல்லாம் சிந்தித்துப் பார்க்கின்ற அளவுக்கு, எப்படி அம்மா அவர்கள் இப்படிப்பட்ட உன்னதமான திட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று கேட்கின்றபோது, அதுதான் தாயின் பரிவு, அதுதான் அம்மாவின் அக்கறை, அதுதான் இந்தத் தாயின் கனிவு என்பதை நாங்கள் பெருமையோடு சொல்லிக் கொண்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு மட்டுமல்ல, கடந்தகால ஆட்சியிலே பெண்களைப் பெருமைப்படுத்துகின்ற வண்ணமாக, பெண் கமாண்டோக்களைக் கொடுத்தது இந்தியாவிலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அதேபோல், மகளிர் காவல் நிலையங்களைக் கொடுத்தது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதையும் இந்த அவைக்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒற்றை உறுப்பினர் கட்சியாக இருந்து, இன்றைக்கு 29 உறுப்பினர்களுடன் பிரதான எதிர்க்கட்சி அந்தஸ்தை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருணையால் எட்டியிருக்கக்கூடிய கட்சியினுடைய தலைவர்,



2012 பிப்ரவரி 2] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

இன்றைக்கு அபாரமான கண்டுபிடிப்பை வெளியிட்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கண்டுபிடிப்பு என்னவென்று சொன்னால், "பேரவைக்கு வருகைதந்த ஆளுநர்தான் புதியவர், உவந்து அளித்த பேருரை பழையது" எனக் கூறியிருக்கிறார். நான் அன்போடு சொல்லிக்கொள்வேன். ஆளுநர் உவந்து அளித்த உரையை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் நிதானத்தோடு படித்திருந்தால் இதில் இடம் பெற்றுள்ள ஏராளமான புதிய திட்டங்களை அவர் தெரிந்து கொண்டிருக்க முடியும்.

உடனடியாகச் செய்ய வேண்டிய செயல்கள் ஒருபுறம், தொலைநோக்குப் பார்வையோடு செய்ய வேண்டிய திட்டங்கள் ஒருபுறம். இன்றைக்கு இந்த இரண்டிற்கும் சம அளவிலே முக்கியத்துவத்தைக் கொடுத்து, அறிவார்ந்த முறையிலே தயாரிக்கப்பட்ட ஆளுநர் உரை, இந்த அரசினுடைய எண்ணங்களை வெளிப்படுத்துகின்ற கண்ணாடியாகும். இதற்கு ஒரு சிறிய உதாரணத்தை நான் சொல்லவேண்டுமென்றால் ஆளுநர் உரையிலே 7 ஆம் பக்கத்திலே, "ஜனவரி 15 ஆம் தேதி இரவு சேப்பாக்கத்தில் உள்ள எழிலகத்தில் ஏற்பட்ட தீ விபத்தின் விளைவாக, தீயணைப்பு வீரர் ஒருவர் இறந்ததோடு மட்டுமல்லாமல், அலுவலர்கள் சிலருக்கும் கடும் காயம் ஏற்பட்டது. இதுபோன்ற பேரிடர் இனிவருங்காலத்தில் நிகழாது தவிர்க்கும் வகையில், பணிபுரிபவர்களுடைய பாதுகாப்பினை உறுதி செய்திட, அரசு அலுவலகங்கள் செயல்படும் அனைத்துத் தொன்மையான கட்டடங்களினுடைய கட்டமைப்பு உறுதித் தன்மையை மதிப்பீடு செய்ய, உடனடியாக வல்லுநர் குழு அமைக்கப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது மாண்புமிகு அம்மா அவர்களுடைய சிறந்த நிர்வாகத்திற்கு உதாரணம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேநேரத்தில், மருத்துவமனைக்கு விரைந்து சென்று, தாய் உள்ளத்தோடு பெண் அதிகாரி ப்ரியா உள்ளிட்டோரைச் சந்தித்து, ஆறுதல் அளித்து, மருத்துவச் செலவை அரசே ஏற்கும் என்று அறிவித்த அறிவிப்பு, அம்மா அவர்களின் மனிதநேயத்தைக் காட்டுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அதோடுமட்டுமல்ல, அதே நிகழ்ச்சியின்போது தீரத்துடன் போராடிய அலுவலர்களுக்கு, வீரதீர செயலுக்கான அண்ணா பதக்கத்தை உடனடியாக வழங்கியது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய சிந்தனையைக் காட்டுகின்றது என்பதை நான் அன்போடு இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [*2012 பிப்ரவரி 2*

*முற்பகல் 11–45*

'தொலைநோக்குத் திட்டங்கள், *2025*' என்ற தலைப்பின்கீழே உள்கட்டமைப்புக்கான திட்டங்கள் ஏராளம், தாராளம் என்பதை நான் இந்த அவையிலே குறிப்பிடுகின்றேன். பொதுவாகவே, இன்றைக்கு வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகள் என உலகம் இரண்டு கூறுகளாகப் பிரிந்து கிடக்கின்றது. வளரும் நாடுகள் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. ஒரு மாநிலம் அடிப்படை உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்தாமல், அது எதிர்பார்க்கின்ற வளர்ச்சியை நிச்சயமாக அடைய முடியாது. அந்தப் பேருண்மையை, தான் ஒரு சிறந்த நிருவாகி என்ற காரணத்தினால் உணர்ந்த எங்களுடைய இதய தெய்வம் அம்மா அவர்கள், ஆளுநர் உரை பக்கம் *12*–லே, "முக்கியமான உள்கட்டமைப்புத் திட்டங்களைக் கண்டறிந்து முன்னுரிமைப்படுத்துதல், உடனே ஒப்புதல் அளித்தல், விரைந்து நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றை வழிநடத்தக்கூடிய தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தினைத் தோற்றுவிப்பதற்கான சட்டமுன்வடிவு, வரக்கூடிய வரவு–செலவுத் திட்டக் கூட்டத் தொடரின்போது அறிமுகப்படுத்தப்படும்" என்ற அற்புதமான அறிவிப்பை அளித்துள்ளார்கள். அவ்வாறு அறிவித்ததோடு மட்டுமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத்தைப்போல வெறும் அறிவிப்பாக, வாய் வார்த்தையாக, ஜாலங்களாக விட்டுவிட்டுச் செல்லாமல், அதைத் தொடர்ந்து, "முக்கியமான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஊக்கம் அளிக்கும் வகையிலே உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி என்று ஒன்று தனியாக இந்த அரசாலே ஏற்படுத்தப்படும். இந்த வகையில், திட்டச் செயலாக்கத்தில் அரசு மற்றும் தனியார் நிதி ஆதாரங்களை ஒருங்கிணைக்க அரசு–தனியார் பங்களிப்புக் கொள்கை ஒன்றை இந்த அரசு விரைவில் வெளியிடும்" என்று அறிவிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டங்களையெல்லாம் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் சினிமாவில்கூட சிந்தித்திருக்கமாட்டார். அப்படிப்பட்ட திட்டங்களை அள்ளித் தருகின்ற அம்மாவாக எங்களுடைய அம்மா இருந்துகொண்டிருக்கிறார்.

"அண்ணாந்து பார்க்கின்ற மாளிகை கட்டி, அதன் அருகினில் ஓலைக் குடிசை கட்டி, பொன்னான உலகென்று பெயருமிட்டால், இந்த பூமி சிரிக்கும், அந்த சாமி சிரிக்கும்" என்று சொல்வார்கள். அவர்களுடைய சிந்தனையின் வீச்சாக, ஆளுநர் உரையின் *15, 16* ஆம் பக்கங்களிலே வறுமை குறித்து அம்மா அவர்களுடைய கவலை வெளிப்படுகின்றது. "ஒவ்வொரு குடும்பத்தையும் அடிப்படையாகக் கொண்டு திட்டங்களைச் செயல்படுத்தும் புதிய அணுகுமுறை நகர்ப்புற வறுமை நிலையைப் போக்க ஒருங்கிணைந்த திட்டம்" என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக, இப்படிப்பட்ட திட்டங்களைக் கொடுத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*2012 பிப்ரவரி 2*] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

இறுதியாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரிலே வருடந்தோறும் திருவிழா வரும். நடைபெறுகின்ற திருவிழாவிலே திடீரென கடைகளெல்லாம் முளைக்கும். கடைகள் முளைக்கின்றபோது பஞ்சு மிட்டாயும் கிடைக்கும், பலூன்களும் கிடைக்கும். அந்த பலவண்ண பலூன்கள் வானத்திலே பறக்கும். பறக்கின்ற பலூன்களைப் பார்த்தால் கொஞ்சம் பரவசமாகவும் இருக்கும். கத்துக்குட்டிக் குழந்தைகளெல்லாம் கை தட்டி ஆர்ப்பரிக்கும், சிரிக்கும். தன் உருவத்திற்கும், பறக்கும் உயரத்திற்கும் காரணம் உள்ளே இருக்கின்ற காற்று என்பதை மறந்து அந்த பலூன் கர்வம் கொண்டதாம். அதுபோல இன்றைக்கு அரசியல் வானிலே பல வண்ணங்களிலே பலூன்கள் உயரே பறந்து கொண்டிருக்கின்றன. இந்த பலூன்களுக்கு உருவத்தையும், பறக்கின்ற உயரத்தையும் கொடுத்தது உள்ளே இருக்கும் அம்மா என்ற ஆதர்சனக் காற்றாகும். *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்த அடிப்படைக் காரணமான ஆதர்சனக் காற்றை அலட்சியப்படுத்தினால் உங்கள் நிலை என்னவாகும் என்பதை, பலூன்களே நீங்கள் உணர வேண்டும். உங்கள் உயரம் குறைந்து, உருக்குலைந்து, உருவம் மறைந்து *(மேசையைத் தட்டும் ஒலி)* கிழிந்து குப்பை மேட்டிலே நீங்கள் குவிந்துவிடுவீர்கள் என நான் உங்களை எச்சரிக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகவத் கீதையிலும் இந்த பலூன் கதையைச் சொல்லியிருக்கின்றார்கள்.

"ஈஸ்வரோ விக்ரமி தன்வீ மேதாவி விக்ரம கிரமஹ
அனுத்தமோ துராதர்ஷ கிரதக்ஞ கிருதிராத் மவான்"

என்று சொல்லியிருக்கிறார்கள். என்னவென்றால், அடுத்து என்ன செய்ய வேண்டுமென்று தெளிவாகத் தெரிந்த, உறுதியான ஆட்சியாளருடைய நிழலிலே வளர்ந்துவிட்டு, நன்றியில்லாமல் இருந்தால், அந்த ஆட்சியாளரின் கட்டுப்பாட்டில் கண் அசைவுக்குக்

காத்திருக்கும் நாட்டு மக்களே அந்தத் துரோகிகளை அழித்துவிடுவார்கள் என்று பகவத் கீதையிலே சொல்லப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாக ஒன்றைச் சொல்லி முடிக்கின்றேன். எதிரிகளை எதிர்த்துக்கூட இன்முகத்தோடு படை நடத்தும் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், துரோகிகளை மட்டும் தூள் தூளாக்காமல் ஒருபோதும் விடமாட்டார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தின் வழியே மமதை கொண்டோருக்குச் சொல்லி உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், இருக்கையில் இல்லை. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

*முற்பகல் 11–50*

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, கன்னிப் பேச்சாளராக நின்று என் தொகுதியின் சார்பில் குறைகளையும், ஆளுநர் உரையின்மீது என் கருத்துகளையும் எடுத்துச் சொல்வதற்கான ஒரு பொன்னான வாய்ப்பை, ஏழையெளிய குடும்பத்தில் பிறந்த எனக்கும் அளித்த எங்கள் இயக்கத்தினுடைய தலைவர், தமிழகத்தின் முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எந்த நிலையிலும் எங்களை இயக்குகிற, தமிழகத்தின் வருங்காலம், எங்கள் உயிருக்கும் மேலான தலைவர், சட்டமன்றக் கட்சித் தலைவர் அண்ணன் தளபதி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் பணியாற்றி என்னை ஆற்றுவித்த முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. கோ.சி. மணி அவர்களுக்கும், துணை நின்ற முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர்கள் திரு. இராமலிங்கம் அவர்களுக்கும், அண்ணன் திரு. ரவிச்சந்திரன் அவர்களுக்கும், கூட்டணித் தலைவர்களாக இருந்து பாடுபட்ட கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும் பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் சார்பாக இந்த அவையில் என்னுடைய மனமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றியை உங்கள் சார்பாகச் சொல்லுங்கள். நான் பேரவைத் தலைவர், என் சார்பில் சொல்லக்கூடாது.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் எந்த நிலையிலிருந்து இந்த அவையில் பேசினாலும், தங்கள் மூலமாகத்தான் அந்தக் கருத்துகள் வெளிப்படும். நீங்கள் அனுமதித்தால் பேசமுடியும், இல்லையென்றால் தடுக்கப்படும் என்பதை உணர்ந்தவன் என்ற முறையில் கன்னிப் பேச்சாகப் பேச இருக்கிற எனக்கு அருள்கூர்ந்து கருணைகாட்டி குறுக்கீடுகள் இல்லாமல் நேரத்தை சற்றுக் கூடுதலாகவே தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். காரணம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் குறுக்கீடு வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரணம் எனக்கு முன்னதாகப் பேச தாங்கள் அழைத்த நபர் அவையில் இல்லை. எனவே, நான் பேசலாம் என்கிறபோது, அருள்கூர்ந்து அந்த நேரத்தையும் எனக்கே பங்கிட்டுக்கொடுத்தால் இன்னும் எனது கருத்துகளை வலுப்படுத்த அது வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் பணிவோடு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் உள்ள பல்வேறு செய்திகள் ஆளுங்கட்சியால் பாராட்டப்பட்டதோடு, பல்வேறு செய்திகள் எதிர்க்கட்சிகளால் குறைகளாகக் கூறப்பட்ட சம்பவங்களும் இந்த அவையில் அரங்கேறின. முன்னதாகப் பேசிய மாமன்ற உறுப்பினர் பல்வேறு பாராட்டுகளை, அரசின் அறிவிப்புகளை, நடக்கவிருக்கிற செயல்பாடுகளை எல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நீங்கள் சபாநாயகராகப் பொறுப்பேற்றபோது, “திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் உங்களை வரவேற்கிறேன். இந்த அரசுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்” என்று ஒரு பண்பட்ட ஜனநாயகத் தலைவராக இந்த அவையிலே உரையாற்றிய எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் அண்ணன் தளபதி திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுடைய பெருந்தன்மையால், (மேசையைத் தட்டும் ஒலி) வழிகாட்டுதலால்

கட்டுப்பட்டு நடக்கிற நாங்கள், நிச்சயமாக உங்களுடைய அறிவுறுத்தலுக்கும் கட்டுப்பட்டு இந்த அவையில் நடப்போம் என்ற உத்தரவாதத்தை மீண்டும் அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில் பக்கம் 11–ல், "தாய்மொழி வளர்ச்சிக்காகவும், தமிழர்களின் தொன்மையான பண்பாட்டைப் பாதுகாக்கவும்..." என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தாய்மொழி வளர்ச்சி என்பது எல்லோரும் விரும்பக்கூடியது. நாம் பேசுகிற மொழியை தாய்மொழி என்று சொல்வதற்குக் காரணமே தாயைவிட மேலாக மதிப்பது நம்முடைய மொழியை; அதுதான் நம்முடைய விழியும்கூட. இப்பக்கத்தில் இருந்தாலும், அப்பக்கத்தில் இருந்தாலும் தாய்மொழிக்கு ஓர் ஆபத்து என்றால், தடந்தோள் தட்டி வீதிக்கு வருகிற தோழர்கள், வீரர்கள் இந்தத் தமிழகத்தில் உள்ளவர்கள். ஆனாலும், "தாய்மொழி வளர்ச்சிக்காக, தமிழ் மொழி வளர்ச்சிக்காக" என்று குறிப்பிட்டிருக்கிற அந்தப் பத்தியில் 'செம்மொழி' என்ற ஒரு வார்த்தை இடம்பெறாமலேயே இந்த அரசு அச்சிட்டு இருக்கிறதே அதற்கு ஏதேனும் உள்நோக்கம் உண்டா என்ற ஐயப்பாடு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காரணம், மகாத்மா காந்தி அவர்கள் இறக்கும்போது சொன்னாராம், "எனக்கு ஒரு மனக்குறை உண்டு, தமிழ் மொழியைப் பயிலாமலே நான் இறப்பதை எனது மனக்குறையாகக் கருதுகிறேன்" என்று; தேசப் பிதாவால் பாராட்டப்பட்ட, புகழப்பட்ட தாய்மொழி தமிழ், செம்மொழி என்ற அந்தஸ்தோடு மத்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிற நிலையிலும், இந்த அரசு ஆளுநர் உரையில் தமிழ் மொழி என்றுதான் குறிப்பிடுகிறதே தவிர, செம்மொழி என்று குறிப்பிடாமல் இருப்பது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வருத்தத்தை அளிக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். உள்ளபடியே இந்த அரசு தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பாடுபடுமேயானால், தமிழாய்வு மையம் எங்கே, செம்மொழிப் பூங்கா என்று இருந்த அந்தப் பெயர்ப் பலகை எங்கே, அண்ணா நூலகக் கட்டடம் எங்கே என்ற ஐயப்பாடும் தமிழ்நாட்டு மக்களிடத்தில் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் அவையில் நான் பணிவோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதைப்போல, நம்முடைய கடற்கரைச் சாலையில் இருக்கக்கூடிய இராணி மேரி கல்லூரி. முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்தின் முதல்வராக இருந்தபோது, இலட்சக்கணக்கில் நிதி ஒதுக்கி அந்த இராணி மேரி கல்லூரியில் உள்ள கட்டடத்திற்கு 'கலைஞர் மாளிகை' என்ற பெயரும் அங்கு சூட்டப்பட்டிருந்தது. ஆட்சி மாறியது, கலைஞர் என்ற அந்த வார்த்தையில் 'ஞர்' என்ற எழுத்துகளை நீக்கிவிட்டு, இன்று 'கலை மாளிகை'யாக இருக்கிறது. மாற்றம் வந்திருக்கலாம்; எத்தனை கலைகள் தமிழகத்தில் இருந்தாலும். கலை என்றாலும், கலைஞர் என்றாலும், டாக்டர் கலைஞரைத்தான் குறிக்கும் என்பது, (மேசையைத் தட்டும் ஒலி) பெயர் மாறிய பிறகும் தமிழ்நாட்டு மக்களுக்குப் புலனாகிறது என்பதை இந்த அவையிலே நான் பணிவோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11–55

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று ஒன்று உண்டு. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் சாலை வசதி, குடிதண்ணீர் வசதி, சுகாதார வசதி, மின்சார வசதி, நூலக வசதி, விளையாட்டு மைதானம், சிறுவர் பூங்கா என்று இலட்சக்கணக்கில் நிதி ஒதுக்கி, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை கடந்த அரசு கொண்டு வந்து செயல்படுத்தியது. அன்றைக்கு எதிர் வரிசையிலிருந்த அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதிகளிலும் அந்தப் பணிகள் நடைபெற்றன. அந்தப் பணிகளுக்கெல்லாம் அதிகமான முறையில் அக்கறை எடுத்து, அந்தத் திட்டங்களைத் தீட்டி வழிநடத்தியவர்தான் தமிழகத்தின் முன்னாள் துணை முதலமைச்சர் அண்ணன் டாக்டர் தளபதி அவர்கள்.

இந்த நேரத்திலே நான் தெரிவிப்பது, ஆளுநர் உரையில், பக்கம் 31 மற்றும் 32–இல் தரப்பட்டிருக்கிற செய்திகளின் அடிப்படையில், "கிராமப்புறங்களின் அடிப்படை வசதிகளையும், உள்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்த Tamil Nadu Village Habitation Improvement Scheme - THAI" என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக, போக்குவரத்து வாகன அதிகாரிகள் தமிழ்நாடு என்பதற்கு T.N. என்று குறிப்பிடுவார்கள். ஆனால், Tamil Nadu Village Habitation Improvement Scheme என்று குறிப்பிடுவது, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை மாற்றி 'தாய்' என்ற பெயரில் வர வேண்டுமென்பதற்காகவே அமைக்கப்பட்ட பெயரா என்ற ஐயப்பாடும் சட்டமன்ற

உறுப்பினராகிய என்னுடைய மனதில் எழுந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் பணிவோடு நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதைப்போலத்தான், பெரும் பிரச்சினையாகப் பேசப்பட்டது 'தானே' புயல். 'தானே' புயல், தானே போயிருந்தால், தமிழகத்தில் தொல்லை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாய்' திட்டம் என்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட திட்டம். 'தாய்' திட்டத்திற்கும், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த மாநிலத்திலும் இல்லாமல், குக்கிராமங்கள், எங்கு 10 வீடுகள் இருக்கின்றனவோ, சாலை வசதி இல்லையோ அவற்றுக்கெல்லாம் சாலை வசதியும், பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரும் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், மின்சார வசதியும் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பெரிய கிராமத்திற்கு என்னென்ன அடிப்படை வசதிகள் வேண்டுமோ, அவை அனைத்தும் கொடுக்கப்பட வேண்டுமென்பதற்காக இந்தியத் துணைக் கண்டத்தில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த புதிய திட்டம்தான் இந்த 'தாய்' திட்டம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் ஒரு விளக்கம் கேட்கிறார்; அந்த விளக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமா, இல்லையா? (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிரோடு இருப்பவர்கள் பெயரை வைக்கக்கூடாது என்பது அரசின் விதிமுறை. அப்படியிருக்கிறபொழுது இராணி மேரி கல்லூரி அரங்கத்திற்கு கலைஞரின் பெயரை வைப்பது என்பது தவறான ஒன்று. கல்லூரி நிருவாகமே அந்தப் பெயரை





மாற்றியிருக்கிறது. மேலும், இன்னொரு தகவல். ஏற்கெனவே உங்கள் தலைவரின் பெயரை வைக்க வேண்டும் என்ற காரணத்திற்காக, திருச்சி மாவட்டத்திலே ஐம்பதாண்டு நினைவு மண்டபத்திற்கு உங்களுடைய தலைவர் கருணாநிதியின் பெயரை வைத்தீர்கள். அதோடு மட்டுமல்ல, காமராஜர் அவர்கள் பெயரிலும் ஒரு கல்லூரி அமைத்து, கருணாநிதி பெயரிலும் அமைத்து, உங்களுடைய தலைவர் பெயர் வரவேண்டுமென்பதற்காக காமராஜர் பெயரையும் நீங்கள் வைத்தீர்கள். ஆனால், இந்த நேர்வில் இராணி மேரி கல்லூரி நிருவாகம் எடுத்த முடிவு அது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள். (குறுக்கீடு) திரு. ஜெ. அன்பழகன், உங்களுடைய கட்சி உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள் நடுவில் பேசக்கூடாது. இதை அனுமதிக்க முடியாது.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையிலே சொல்லப்படுகிற கருத்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், நீங்கள் அவையை விட்டு வெளியேற வேண்டுமென்று விருப்பப்பட்டால், அதுதான் உங்கள் விருப்பம் என்றால், அதை நிறைவேற்ற நான் தயாராக இருக்கிறேன். Please sit down. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்கள் தந்த விளக்கத்தின் அடிப்படையில் பார்க்கப்போனால், அவையில் சொல்லப்படுகிற கருத்து, எதிரிகளுக்கு மட்டும் வீசப்படுகிற கத்தியாக இருக்கக்கூடாது; கலைஞருடைய பெயரை வைத்தார்களே, செய்தார்களே என்றால், நான் திருப்பிக் கேட்கிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினரின் கன்னிப் பேச்சில் தலையிட வேண்டுமென்று நாங்கள் விரும்பவில்லை. ஆனால், அவர் பேசுகின்றபோது அரசுக்கு உள்நோக்கம் கற்பித்துப் பேசினார். அதற்காக இந்த விளக்கத்தைத் தரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இராணி மேரி கல்லூரியில் புதிய கட்டடத்திற்கு

[செல்வி ஜெ ஜெயலலிதா] [*2012 பிப்ரவரி 2*

'கலைஞர் மாளிகை' என்ற பெயர் வைக்கப்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டு, இந்தப் புதிய ஆட்சி அமைந்தவுடன் அது 'கலை மாளிகை' ஆகிவிட்டது என்று, ஏதோ இந்த அரசுத் தரப்பிலிருந்து சொல்லி, இந்தப் பெயரை மாற்ற வைத்ததுபோல் அவர் உள்நோக்கம் கற்பித்துப் பேசினார். அத்தகைய எந்த உத்தரவையும் இந்த அரசு பிறப்பிக்கவில்லை. 'கலைஞர் மாளிகை' என்று அந்தக் கட்டடத்திற்குப் பெயர் சூட்டப்பட்டதுகூட எனக்கு இதுவரை தெரியாது. இந்தப் புதிய ஆட்சி அமைந்த பிறகு, என்ன காரணத்தினாலோ, அந்தக் கல்லூரி நிர்வாகமே, தானாகவே அந்தப் பெயரை மாற்றிவிட்டது என்பதுதான் உண்மை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் *12–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** 'தானே' புயல் தானாகப் போயிருந்தால் தமிழகத்தில் தலை புரளுகிற பல சம்பவங்கள் நடந்திருக்காது. அதனால் ஏற்பட்ட சட்டமன்ற சலசலப்புகளையும் இந்த அவை நன்றாக அறியும். விழுப்புரம், கடலூர், திருவாரூர், நாகை மாவட்டங்களில் 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு நிவாரண உதவித் தொகையை அரசு வழங்கி வருகிறது. இன்னும் விரைவாக நிவாரணப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று எதிர்க்கட்சிகளின் சார்பில் கோரிக்கையும் வைக்கப்படுகிறது. தமிழகத்தினுடைய முதலமைச்சர் தனி ஹெலிகாப்டரில் விரைந்து வந்து பார்த்தார். ஆனால், தமிழகத்தின் ஒப்பற்ற தலைவராக இருக்கிற கலைஞர், சென்னையில் புறப்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஹெலிகாப்டரில் சுற்றிப் பார்த்து, 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் போர்க்கால அடிப்படையில் உதவிகளைச் செய்திருக்கிறார். இவருடைய தலைவர், புயலால் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்க்கப் போகவில்லை. அவருடைய பால்ய நண்பர் தென்னனுடைய படத்திறப்பு விழாவிற்குச் சென்றவர், போகிற



*2012 பிப்ரவரி 2*] [திரு. ஆர். வைத்திலிங்கம்]

போக்கிலே அதைப் பார்ப்பதாகப் பத்திரிகையில் பேட்டி கொடுத்திருக்கிறார்; படத்திற்கு pose கொடுத்திருக்கிறார். அவர் தன்னுடைய பால்ய நண்பர், இறந்தவருடைய படத்திறப்பு விழாவிற்குத்தான் திருவாரூக்குச் சென்றார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக நான் பதிய வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றம் ஏற்படுகின்றபோது, 'தானே', சுனாமி போன்ற இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுகின்றபோது, அங்கு ஏற்படுகின்ற முழுமையான சேதங்களைக் கண்டறிய வேண்டுமென்றால், வான்வழியாகச் சென்று அதை பார்வையிட்டால்தான், எந்தளவிற்கு அந்தச் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கண்டறிய முடியும். இதுதான் நடைமுறை. அப்படித்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நேரடியாகப் பார்வையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் சென்றது குறித்து யாரும், எதுவும் தவறாகச் சொல்லவில்லை. அவர் தனி ஹெலிகாப்டரில் சென்றார்; தலைவர் சாலை வழியாகச் சென்றார்; அறக்கட்டளையின் சார்பில் *50* இலட்சம் ரூபாயை ஏழையெளிய மக்களுக்கு வழங்கினார் என்ற செய்தியைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியினுடைய குறைகளைச் சொல்ல விரும்புகிறேன். கடலூர், விழுப்புரம், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களை ஒட்டிய மாவட்டம், நான் சார்ந்திருக்கிற தொகுதியான திருவிடைமருதூர் உள்ளடங்கிய தஞ்சாவூர் மாவட்டம். தஞ்சாவூர் மாவட்டத்தில், பெரப்படி கூவூர் பகுதியில் நாகப்பட்டினம் மாவட்டமும், நம்முடைய குத்தாலம் பகுதியில் திருவாரூர் மாவட்டத்தை ஒட்டிய பகுதிகளும், அணைக்கரையில் கடலூர்

[முனைவர் கோவி. செழியன்] [2012 பிப்ரவரி 2

மாவட்டமும் சார்ந்திருக்கிற தொகுதி திருவிடைமருதூர் சட்டப் பேரவைத் தொகுதி. தஞ்சாவூர் மாவட்டத்தின் கடைக்கோடிப் பகுதி, 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட பகுதி. எனவே, கடலூர், விழுப்புரம், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் உள்ள பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படுகிற அந்த நிவாரண உதவித் தொகையை, நான் சார்ந்திருக்கிற திருவிடைமருதூர் தொகுதியில் உள்ள விவசாயப் பெருமக்களுக்கும் வழங்க வேண்டுமென்பதை இந்த நேரத்தில் நான் வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

நான் சார்ந்திருக்கிற தொகுதியில், ஆடுதுறையில் நெல் ஆராய்ச்சி மையம் இருப்பது எல்லோருக்கும் தெரியும். 1912 ஆம் ஆண்டு, மங்கைநல்லூர் என்ற ஊரில் தொடங்கப்பட்டதுதான் நெல் ஆராய்ச்சி மையம்; 1922 முதல் ஆடுதுறையில் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1912 ஆம் ஆண்டு அது தொடங்கப்பட்டது எனக் கணக்கிட்டால், அதற்கு நூற்றாண்டு விழா கொண்டாடுகிற தருணம், இந்தத் தருணம். எனவே, ஆடுதுறையில் இருக்கிற நெல் ஆராய்ச்சி மையத்தை விரிவுபடுத்தக்கூடிய வகையில், ஒரு வேளாண்மைக் கல்லூரியையோ அல்லது வேளாண்மைப் பல்கலைக்கழகத்தையோ அமைத்துத் தர வேண்டுமென்று இந்த உரையின் மூலமாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12—05

அதோடு, திருப்புவனம் பட்டுப் புடவைக்குப் பெயர் பெற்ற ஊர்; நாச்சியார்கோவில் குத்துவிளக்கிற்குப் பெயர் பெற்ற ஊர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்புவனத்தில் உற்பத்தி செய்யப்படுகிற பட்டுப் புடவைகளும், நாச்சியார்கோவில் பகுதியில் உற்பத்தி செய்யப்படுகிற குத்துவிளக்குகளும் நாடு முழுவதும் விற்பனை செய்யப்படுகின்றன; வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அண்டை மாநிலங்களில் உள்ள பெங்களூரு, மைசூர், ஹைதராபாத் ஆகிய பகுதிகளுக்கும் பட்டுப் புடவைகளும், குத்துவிளக்குகளும் எடுத்துச் செல்லப்படுகின்றன.

கழகத் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, புதியதாகப் பொறுப்பேற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதி மக்களுடைய நற்பயனுக்காக இரண்டு புதிய பேருந்து வழித்தடங்களைத் தொடங்க வழிவகை செய்திருந்தார். ஆனால், இன்றைக்கு அது



2012 பிப்ரவரி 2] [முனைவர் கோவி. செழியன்]

இல்லை. இது எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுடைய உள்மனதிலும் இருக்கக்கூடிய கோரிக்கை. நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், திருப்புவனம் பகுதியில் இருக்கக்கூடிய நெசவாளர்கள், நாச்சியார்கோவில் பகுதியிலே இருக்கக்கூடிய குத்துவிளக்குத் தொழிலாளர்கள், உற்பத்தியாளர்கள் அல்லது முகவர்கள் வெளியூர்களுக்குச் சென்று, விற்பனைப் பொருள்களை விற்பதற்கு வசதியாக நாச்சியார்கோவிலிலிருந்து சென்னைக்கு ஒரு புதிய பேருந்து வழித்தடத்தையும், திருப்புவனத்திலிருந்து வரலாற்றுப் புகழுடைய பெங்களூரு நகருக்கு குளிர்சாதன பேருந்து வசதியையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே தங்கள் வாயிலாக நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மைக்கை தள்ளி வைத்துப் பேசுங்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** பெங்களூருவிற்கு திருப்புவனத்திலிருந்து தனி சொகுசுப் பேருந்தை அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, சட்டம்—ஒழுங்குப் பிரச்சினை எப்படி இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். எல்லோருக்கும் விரும்பத்தகாத செய்தியானாலும் நாட்டிலே நடப்பது உண்மை. சட்டம்—ஒழுங்குப் பிரச்சினையைப்பற்றி அதிகமாக எடுத்துச் சொல்லவேண்டுமேயானால், "நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றால் சட்டம்—ஒழுங்கைப் பாதுகாப்போம். நான் ஆட்சி பொறுப்பை ஏற்றவுடன் தமிழகத்தில் இருக்கிற ரவுடிகளெல்லாம் ஆந்திராவிற்கு ஓடிவிட்டார்கள்" என்று தமிழகத்தினுடைய முதலமைச்சர் அறிவித்திருந்தார். அதனடிப்படையில் பார்க்கப்போனால், சட்டமன்றம் நடக்கக்கூடிய இந்த நான்காம் தேதியிலிருந்து, கொலை, கொள்ளை, கற்பழிப்பு, வன்முறைச் சம்பவங்கள் என்று தினசரி நடந்தேறுகிறதே, ஆளுங்கட்சியில் இருப்பவர்களும் விரும்பவில்லை, அந்த வழிப்பறி, கொலை, கொள்ளை போன்றவற்றை; எதிர்க்கட்சியில் இருப்பவர்களும் அந்தக் கொலை, கொள்ளை போன்றவற்றை விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கேயோ போய் கடைசியில் கோரிக்கையைச்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 பிப்ரவரி 2

சொல்லி, (குறுக்கீடு) இது கோரிக்கை அல்ல; குற்றச்சாட்டு. பொத்தாம்பொதுவாக, ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளை மாண்புமிகு உறுப்பினர் சொல்லிக்கொண்டிருக்கிறார். ஏதாவது ஆதாரம் இருந்தால் சொல்லுங்கள். அது எதனால் நிகழ்ந்தது என்பது அரசின் சார்பில் விளக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனே ரவுடிகள் எல்லாம் வெளியிலே சென்று விட்டார்கள் என்று சொன்னதாகச் சொல்லி, கடந்த நான்காம் தேதியிலிருந்து எத்தனை கொலை, கொள்ளைகள் நடந்திருக்கின்றன என்றும் சொன்னார்கள். நான் கூறுவது, கொலை நடப்பது என்பது, அண்ணன் தம்பி தகராறுக்குக்கூட நடக்கிறது. அதனால் அவனை ரவுடி என்று சொல்லிவிட முடியாது; திருடன் என்று சொல்லிவிட முடியாது; சில பேர் சில சூழ்நிலைகளில் உணர்ச்சி வசப்படுகின்ற நேரத்தில் நடக்கக்கூடிய ஒரு நிகழ்வு. இதையெல்லாம் ரவுடிக் கூட்டத்தோடு சேர்க்கக் கூடாது. திட்டமிட்டுச் செய்யக்கூடிய கொலைகள் என்பது வேறு; இயற்கையாக உணர்ச்சிவசப்படுகிற நிலையில் செய்வது என்பது வேறு. அப்படிப்பட்ட சில நிகழ்வுகள்தான் நடந்திருக்குமேயொழிய ரவுடிகளால், கொள்ளைக் கூட்டத்தால் ஒரு நிகழ்ச்சிகூட நடக்கவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அல்லது, அவர் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலும் இந்தக் கொலை, கொள்ளை எல்லாம் நில அபகரிப்புப் புகாரிலேயிருந்து வரக்கூடிய கொலை, கொள்ளைகள்தான் அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நில அபகரிப்பு எங்கேயிருந்து ஆரம்பமாகியிருக்கிறது என்பது பொது மக்களுக்குத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.



2012 பிப்ரவரி 2]

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திருவிடைமருதூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கன்னிப் பேச்சு பேசுவதால் குறுக்கீடு வேண்டாம் என்று சொன்னார். அவரும் ஆதாரம் இல்லாமல் பேசினார். ஏனென்றால், அது கன்னிப் பேச்சு. புதியதாக சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறார். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள், ஏற்கெனவே சட்டமன்ற அனுபவம் பெற்றவர். நீண்ட, நெடிய அனுபவம் பெற்றவர். அவரும் ஆதாரமில்லாமல் பேசினால் எப்படி? அது சரியாக வருமா? எங்கு சம்பவம் நடந்தது, எப்பொழுது நடந்தது, அதனால் ஏற்பட்ட பாதிப்பு என்ன என்று சொன்னால் உரிய பதில் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் specific-ஆகக் குறிப்பிட்டு, இந்த மாதிரி குற்றங்கள் நடக்கின்றன என்று கூறி, அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். ஆனால், பொத்தாம் பொதுவாகச் சொல்லக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் Point of order என்று கேட்டார்கள்; நான் வாய்ப்புக் கொடுத்தேன். ஆனால், அதில் specific mention ஏதும் இல்லாத காரணத்தினால் அவர் பேசிய பேச்சுகள் அவைக் குறிப்பில் இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

பிற்பகல் 12–10

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்-ஒழுங்கு சீர் குலைவு என்னும்போது அது எல்லோரும் ஏற்றுக்கொள்ளாதது என்ற நிலையில்தான் நான் அவ்வாறு பேசினேன். ஆனாலும், கன்னிப் பேச்சில் குறுக்கிடக்கூடாது என்று சொல்லியே மாண்புமிகு அமைச்சர்கள் என்னுடைய பேச்சில் குறுக்கிட்டார்கள். ஆதாரம் இருந்தால் சொல்ல வேண்டும் என்றும் நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[முனைவர் கோவி. செழியன்] [2012 பிப்ரவரி 2

இந்தச் சட்டமன்றத்தில் உள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு அய்யா திரு. பழ. கருப்பையா அவர்களுடைய வீட்டில், அவருடைய துணைவியார் கழுத்திலிருந்த பத்து பவுன் தங்கத் தாலிச் செயின் பறிக்கப்பட்டதே, அதனை ஆந்திராவிற்குச் சென்றவர்கள்தான் திரும்பி வந்து செய்தார்கள் என்பதை இந்த அரசு ஏற்றுக் கொள்ளுமா என்ற ஐயம் என் மனதில் எழத்தான் செய்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதாவது சம்பவங்கள் நடந்து, அந்தச் சம்பவங்களுக்கு அரசு நடவடிக்கை எடுக்கவில்லையென்றால்தான் அது குற்றச்சாட்டு. ஆனால் எந்தச் சம்பவமாக இருந்தாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை, கடும் நடவடிக்கைகளை உடனடியாக எடுத்து வருகிறது. ஆனால் சென்ற ஆட்சிக்காலத்தில் சட்டம்–ஒழுங்கு சீர்குலைந்திருந்தது என்று சொன்னால், நடந்த சம்பவங்களுக்கு அப்பொழுது உரிய நடவடிக்கையை அந்த அரசு எடுக்கத் தவறியது. உதாரணமாக நேற்றையதினம்கூடச் சொன்னேன். மதுரையில் நடைபெற்ற தினகரன் பத்திரிகை அலுவலகம் எரிப்பு வழக்கில் அந்த அரசு ஏதாவது நடவடிக்கையை எடுத்ததா? மதுரையில் எத்தனையோ சம்பவங்களில் சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட்டபோதெல்லாம் அன்றைக்கு இருந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அப்படி அல்ல. எந்தச் சம்பவம் நடந்தாலும் சரி, குற்றம் சாட்டப்பட்டவர் யாராக இருந்தாலும், "நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே" என்பதற்கேற்ப, நடுநிலையோடு உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து சட்டம்–ஒழுங்கை நிலைநாட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, சட்டம்–ஒழுங்குப் பிரச்சினையில் அரசு நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் அதைக் குற்றச்சாட்டாகச் சொல்லுங்கள். ஆனால், உங்களுடைய ஆட்சிக் காலத்தில் எந்தக் குற்றங்களுக்கும் நடவடிக்கை எடுக்கவில்லையே!



2012 பிப்ரவரி 2]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொல்லி விட்டார்கள் நேரத்தை வீணாக்காதீர்கள் வேறு சப்ஜெக்ட்டு–க்குப் போய் விடுங்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தலைநகரைப் பொறுத்தவரையில் தினசரி நடக்கக்கூடிய வன்முறை, கொலை மற்றும் கொள்ளைகளைப் பார்க்கிறபோது, ** என்ற ஐயப்பாடு மக்கள் மத்தியில் எழத்தான் செய்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் எந்தச் சம்பவத்திற்கும் நடவடிக்கை எடுக்கவில்லையே? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் கோவி. செழியன், நீங்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், specific -ஆக, motive இல்லை, அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்ற விளக்கம் அளித்தபின், பொத்தாம் பொதுவாக இது ** என்று கேட்பதை அனுமதிக்க இயலாது. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள் தெரிவித்த ** என்ற வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசத் தொடங்கியபோது "என்னுடைய பேச்சு கன்னிப் பேச்சு; அதில் குறுக்கிடாமல் இருங்கள்" என்று மிகவும் பணிவோடு கேட்டார். அவரும் நன்றாகப் பேசுவார் என்று நினைத்தோம். குறுக்கிடுகின்ற அளவிற்குப் பேசவேண்டாம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் அவருக்குச் சொன்னீர்கள். ஆனால் அவருடைய பேச்சு முழுவதும் கன்னிப் பேச்சா அல்லது கடைந்து எடுத்த உண்மைக்கு மாறான பேச்சா என்பதுபோல அமைந்துள்ளது. எனவே, இதை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் கோவி. செழியன் வேறு சப்ஜெக்ட்டுக்குப் போய் விடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 பிப்ரவரி 2

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிக மரியாதையோடு, அய்யா பழ. கருப்பையா அவர்களுடைய வீட்டில் நடந்த, அவருடைய மனைவியின் கழுத்தில் இருந்த சங்கிலிப் பறிப்பு விஷயத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதே பழ. கருப்பையா அவர்கள் சட்டமன்ற உறுப்பினராவதற்கு முன்பு ஜனநாயக ரீதியாக தொலைக்காட்சிக்குப் பேட்டி அளித்துவிட்டு, வீட்டிற்கு வந்தவுடனேயே, அவருடைய மனைவிக்கு, அவருக்கு உயிர் பயத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தி, அவருடைய காரைத் தீ வைத்துக் கொளுத்தி, ரவுடிகளை அனுப்பி, அந்த வீட்டிலே சில சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளையும் தாக்குதல்களையும் நடத்தியது யாருடைய ஆட்சியில் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சற்று சிந்திக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், வேறு சப்ஜெக்ட்டுக்குப் போய் விடுங்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** அவையில் உள்ள எல்லோருக்கும் தெரியும். என்னைப் பொறுத்தவரையில் சட்டம்–ஒழுங்குப் பிரச்சினையில் எதை விடுவது, எதைத் தொடுவது என்பதுதான் பிரச்சினையாக இருக்கிறதே தவிர. . .(குறுக்கீடு)

பிற்பகல் 12–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி, பேரவைத் தலைவரின் கட்டுப்பாட்டில் வருகிறது. எனவே, அதுகுறித்து இங்கே விவாதிக்க முடியாது. அதற்கென்று House Committee இருக்கின்றது. உங்களுக்கு grievance ஏதாவது இருந்தால் அந்த House Committee–இடம் தெரிவியுங்கள்.அதன்மீது உரிய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 பிப்ரவரி 2] [பேரவைத் தலைவர்]

நடவடிக்கை எடுக்கப்படும். என் அறைக்கு வந்து குறைகள்பற்றிச் சொல்லலாம். எனவே, விடுதி உறுப்பினர் பற்றிச் சொன்னதும், மாண்புமிகு அமைச்சர் சொன்னதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரை புத்தகத்திலே 8–வது பக்கத்தில், இந்த அரசால் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்ட நில அபகரிப்பு தடுப்புப் பிரிவுகளால் நிலம் மீட்டளிக்கப்பட்டு, அதன்மூலம் அம்மக்கள் பயனடைந்து உள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நல்ல செய்தி. அப்படி பலன் அடைந்திருந்தால் உள்ளபடியே பாராட்டியாக வேண்டும். இன்றைக்கு இந்தச் சட்டத்தின்மூலம் ** என்பது இந்த அவையில் உள்ள எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். காரணம், சிவில் வழக்குகளை கிரிமினல் வழக்குகளாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப மாண்புமிகு உறுப்பினர் பொத்தாம்பொதுவாக, வேண்டுமென்றே ஆதாரமில்லாத செய்திகளை இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** என்று பொத்தாம் பொதுவாகச் சொன்னால் அதை அனுமதிக்க முடியாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை. நான் ஏற்கெனவே சொன்னேன்; கன்னிப் பேச்சு என்பதனால் குறுக்கீடு இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்று. அமைச்சர்களும் குறுக்கிடமாட்டார்கள் என்று சொன்னேன். (குறுக்கீடுகள்) நான் முதலிலேயே சொன்னேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

***திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னிப் பேச்சாக இருந்தால் யாரும் குறுக்கிடக் கூடாது என்று சொன்னார்கள். ஆனால், குற்றச்சாட்டுகளை அவர் சுமத்திக் கொண்டிருக்கும்போது, அந்தப் பேச்சு கண்ணியமாக இல்லாதபோது, நீங்கள் அதை உடனே கவனிக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 பிப்ரவரி 2

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நில, அபகரிப்பு வழக்கிலே இந்தச் சட்டம் இயற்றிய பிறகு காவல் நிலையங்களில் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்று சொன்னார்கள். இங்கே ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அண்மையிலே நடந்து முடிந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் கூட்டத்திலே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த நில அபகரிப்பு வழக்குகளிலே உண்மையான ஆதாரங்கள் இல்லாமல் எந்த வழக்கையும் தாக்கல் செய்யக்கூடாது என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை நடந்த கூட்டத் தொடரில், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தொகுதிப் பிரச்சினையைப் பற்றிப் பேசி உரையை முடியுங்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞரான ஒரு உறுப்பினர் பேசும்போது, "நீங்கள் படித்த கல்லூரியில்தான் நானும் படித்தேன். எனக்கு சீனியர் நீங்கள். எனவே, நேரத்தை சற்று அதிகமாகத் தாருங்கள்" என்று கேட்டார். தாங்களும் மனமுவந்து நேரத்தை அதிகரித்துத் தந்தீர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சட்டம் படித்தவர், பட்டம் படித்தவர். நீங்கள் படித்த அதே சட்டக் கல்லூரியில், நீங்கள் இறுதியாண்டு படித்தபோது, முதலாமாண்டு மாணவன் நான். எனவே, அருள்கூர்ந்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள், எனக்கு ice வைக்காதீர்கள்.



2012 பிப்ரவரி 2]

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ice வைக்கவில்லை. ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள், நீங்கள் கொடுத்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. கடைசியில் சொன்ன கருத்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

பிற்பகல் 12–20

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தைப் பொறுத்தவரையில், எங்களது அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் இயக்கம் அத்தீர்மானத்தை மனதார வரவேற்கிறது. "சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கான அனைத்து குறியீடுகளிலும், இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழகத்தை மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் அனைத்தையும் இந்த அரசு எடுத்து வருகிறது" என்று மேதகு ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொலைநோக்குப் பார்வையோடு, தமிழகத்தை இந்தியாவின் முதலிடத்திற்குச் கொண்டு செல்லவேண்டும் என்று பலநோக்குத் திட்டத்தோடு செயல்படுவதைச் சுட்டிக்காட்டுகின்ற வகையிலே, மேதகு ஆளுநர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் கொடுக்கப்பட்ட அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றும் வகையில், பாரபட்சமின்றி, அரசியல் தலையீடின்றி அனைத்துத் திட்டங்களும் அடித்தட்டு மக்களுக்குச் சென்றடைவதைப் பார்க்கும்போது, நாங்கள்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. பி.வி. கதிரவன்] [2012 பிப்ரவரி 2

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மனதாரப் பாராட்டுவது எங்களுடைய கடமை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முல்லைப் பெரியாறு பிரச்சினையில் கேரள அரசு துஷ்பிரயோகம் செய்ததை, தமிழக மக்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து, தமிழக அரசு மதிக் கூர்மையோடு திறம்பட சிந்தித்துச் செயலாற்றி, தமிழகத்தின் உரிமையை ஒருக்காலும் விட்டுக்கொடுக்கமாட்டோம் என்று சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றியதைப் பார்க்கும்போது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தினுடைய உரிமையை நிலைநாட்டுபவராக இருப்பதை நாம் பார்க்கும்போது, அதைப் பாராட்டுவது எங்களுடைய கடமை. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் சட்டம்–ஒழுங்கு கடந்த 5 ஆண்டுகாலம் எப்படி இருந்தது என்பது அனைவருக்கும் தெரிந்தது. அதனால்தான் மக்கள் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வந்தார்கள். குறிப்பாக, மதுரையில் மக்கள் ஒவ்வொரு நாளும் அஞ்சி, அஞ்சி வாழ்ந்தார்கள். அங்கிருக்கின்ற தலைவர் மக்களை அச்சுறுத்துகின்ற தலைவராக இருந்தார். அதனால்தான் மதுரை மாவட்டத்தில் உள்ள 10 தொகுதிகளிலும் ஒட்டுமொத்தமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், தோழமைக் கட்சிகளும் வெற்றி பெற்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இது அவர்களே உருவாக்கிக்கொண்ட விதம். அந்த அடிப்படையிலே இன்றையதினம் தமிழக அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும் நில அபகரிப்பு வழக்குகளுக்கென காவல் தனிப் பிரிவை உருவாக்கி, பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிட்டத்தட்ட 650 கோடி ரூபாய் மதிப்பிலான நிலத்தை மீட்டுப் பெற்றுத் தந்திருக்கிறார்கள் என்றால், இது ஒரு இமாலய சாதனை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒருசில இடங்களில் களவு நடந்திருக்கிறது; கொலை நடந்திருக்கிறது என்று ஏதோ தினசரி பேப்பரில் செய்தி வெளியிடுவது, அந்தப் பேப்பர் விற்பனையாவதற்காக. அதனைச் சுட்டிக்காட்டி, ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் சட்டம்–ஒழுங்கு பராமரிக்கப்படவில்லை என்று சொல்வது தவறான செய்தி. இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருமையாகச் சொன்னார்கள்.



2012 பிப்ரவரி 2] [திரு. பி.வி. கதிரவன்]

உணர்ச்சிவசப்படுவதால் கொலை நடக்கின்றது; சண்டையும் நடக்கின்றது. நான் சட்டம் பயின்றவன் என்ற நிலையில், அதுபோன்ற நிகழ்வுகளையெல்லாம் சட்டம்–ஒழுங்குப் பிரச்சினையாகக் கருத்தில் கொள்ளக்கூடாது என்று நான் இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன். அதேநேரத்தில் அமைதிப் பூங்காவான தமிழகத்தில் மக்கள் அமைதியாக, திருப்திகரமாக, வாழ்கின்ற ஒரு நிலைமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இலங்கைத் தமிழர் பாதுகாப்பைப் பொறுத்தவரையிலும், இலங்கைத் தமிழர்கள் நலன் குறித்து நமது தமிழக மக்கள் என்ன நினைக்கிறார்களோ அதனை அப்படியே மாண்புமிகு முதல்வர் அவர்கள் செயல்படுத்தி வருவதையும் பாராட்டாமல் இருக்க முடியாது. கச்சத் தீவை மீண்டும் பெறவேண்டும் என்று தமிழக மக்கள் ஒவ்வொருவரும் நினைப்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் சுட்டிக்காட்டி, அதற்கு இந்த மாமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றியது வரவேற்கக்கூடிய ஒன்று என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, 'தானே' புயல், 'தானே' என்று பெயர் வைத்தபோதே இது ஏதோ தமிழகத்திற்கு பிரச்சினை உண்டாக்கும் என்று நாங்கள் எல்லாம் நினைத்தோம். அதுபோன்று, தமிழகத்தின் கடலூர், விழுப்புரம் மாவட்டங்களிலும் இந்த 'தானே' புயல் பிரச்சினையை உண்டாக்கி, பாதுகாப்பற்ற நிலையை உருவாக்கி இருக்கிறது. நிறைய சேதத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இடர்ப்பாடுகளை ஏற்படுத்தி இருக்கிறது.

புயல் நிவாரணத்திற்காக அசுர வேகத்தில் செயல்பட்ட தமிழக அரசைப் பாராட்டவேண்டும். தமிழக அமைச்சர்களையெல்லாம் அனுப்பி, அங்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு பகுதியில் இருக்கவேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுப்பி, அந்த மாவட்டங்கள் முழுவதும் பொங்கலுக்குள்ளாக சீர் செய்யவேண்டுமென்று ஆணையிட்டு, அதையெல்லாம் செய்து முடித்திருக்கின்ற தமிழக முதல்வர் அவர்களைப் பாராட்டுவது எங்களுடைய கடமை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. பி.வி. கதிரவன்] [2012 பிப்ரவரி 2

*பிற்பகல் 12–25*

அதுமட்டுமல்ல, நானும் கடலூர் பகுதியில், புதுச்சேரி பகுதியில் அந்த புயல் சேதங்களை எங்கள் கட்சித் தோழர்களுடன் சென்று பார்த்தேன். தமிழகத்திலே அமைச்சர் பெருமக்கள் எல்லாம் அவர்களுடைய கடமையை சிறப்பாகச் செய்துகொண்டிருந்ததைப் பார்த்தோம். ஒவ்வொரு மின் கம்பத்திலும் பணியாளர்கள் ஏறி வேலை செய்துகொண்டிருந்ததை நாங்கள் கண்ணாரப் பார்த்தோம். அதேநேரத்தில், புதுச்சேரியிலே ஒரு பகுதியிலே எங்களுடைய கட்சிக்காரர்களோடு சென்று பார்த்தபோது, அங்குள்ளவர்கள் சொன்னார்கள்; அந்த ஊராட்சி மன்றத்தினுடைய தலைவர் சொன்னார்; "தமிழகத்தினுடைய அனைத்து அமைச்சர்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுப்பி கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் சீர்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்; சரி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் எங்களுடைய புதுச்சேரியில் ஒரு அமைச்சர்கூட வரவில்லை" சட்டமன்ற உறுப்பினர்கள்கூட வரவில்லை என்று வருத்தப்பட்டு எங்களிடம் சொன்னதை நாங்கள் நினைவுகூர்ந்து, தமிழக முதல்வர் அவர்கள் சிறப்பாகச் செய்திருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் பாராட்டுகிறோம்.

அதுமட்டுமல்ல, ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. அதுமட்டுமல்ல மத்திய அரசினுடைய நிதியொதுக்கீடு இல்லாமல், மத்திய அரசினுடைய உதவி இல்லாமல் இந்த அளவிற்குச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்களைப் பாராட்டுவது எங்களுடைய கடமை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் மின் பற்றாக்குறை இன்னும் இருந்து வருகிறது. மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் நேற்றைய தினமும், அதற்கு முந்தைய நாளும் விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மின் பற்றாக்குறை இருப்பது உண்மைதான். அந்த மின் பற்றாக்குறையை 2012 ஆம் ஆண்டுக்குள் சரி செய்துவிடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மின் பற்றாக்குறை வருகின்ற காலகட்டங்களில் சரிசெய்யப்படவேண்டும் என்பதை அரசுக்குக் கோரிக்கையாக வைக்கின்றேன்.



2012 பிப்ரவரி 2] [திரு. பி.வி. கதிரவன்]

பள்ளிகளுக்குக் கட்டமைப்பு வசதிகள் செய்தல், ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க பணியிடங்களை நிரப்புதல் போன்ற அறிவிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நடப்பாண்டில் 33,681 ஆசிரியர் பணியிடங்களும், 16,549 பகுதிநேர ஆசிரியர் பணியிடங்களும், 5,000 ஆசிரியர் அல்லாத பணியிடங்களும் நிரப்பப்படவிருக்கின்றன. கடந்த ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் உள்ள பதிவு மூப்பு அடிப்படையில் இடங்கள் நிரப்பப்பட்டன. ஆனால், தமிழக அரசு இப்போது தேர்வுமூலம் தெரிவு செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. கல்வித் தரத்தை முன்னேற்ற வேண்டுமென்ற சிந்தனையோடு சொல்லியிருக்கிறது. ஆனால், அதேநேரத்தில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, வேலை இல்லாமல் 40 அல்லது 45 வயது முடிந்திருக்கின்றவர்களுக்கும் வாய்ப்பு அளிக்கின்ற வகையிலே, இந்த பள்ளி ஆசிரியர் பணியிடத்திற்கு 50 சதவீதம் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமும், 50 சதவீதம் தேர்வு மூலமும் தெரிவு செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைய ஆசிரியர்களை நியமிக்கவேண்டுமென்று ஆணைகள் வழங்கியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில், இந்தக் கல்வியாண்டில் மட்டும் சுமார் 56,453 ஆசிரியர்களை நியமிக்க இருக்கிறோம். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது ஆசிரியர்கள் தேர்வு செய்கின்ற சூழ்நிலையில், வேலைவாய்ப்பு அலுவலக பதிவு மூப்பு அடிப்படையிலும், தேர்வு அடிப்படையிலும் தேர்வு செய்யவேண்டுமென்று பேசியிருக்கிறார்கள். ஆனால், இந்த 56,453 ஆசிரியர்களும், ஒவ்வொரு வகையான ஆசிரியர்களும், ஒவ்வொரு முறையில் தேர்வு செய்யப்பட இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–30*

குறிப்பாக, 16,549 பகுதிநேர ஆசிரியர்கள் பதிவு மூப்பு அடிப்படையிலும், அதேநேரத்தில் அவர்களுடைய கல்வித் தகுதியின்

[திரு. என்.ஆர். சிவபதி] [2012 பிப்ரவரி 2

அடிப்படையிலும், முன்னுரிமையின் அடிப்படையிலும் அந்தந்த மாவட்டத்தில் இருக்கின்ற முதன்மைக் கல்வி அலுவலர் தலைமையில் ஆறு உறுப்பினர்கள் கொண்ட கமிட்டிமூலம் தேர்வு செய்யப்படவிருக்கிறார்கள்.

அதேநேரத்தில், முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள், ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் மாநில வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பதிவு மூப்பு அடிப்படையில் தேர்வு செய்யப்படவிருக்கிறார்கள் என்பதையும், பட்டதாரி ஆசிரியர்கள் ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் மாநில வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பதிவு மூப்பு அடிப்படையில் தேர்வு செய்யப்படவிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். ஒவ்வொரு வகையான ஆசிரியர் பணி நியமனமும் மத்திய அரசு அறிவித்திருக்கின்ற அந்த அறிவிப்பின் அடிப்படையிலும், மாநில அரசு இப்பொழுது அறிவித்திருக்கின்ற ஆசிரியர் தேர்வு ஆணையத்தின் முடிவு அடிப்படையிலும் செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பகுதிநேர ஆசிரியர்கள் நியமனம் பற்றிய கருத்துகளை இங்கே முன்வைத்தார்கள். ஆனால், எங்களுடைய சிவகங்கை மாவட்டத்தில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யாமல், வெளியிலே மனுக்களைப் பெற்றுக்கொண்டு, அந்த மனுக்களைக் கொடுத்தவர்களுக்கு நேர்முகத் தேர்வுகளை நடத்தி ஒரு பட்டியலைத் தயாரித்து வைத்திருக்கிறார்கள். எனவே, அது தவறு என்று சொன்னால் உடனடியாக நீங்கள் நடவடிக்கை எடுத்து, பதிவு மூப்பு அடிப்படையில் வேலைவாய்ப்பு அலுவலகத்திலே மனுக்களைக் கொடுத்தவர்களைக் கொண்டு பணி நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.



2012 பிப்ரவரி 2]

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16,569 பகுதிநேர ஆசிரியர்களைத் தேர்வு செய்வதற்காக மாவட்டத்திலே முதன்மைக் கல்வி அலுவலர், முதன்மை கல்வி அலுவலர் (அனைவருக்கும் கல்வித் திட்டம்), மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் ஆகியோரைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. உடற்கல்வி ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டால் மாவட்ட அளவில் இருந்து ஒரு ஆசிரியரைக் கொண்டு அந்தக் குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது. உடற்கல்வி சம்பந்தப்பட்ட அந்தக் குழுவிலே. 10 ஆம் தேதி கடைசி தேதியென்றால், 10 ஆம் தேதி வரைக்கும் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் யார், யார் எல்லாம் பதிவு செய்திருக்கிறார்களோ அவர்களும் கருதப்படுவார்கள். பதிவு செய்திருக்க வேண்டும் அவ்வளவுதான்.

அடுத்து, அதற்கு என்னென்ன தகுதிகள் அறிவிக்கப்பட்டிருக்கிறதோ அந்தத் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்; இதுதான் உண்மை. வேலைவாய்ப்பு அலுவலக பதிவு மூப்பு அடிப்படையிலே தேர்வு செய்யப்படும் என்று எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை. அந்தக் குழுவில் அவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அதாவது வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்திருக்க வேண்டும் என்று பத்திரிகை மூலமாக விளம்பரம் செய்யப்படுகிறது. அரசு சார்பில் பத்திரிகை மூலமாக விளம்பரம் செய்யப்படுகிறது. அனைவரும் அந்த வேலைவாய்ப்பு பெற வேண்டும், யாரும் விடுபட்டுவிடக் கூடாது என்பதற்காக பத்திரிகையின் வாயிலாக இந்த வேலைவாய்ப்பிலே நீங்கள் பங்குபெறலாம் என்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. இரண்டாவது, வேலைவாய்ப்பு அலுவலகத்திலே அந்தக் கடைசி தேதி வரைக்கும் பதிவு செய்திருக்கின்றவர்கள் அத்தனை பேரும் இதிலே பங்குபெறுவதற்குத் தகுதியுடையவர்கள். அதேநேரத்திலே வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு பெற்றவர்கள் அத்தனை பேர்களுக்கும் வேலைவாய்ப்பு என்பது இல்லை, அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அதுதான் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது. வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மற்றொன்று, அவர்கள் ஏற்கெனவே வேலை செய்திருந்தால் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அதில் இன்டர்வியூ வைத்துத்தான் தேர்ந்தெடுக்கிறார்களே தவிர, பதிவு மூப்பின் அடிப்படையிலே தேர்வு செய்யப்படுவதில்லை.

[திரு. சி.வி. சண்முகம்] [2012 பிப்ரவரி 2

உங்களுக்கு அளிக்கிற விளக்கம் என்னவென்றால், பதிவு மூப்பின் அடிப்படையிலே மட்டும் தேர்வு செய்யப்படுவதில்லை, அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

பிற்பகல் 12–35

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஒன்றைச் சொன்னார்கள் 50 சதவீதம் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாகத் தேர்வு செய்யப்பட வேண்டும், 50 சதவீதம் தேர்வு முறைமூலம் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று சொன்னார்கள். இப்போது மத்திய அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற அனைவருக்கும் கட்டாயக் கல்விச் சட்டத்தின்படி, தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கின்ற ஆசிரியர்கள் அனைவரும் ஆசிரியர் தகுதித் தேர்வு எழுத வேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டம்கூட மத்திய அரசாங்கம் தானாகக் கொண்டு வந்த சட்டம் அல்ல. உச்ச நீதிமன்றம் ஆணையிட்டதன்பேரிலே கொண்டு வரப்பட்ட சட்டம். அந்தச் சட்டத்தின்படி ஆசிரியர்கள் தேர்வு வாரியத்தின் தேர்வினைக் கண்டிப்பாக எழுத வேண்டும். அதை எழுதிய பிறகுதான் ஆசிரியர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். அதேபோன்றுதான் இன்றைக்கு தமிழகத்திலே முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரும் தேர்வு வாரியம் மூலம்தான் தேர்வு செய்யப்படுவார்கள் என்பதை இங்கே விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு என் நன்றி. தமிழகத்தில் தொழில் துறையில் முன்னேற்றம் காட்ட வேண்டுமென்பதை அடிப்படையாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே தென் மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு இடத்திலாவது சிப்காட் போன்ற தொழில் கூடங்களை அமைக்க வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக அரசின் ஒவ்வொரு திட்டங்களையும் எதிர்க்கட்சிகளும், தோழமைக் கட்சிகளும் குறைகளைக் கூறுகின்ற அளவுக்கு நாம் விடக்கூடாது. திட்டங்களை நிறைவேற்ற தமிழக அரசு முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருப்பதை நாங்கள் இந்த நேரத்திலே பாராட்டுகிறோம்.



2012 பிப்ரவரி 2] [திரு. பி.வி. கதிரவன்]

அதுமட்டுமல்ல, மத்தியிலே ஆளுகிற காங்கிரஸ் அரசு தமிழகத்திற்கு நிதி கொடுக்காமல், உரிமைகளைக் கொடுக்காமல் இருந்தும், இந்த அளவுக்குத் திறமையாக தமிழக முதல்வர் அவர்கள் தமிழக மக்களுக்கு, வாக்களித்தவர்களுக்கு பணியாற்ற வேண்டுமென்ற சிறந்த நோக்கத்தோடு செயல்பட்டுக்கொண்டிருப்பதை நாங்கள் பாராட்டுகிறோம். மத்திய அரசுக்கு இங்கிருக்கின்ற காங்கிரஸ் நண்பர்கள் உறுதுணையாக இருந்து, மத்திய அரசை வலியுறுத்தி தமிழக அரசுக்குத் தேவையான நிதியையும், உரிமையையும் கொடுக்க உதவிகரமாக இருக்க வேண்டுமென்று நேரத்திலே கேட்டு இந்த வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி நிறைவு செய்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

***திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது, மத்திய அரசு நிதி கொடுக்கவில்லை என்று ஒரு காரணத்தைச் சொல்லிக்கொண்டேயிருந்தார்கள். பொதுவாகவே மத்திய அரசைப் பொறுத்தவரையிலே, ஏதோ மாற்றாந்தாய் மனப்பான்மையோடு தமிழகத்தை நடத்துவதாக சட்டமன்றத்திலே பல கட்சியினர் தங்கள் பேச்சைப் பதிவு செய்து கொண்டிருக்கின்றனர். நிச்சயமாக அதுபோன்று கிடையாது. 28 மாநிலங்கள், 7 யூனியன் பிரதேசங்களினுடைய மொத்த ஆட்சிக்கும் இன்றைக்கு மத்திய அரசு தலைமையேற்றிருக்கின்ற காரணத்தினாலே, இன்றைக்கு அவர்கள், எல்லாவற்றையும் பேலன்ஸ் செய்துதான் அனைத்தையும் செய்ய முடியும். எனவே, தமிழகத்திற்கு என்ன தேவை இருக்கின்றதோ நிச்சயமாக அவர்கள் அதைச் செய்வார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள், மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடப்பதாக மற்ற உறுப்பினர்கள் சொல்வதாகச் சொல்கிறார்கள். மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்தால்கூட, ஏதாவது அரை வயிறுக்குக் கஞ்சி கிடைக்கும். ஆனால், அவர்கள் வேண்டாத பிள்ளையாகவே

[திரு. சு. குணசேகரன்] [*2012 பிப்ரவரி 2*

*தமிழகத்தை நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் யதார்த்தமான உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) அதை நான் மட்டும் சொல்லவில்லை. தமிழகத்தினுடைய முதல்வரே வார்த்தைக்கு வார்த்தை சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, அதைப்புரிந்து கொண்டு, 'தருவோம், தருவோம்' என்பதற்குப் பதிலாக தந்துவிட்டுப் பேசுங்கள் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பழ. கருப்பையா அவர்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை.* Point of order *கேட்டீர்கள், ஒரு முறை கொடுத்தாகிவிட்டது. இது மானியக் கோரிக்கை விவாதமல்ல, உட்காருங்கள்.*

***திரு. பழ. கருப்பையா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு சில நிமிடங்கள் அவைக்கு வெளியே சென்று வர நேரிட்டபோது, என்னைப் பற்றியும் என்னுடைய குடும்பத்தைப் பற்றியும் இங்கே பேசப்பட்டது என்று அறிந்தேன். என்னுடைய துணைவியார் ரேஷன் கடைக்குச் சென்று விட்டு வந்தபோது அவருடைய தாலிச் சங்கிலி அறுபட்டது குறித்து திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர் மிகவும் கவலைப்பட்டார் என்பது கேட்டு நான் மிகவும் வியந்தேன். 'ஆடு நனைகிறது என்று ஓநாய் கவலைப்படுகிறது' என்பதைப்போல, (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வீட்டில் நடந்த அந்த நிகழ்வு அவருக்கு மிகப் பெரிய கவலையை உண்டாக்கியிருக்கிறது. இடைவிடாமல் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியும், முரசொலியிலே 'பழ. கருப்பையா வீட்டில் சங்கிலியை அறுத்துக்கொண்டு போனார்கள்' என்றுதான் எழுதுகிறாரே தவிர, திரும்பவும் 3 மணி நேரத்தில் அந்தச் சங்கிலியைக் கண்டு பிடித்துக் கொண்டுவந்து விட்டார்கள் என்று அவர் எழுதுவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–40*

*காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தவுடன் போலீஸ் அதிகாரிகள் வந்து 3 மணி நேரத்தில் அந்தத் திருடனைப் பிடித்ததுடன், அந்தச் சங்கிலியை உடனடியாக என் கையில் கொடுக்க முடியாது என்பதனால் அதை நீதிமன்றத்தில் ஒப்படைத்து, அதன் பிறகு, நீதிமன்றத்தில் கையெழுத்திட்டு என்னுடைய துணைவியார் பெற்றுக்கொண்டார்கள். அதுமட்டுமல்ல, புழல் சிறைச்சாலையிலே அந்தத் திருடனை அவர்கள் பல*



*2012 பிப்ரவரி 2*] [திரு. பழ. கருப்பையா]

*ஆண்களுக்கிடையிலே வைத்து அடையாளமும் காட்டினார்கள். வள்ளுவன் காலத்திலிருந்து திருடர்கள் இல்லாத உலகம் இல்லை. ஆனால் அவர்கள் ஒடுக்கப்படுகிறார்களா என்பதை வைத்துத்தான் ஒரு ஆட்சியை மதிப்பிட வேண்டும். இது சென்ற ஆட்சிக் காலத்தில் நடக்கவில்லை. இந்த ஆட்சிக் காலத்தில் ஒரு திருடனால் என்னுடைய குடும்பத்திற்கு இடர் நேரிட்டது. ஆனால், சென்ற ஆட்சிக் காலத்தில் ஆட்சியினராலேயே எனக்கு இடர் நேரிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*சென்ற ஆட்சிக் காலத்தில் செம்மொழி மாநாடு நடந்தபோது நான் மிகக் கடுமையாக அந்தச் செம்மொழி மாநாட்டினை விமர்சித்துக் கொண்டிருந்தேன். செம்மொழி கூடாது என்பதற்காக அல்ல; செம்மொழிக்கு மாநாடும் கூடாது என்பதற்காக அல்ல. அம்மாவினுடைய உரையை நாம் அவையிலே கேட்கின்றபோதெல்லாம், நான் பலசமயம் பின்னால் அமர்ந்து கேட்டுக் கொண்டிருக்கும்பொழுது, இதுதான் பரிதிமாற்கலைஞன் விரும்பிய செம்மொழி உரை போலும் என்று நினைப்பேன். அவ்வளவு இலக்கணச் சுத்தமாகப் பேசுவார்கள். ஆகவே, செம்மொழிக்கு நாங்கள் பகை இல்லை. ஆனால், 'ஈழத்தை மயானமாக்கிவிட்டு செம்மொழிக்கு என்ன மாநாடு நடத்துகிறாய்?' என்று கேட்டேன். மொழி என்பது என்ன வெறும் ஒலியா? அது இனத்தின் அடையாளம் அல்லவா! ஆகவே, இனத்தை அழித்துவிட்டு மொழிக்கு, வெறும் ஒலிக்கு மாநாடு நடத்துவது எந்த வகையில் உரியது என்று நான் எழுப்பிய கேள்வியைப் பொறுத்துக்கொள்ள முடியாமல், செம்மொழி மாநாட்டின் இறுதி நாள் மாலை, அவருடைய கட்சியின் குண்டர்கள், காலிகள் என்னுடைய வீட்டில் புகுந்து என்னையே தாக்கி, கழுத்தைப் பிடித்து சுவரோடு வைத்து முகத்திலே குத்தி, தாக்கி, என்னுடைய காரை உடைத்து, பொருள்களையெல்லாம் உடைத்து, "நீ என்னடா எழுதுகிறாய் எங்களுடைய தலைவரைப் பற்றி" என்று கேட்டு என்னைத் தாக்கிவிட்டு அவர்கள் ஓடிவிட்டார்கள். அந்த வழக்கில், அதற்கு உரியவர்களைக் கண்டுபிடிக்கவில்லை. ஆனால், இப்பொழுது அந்த வழக்கு விசாரிக்கப்படுகின்ற நிலையில் இருக்கிறது. ஆகவே, எதற்காக இதை நான் சொல்கிறேன் என்றால், நான் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதிக்கும் சொல்கிறேன்; தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சொல்கிறேன்; சட்டம்–ஒழுங்குதான் அம்மாவினுடைய ஆட்சியின் உயிர் மூச்சு. (மேசையைத் தட்டும் ஒலி) அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களின் முதல் கூட்டத்தைக் கூட்டி அம்மா அவர்கள் சொன்னார்கள்; "பெருவாரியாக மக்கள் என்னிடம் எதிர்பார்த்து, என்னை*

ஆட்சியில் அமர்த்தியிருக்கிறார்கள். அதற்குக் கேடு வராதவாறு நடந்து கொள்ளுங்கள்" என்று. அம்மா அவர்கள் அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவுரை சொன்னார்கள். இதுபோல், தன்னுடைய கட்சிக்காரர்களையே நெறிப்படுத்துகின்ற ஒரு தலைமையை எந்தக் கட்சி பெற்றிருக்கிறது என்று நான் கேட்கின்றேன். கட்சிக்காரர்களையும் ஆடவிட்டு, தானும் ஆடி, கிளைச் சிறைச்சாலையிலிருந்து, திகார் சிறைச்சாலை வரை அனைத்தையும் நிரப்பிக் கொண்டிருக்கின்றவர்களுக்கு *(மேசையைத் தட்டும் ஒலி)* நான் சொல்கின்றேன், எந்த எளிய மகனும், அவன் எந்தத் தரத்திலும், எந்த உயர்விலும் இல்லாவிட்டாலும்கூட, பாதிக்கப்படுவானேயானால், அந்த பாதிக்கப்பட்டவனின் குரலுக்குப் பரிவோடு ஏன் என்று கேட்கின்ற ஆட்சிதான் அம்மாவினுடைய ஆட்சி என்று சொல்லி அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீதான நன்றி அறிவிப்புத் தீர்மானத்தின்மீது எனது கருத்துகளைப் பதிவு செய்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரை என்பது ஒரு நல்ல புத்தகத்திற்கு முன்னுரை எப்படியோ அதைப் போன்றது. ஒரு நல்ல மாளிகைக்கு நுழைவு வாயில் எப்படியோ அதைப் போன்றது. ஆளுநர் உரைக்கென்று ஒரு தனித் தன்மை கிடையாது. அரசின் நடவடிக்கைகளுக்கு, அரசின் செயல்பாடுகளுக்கு அது ஒரு அணிந்துரை, அவ்வளவே. அதை வைத்துக்கொண்டு பார்க்கின்றபோது, இந்த ஆளுநர் உரை ஒரே ஆண்டிலே இரண்டாவது முறையாக வந்திருக்கின்ற ஆளுநர் உரை என்றாலும்கூட, தித்திக்கின்ற தேன்பாகைப்போல தமிழகத்தில் இருக்கின்ற அத்துணை ஏழை, எளிய மக்களுக்கும் நம்பிக்கையைத் தருகின்ற முத்திரையாக இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்பதை *(மேசையைத் தட்டும் ஒலி)* நான் முதலிலே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் *12–45*

என்னுடைய உரையை நான் தொடங்குவதற்கு முன்னாலே நான் ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். தமிழகத்திலே ஆதி



திராவிட மக்களிடையே நம்முடைய போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு கல்விப் புரட்சியை உருவாக்கி வருகிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி).*

பேரறிஞர் அம்பேத்கர் அவர்கள், "உண்மையான சமத்துவம் எப்போது இந்தியாவிலே உருவாகும் என்று நான் கருதுகிறேன் என்றால், ஏழையெளிய மக்கள் எல்லோரும் கல்வி பயின்றார்கள், தரமான கல்வி பயின்றார்கள் என்பது மட்டுமல்லாமல் அவர்களுக்கு நம்பிக்கை என்ற ஒன்றை உருவாக்குகிற வகையிலே உள்ள கல்வியை எப்போது பெறுகிறார்களோ, அப்போதுதான் உண்மையான சமூக சமத்துவம், இந்த மண்ணிலே அமையும்" என்று கருதினார்கள். அந்த இலட்சியக் கனவை, பாபா சாகிப் அம்பேத்கருடைய உயரிய தத்துவத்தை, இன்றைக்கு நடைமுறைப்படுத்துகிற வகையிலே, எட்டே மாதங்களிலே *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழகத்திலே எண்ணற்ற ஆதி திராவிட மக்களுக்கான கல்வி நலத் திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் படிப்படியாக நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். ஆதி திராவிட மாணவர் விடுதிகளெல்லாம் இன்றைக்கு பல கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு, சீரமைக்கப்பட்டு வருகின்றன. ஆதி திராவிட மாணவர் விடுதிகளிலே இருக்கிற மாணவர்களின் எண்ணிக்கை மிகப் பெரிய அளவிலே உயர்த்தப்பட்டு வருகிறது. ஆதி திராவிட மாணவர் விடுதிகளிலே இருக்கிற மாணவர்களுடைய உணவுக் கட்டணமெல்லாம் இன்றைக்கு இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டிருக்கிறது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக, பல ஆண்டுக்காலமாக, கடந்த *5* ஆண்டுக்காலமாக வீதிகளிலே, தெருக்களிலே போராடிக்கொண்டிருந்த, கோரிக்கைகள் விடுத்துக்கொண்டிருந்தவர்களின் ஒரு கோரிக்கை இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தனியார் சுயநிதிக் கல்லூரிகளிலும், தொழிற்கல்லூரிகளிலும், அரசு சார்பிலே அனுப்பப்படுகிற ஆதி திராவிட மாணவர்களினுடைய உயர் கல்விக் கட்டணத்தை இந்த அரசே ஏற்றுக்கொள்ளும், அதற்காக *73* கோடி ரூபாய் செலவழிக்கப்படும் என்று இன்றைக்கு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறாரே, *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆணையிட்டிருக்கிறாரே, அந்த ஓர் ஆணை, கோடானுகோடி வருங்கால தலைமுறையினரும், தாழ்த்தப்பட்ட மக்களும் நன்றியுணர்வோடு எண்ணி எண்ணி பாராட்டத்தக்க ஒரு ஆணை. மருத்துவக் கல்லூரிகளிலே இடம் எளிதாகப் பெறலாம். பொறியியல் கல்லூரிகளிலே இடம் எளிதாகப் பெறலாம். பேராசிரியர்களாக, விஞ்ஞானிகளாக, மருத்துவர்களாக பெரிய

உயர் படிப்புகளைப் படிப்பதற்கு, அவர்களுக்கு கல்வி அறிவு இருந்தாலுங்கூட, தனியார் சுயநிதிக் கல்லூரிகளிலே சேர்ந்து படிப்பதற்கான வாய்ப்பு இல்லாத அந்த நிலைமை மாறி, இன்றைக்கு அவர்களுக்கெல்லாம் வழி கிடைத்திருக்கிறது. அதற்காக ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பிலே என் நெஞ்சார்ந்த நன்றியை இன்றைக்கு நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். வாய்ப்பு கிடைக்குமானால் முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு ஒடுக்கப்பட்ட மக்களில் பலரையும் திரட்டி, ஒரு மிகப் பெரிய பாராட்டு விழாவே நடத்திட வேண்டும். தந்தை பெரியார், பேரறிஞர் அம்பேத்கர், மகாத்மா காந்தியடிகள், ராஜாராம் மோகன் ராய் இவர்களைப் போன்ற பலரும் படித்த அந்த உயர் படிப்பு மருத்துவக் கல்லூரிகளிலே பயின்றால் ஓராண்டு கல்விக் கட்டணம் 2 இலட்சம் ரூபாய், 3 இலட்சம் ரூபாய் 5 ஆண்டுகளுக்கு 15 இலட்சம் ரூபாய். அந்த 15 இலட்சம் ரூபாயையும் இன்றைக்கு அரசே ஏற்றுக்கொள்ளப்போகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவன் அடித்தளத்து மாணவனாக இருந்தால், அரசே ஏற்றுக்கொள்ளப்போகிறது. அந்த நிலைமை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. அந்த நடவடிக்கையை நாம் எவ்வளவு பாராட்டினாலும் பாராட்டுவதற்கு வார்த்தைகளே இருக்காது. அந்தப் பாராட்டுக்கு, அந்த நன்றிக்கு எங்களின் செயல்வடிவங்கள்தான் வெளிப்படையாக இருக்க முடியும் என்ற உணர்வோடு நான் அதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

தாராளமயமாக்குதல், உலகமயமாக்குதல் போன்று இன்றைக்கு மத்திய அரசினுடைய கொள்கையாலே, தாழ்த்தப்பட்டவர்கள் உயர் கல்வியைப் படித்தாலுங்கூட பணி புரிய முடியாது என்கிற அப்படிப்பட்ட ஒரு நிலைமை உள்ளது. தனியார் துறையிலே இட ஒதுக்கீடு இல்லை. தாராளமயமாக்குதல், உலகமயமாக்குதல் என்று இன்றைக்கு மத்திய அரசு எடுத்து வருகிற நடவடிக்கைகளாலே, எல்லாம் தனியார்மயம் ஆகிவிட்டது. அனைத்துத் துறைகளும் தனியார்மயமாகிக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட நிலையிலே அவர்களுக்கு கல்வி மேம்பாடு மட்டும்தான் ஒரு மிகப் பெரிய வழியாக இருக்க முடியும் என்று சிந்தித்து, திட்டத்தை உருவாக்கியிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் பாராட்டுகிறேன்.

அதே நேரத்திலே, வெளியே எவ்வளவு பாராட்டினாலும், அம்மாவினுடைய செவிக்கு சில கோரிக்கைகளை இங்கே





முன்வைத்தால் அது எப்போதாவது உயிர் பெற்று நிறைவுபெறும் என்கிற நம்பிக்கை எங்களைப் போன்ற நலிந்த மக்களுக்கு இருப்பதனாலே, நான் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கடந்த 5 ஆண்டுக்கால திமுக ஆட்சியிலே அரசு தேர்வாணையத்திலேகூட ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை. பல்கலைக்கழக துணை வேந்தர் பதவியிலேகூட பிரதிநிதித்துவம் இல்லை. 30–க்கும் மேற்பட்ட பலதரப்பட்ட பல்கலைக்கழகங்களிலே கடந்த 5 ஆண்டுக்காலத்திலே ஒரு துணை வேந்தர் இல்லை. அரசு தேர்வாணையத்திலே உறுப்பினர் இல்லை. இப்படிப்பட்ட நிலைகளெல்லாம் மாறி, இன்றைக்கு ஏற்கெனவே இருந்த ஒரு பாதிக்கப்பட்ட துணை வேந்தருக்கு நீங்கள் ஏற்படுத்திய பாபா சாகிப் அம்பேத்கர் பெயரிலான அந்த விருதை வழங்கியிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வரும் காலங்களிலே துணை வேந்தர் பொறுப்புகளிலேயும் அரசு தேர்வாணையத்திலேயும் அவர்களுக்கு பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கு நீங்கள் அன்புகூர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற அந்த வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, தேசிய அளவிலே தாழ்த்தப்பட்டோர் நல ஆணையம் இருக்கிறது. ஆனால், மாநில அளவிலே ஓர் ஆணையம் இல்லை. குழந்தைகள் நல ஆணையம் தேசிய அளவிலே இருக்கிறது. மாநில அளவிலே ஒரு குழந்தைகள் நல ஆணையம் இல்லை. தொழிலாளர் ஆணையம் மாநில அளவிலே இருக்கிறது. பெண்களுக்கான ஆணையம் மாநில அளவிலே இருக்கிறது. ஆகவே, ஒரு குழந்தைகள் நல ஆணையத்தை, தாழ்த்தப்பட்ட மக்களுக்கான நல ஆணையத்தை மாநில அளவிலே நீங்கள் உருவாக்கிட வேண்டும். அது சட்டப்படியான ஆணையமாக இருந்தாலும் சரி, அது தனிப்பட்ட வகையிலே இருந்தாலும் சரி, ஓர் ஆணையத்தை உருவாக்கிட வேண்டுமென்கிற வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12–50

புரட்சித் தலைவி அம்மா அவர்களை வெறுமனே ஒரு religious secularist என்று மட்டும் சொல்ல முடியாது. அவர்கள் ஒரு social secularist, மதங்களுக்கு அப்பாற்பட்ட தன்மை மட்டும் அல்ல, சமூகங்களுக்கு அப்பாற்பட்ட தன்மைக்காகவும், இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களைத்தான் ஒரு ஏக பிரதிநிதியாக ஏழையெளிய மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் பார்த்துக்

கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய அந்தப் பாகுபாடு, அந்த உணர்வு எவ்வாறுள்ளது என்றால், தகுதி, திறமை ஆகியவற்றை வளர்த்திட வேண்டும், அந்த தகுதி மற்றும் திறமையின் அடிப்படையிலேதான் அவர்கள் தெரிவு செய்யப்படவேண்டும், அவர்கள் அங்கீகரிக்கப்படவேண்டும் என்ற ஓர் உயரிய நோக்கோடு திறன் மேம்பாட்டு மையத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இன்று அறிவிக்கப்போகிறது. திறமையை வளர்க்கிற, தகுதியை வளர்க்கிற, அப்படிப்பட்ட ஒரு மையத்தை இன்று அரசே நீண்ட தொலைநோக்கோடு உருவாக்கப் போகிறது என்கிறபோது அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தகுதிக்கும், திறமைக்கும் மட்டுமே அங்கீகாரம் தேவை. மதங்களுக்கு அப்பால், மொழிகளுக்கு அப்பால், சாதியத்திற்கு அப்பால், அவை இருத்தல் என்பதுதான் சமூக சமத்துவத்தினுடைய ஒரு மிகச் சிறந்த எல்லையாக இருக்கமுடியும். ஆகவே, social secularist என்கிற அந்த சமூக சமத்துவ உணர்வின் சின்னமாக இருக்கக்கூடிய புரட்சித் தலைவி அம்மா அவர்களை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

'தானே' புயல் கடலூரரை, விழுப்புரத்தை, நாகப்பட்டினத்தை, திருவாரூரை, தஞ்சாவூரை ஆட்கொண்டு பல்லாயிரக்கணக்கான அடித்தளத்து ஏழை மக்களை, அப்பாவி மக்களை, பாமரர்களை மிகுந்த தொல்லைக்கு உள்ளாக்கியது. அந்தத் தொல்லையை, துயரத்தை நீக்குவதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசிடம் கேட்டது எவ்வளவு என்றால், ரூ.5,248 கோடி ஆகும். ரூ.5,248 கோடி கேட்டால் இதுவரையிலே கிடைத்திருப்பது ரூ.500 கோடி ஆகும். இது பத்திலே ஒரு பங்குகூட அல்ல. பத்திலே ஒரு பங்கைக்கூட மத்திய அரசிடமிருந்து பெறாத நிலையிலே, ஒரு மாத காலம் ஆகியும், கேட்ட நிதி உதவி மத்திய அரசிடமிருந்து இதுவரையிலே கிடைக்காத நிலையிலே, மாநில அரசு அந்தப் பகுதிகளிலே எவ்வளவு துணிவோடு, துயரைத் துடைத்திருக்கிறது என்றால்—ஒரு இலட்சம் வீடுகளைக் கட்டித் தருவோம் என்று சொல்லியிருக்கிறார்களே! (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இப்படிப்பட்ட ஒரு நிவாரணம் அமைந்தது இல்லை. ஏழையெளிய மக்களுக்கு ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகள்; ஒன்றல்ல, இரண்டல்ல, ஓராயிரம் அல்ல, ஈராயிரம் அல்ல, கடலூர், விழுப்புரம் மாவட்டங்களிலே, ஒவ்வொரு வீடும் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே, ஒரு இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று துணிந்து





அறிவித்திருக்கிறார்கள். இவ்வாறு இந்த அரசு ஒரு இலட்சம் வீடுகளைக் கட்டத் திட்டமிட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறது என்றால், எங்களைப்போல் வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் இருக்கின்ற மக்களெல்லாம் அந்த 'தானே' புயல் இங்கே கேட்டு வராதா? அப்படிப்பட்ட 'தானே' புயல் இங்கு கேட்டாவது வராதா என்று ஏங்குகிற அளவிற்கு ஒரு இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்ற திட்டம் அமைந்திருக்கிறது. இனி ஒரு தலைமுறை குடிசையிலே வாழ்ந்திட வேண்டிய அவசியமே இருக்காது. குடிசை என்பதை இனி பார்த்திட முடியாது (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசிலே அது இருக்காது என்கிற வகையிலே, ஒரு இலட்சம் வீடுகளை இரண்டு மாவட்டங்களிலே கட்டித் தருகிற அப்படிப்பட்ட அந்தத் துணிவு இந்த அரசுக்குள்ளது.

ரூ.5,248 கோடி கேட்டு ஒரு மாதமாக ரூ.500 கோடிகூட வராதபோதும், ரூ.850 கோடி அளவிற்கு மின்சாரத்தைச் சீரமைப்பதற்கு மட்டும் நம்முடைய மாநில அரசு செலவிடத் திட்டமிட்டு இருக்கிறது. மின்சார சீரமைப்புக்கு மட்டும் ரூ.850 கோடி. ஆக, அவர்கள் தருகிற ரூ.500 கோடி இந்த மின்சார சீரமைப்பிற்குக்கூடப் போதாது. எதிர்க்கட்சிகள் ஏதோ வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று, போதவில்லை, போதவில்லை என்று சொன்னால் இதைவிட வேறு என்ன வேண்டும்? இந்த அரசின் நோக்கத்திற்கும், துணிவிற்கும் திட்டச் செயல்பாடுகளுக்கும், வேகத்திற்கும் வேறு என்ன இணை வேண்டும்? (மேசையைத் தட்டும் ஒலி) நாகப்பட்டினத்திலே சுனாமி தாக்கத்தின்போது அந்த சுனாமி சீரமைப்பைப் பற்றி வெளிநாட்டுக்காரன் இங்கே இருந்தவர்களை அழைத்துப் பயிற்சி பெற்றானே! சுனாமி சீரமைப்பின்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அவர்கள் ஆற்றிய அந்த சீரிய நடவடிக்கைகளை வியந்து பாராட்டி போற்றி, வெளிநாட்டுக்காரன் இங்கேயிருக்கிற அலுவலர்களை அழைத்து அங்கே ஒரு பாதிப்பு வருமானால் புனரமைப்பதற்கான பயிற்சியும், ஆற்றலும் வேண்டுமென்று இவர்களை அழைத்து அங்கே பயிற்சி தரச்செய்தானே! புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அலுவலர்களை அழைத்துப் பாராட்டினார்கள். எங்குமே நடக்காத ஒரு புனரமைப்பை சுனாமியின்போது நான் பார்த்தேன். அரசு அலுவலர்கள் பாராட்டப்பட்டார்கள். அரசு அலுவலர்களுக்கு பதவி உயர்வு கிடைத்தது. அவர்களுக்கு பாராட்டுப் பத்திரம்

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2012 பிப்ரவரி 2

கிடைத்தது. அங்கே கடைநிலை ஊழியர்களுக்குகூட ரூ.5,000 பணம் கொடுத்து அவர்களைப் பாராட்டியவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பிணத்தை எடுத்துக்கொண்டு போய் சுட்டானே அந்தக் கடைநிலை வெட்டியான் 3,000–க்கும் மேற்பட்ட பிணங்கள், 10,000–க்கும் மேற்பட்டவர்கள் நாகப்பட்டினத்திலும் பிற பகுதிகளிலும் சுனாமியால் செத்து மடிந்தபோது அந்தப் பிணங்களைச் சுட்ட வெட்டியானுக்கு, கடைநிலை ஊழியனுக்குக்கூட ரூ.5,000/– பணத்தைத் தந்து அவனைப் பாராட்டிய அரசு இந்த அரசு. ஆகவேதான், இந்த அரசு வழிகாட்டி அரசாக, உலகத்திற்கே வழிகாட்டிய அரசாக அன்றும் இருந்தது, இன்றும் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட இந்த அரசினுடைய நடவடிக்கைகளைப் பாராட்டுகிறோம். இந்தப் பாராட்டுகளை வேறு யாரும் எந்த விதத்திலும் கொச்சைப்படுத்தவே முடியாது.

பிற்பகல் 12–55

இன்றைக்கு கிராமப்புறங்களிலே வறுமை ஒழிப்பிலே நம்முடைய அரசு, முன்னுதாரண அரசாக முன்னிலையில் இருக்கிறது. அவர்களுக்குப் பசுமை வீடுகள் தருகிறோம், இலவச மின்சாரம் தருகிறோம், இலவசமாக மாணவர்களுக்கு மிதிவண்டி தருகிறோம், வெட் கிரைண்டர் தருகிறோம், மின் விசிறி தருகிறோம், மிக்ஸி தருகிறோம். இதற்கும் மேலே மடிக் கணினியினைத் தருகிறோம். திருமணத்திற்கான உதவிகளைத் தருகிறோம். ஆக, வாழ்வதற்கான அனைத்து வசதிகளையும் தருகின்ற, கிராமப்புற மக்களுக்குத் திட்டங்களைத் தீட்டுகிற நம்முடைய அரசு, கிராமப்புற வறுமையை ஒழிப்பதிலே முன்னிலையில் இருக்கிறது. இதோடு முடிந்துவிட்டது என்று நாம் கருதினோம். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு, நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டத்திற்காக இன்றைக்கு ஆளுநர் உரையிலே நீண்ட தொலைநோக்கோடு, சென்னை, மதுரை, கோயம்புத்தூர் போன்ற நகரங்களிலே, பிளாட்பாரங்களிலே, சேரிகளிலே, குப்பங்களிலே இருந்து கொண்டிருக்கின்ற அந்த மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் எனக் கருதி, நகர்ப்புறங்களிலே இருக்கிற வறுமையை ஒழிப்பதற்கு திட்டத்தை அறிவித்திருக்கிறது. கிராமப்புறங்களிலே இவற்றையெல்லாம் தர முடிந்த மாதிரி நகர்ப்புறங்களுக்கும் அம்மா அவர்கள் இன்றைக்குத் தாராளமாக, ஏராளமாக வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். நகர்ப்புறத்து வறுமையை ஒழிப்பதற்கான திட்டத்தை இன்றைக்கு ஆளுநர் உரையிலே நீண்ட



2012 பிப்ரவரி 2] [முனைவர் செ.கு. தமிழரசன்]

தொலைநோக்கோடு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். நகர்ப்புறங்களிலே இருக்கிற பிளாட்பார வாசிகள், வீடற்ற அனாதைகள் வாழும் நேரிலே பார்க்கின்ற நரகங்களாக, நகர்ப்புறத்துக் குப்பங்களும், சேரிகளும் இருக்கின்றன என்பதை பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தினுடைய சட்டமன்ற உறுப்பினராகிய நீங்கள் நன்கு அறிவீர்கள். அவர்களுக்கு இன்றைக்கு விடிவுகாலம் ஏற்பட்டிருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த விடியலுக்கான திட்டத்தை இன்றைக்கு ஆளுநர் உரையிலே நீண்ட தொலைநோக்கோடு, நகர்ப்புற வறுமை ஒழிப்புக்கான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** பாராட்டுவதற்கு பட்டியல் பக்கம் பக்கமாக இருக்கிறது. ஆனாலும், நேரம் கருதி என்னுடைய தொகுதியிலே ஒரு சிறிய கோரிக்கையை மட்டும் வைக்கின்றேன். வேலூருக்கு அருகாமையிலே இருக்கும் என்னுடைய கே.வி.குப்பம் தொகுதி, ஒரு பேரூராட்சிகூட இல்லாத தொகுதி. ஒருவேளை என்னுடைய தொகுதிதான் பேரூராட்சிகூட இல்லாமல், அனைத்துமே சிற்றூராட்சிகளாக இருக்கிற தொகுதியாக இருக்கக்கூடும். நகராட்சியோ, பேரூராட்சியோ இல்லாமல், அனைத்தும் கிராமங்களாக இருக்கக்கூடிய தொகுதி. காட்பாடிக்கு வெகு அருகிலே இருக்கக்கூடிய தொகுதி. இந்தத் தொகுதியை மேம்படுத்துகின்ற வகையிலே ஏதாவது ஒரு தொழிற்சாலையை உருவாக்க வேண்டும். காட்பாடி இரயில்வே சந்திப்பிற்கு அருகிலே இருக்கிற பகுதி என்பதால், அதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் கடந்த காலங்களிலே தனியாருக்குத் தாரைவார்க்கப்பட்டது. பல கோடி ரூபாய் அரசின் பணம் தனியாருக்குத் தாரைவார்க்கப்பட்டது. இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மத்திய அரசினுடைய ஒரு பொது நிறுவனத்திற்கு அந்தத் திட்டத்தை வழங்கி, ஒடுக்கப்பட்ட மக்களிடையே, ஏழையெளிய மக்களிடையே வாழ்வதற்கான நம்பிக்கையை உருவாக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா இருக்கிறார்கள், நோய்வாய்ப்பட்டால் என்ன? இயற்கை எப்படி வந்து தாக்கினாலும் அதை எதிர்கொள்ளும் வலிமையை

[முனைவர் செ.கு. தமிழரசன்] [*2012 பிப்ரவரி 2*

*இன்றைக்கு அம்மா தந்திருக்கிறார்கள். அந்த வலிமை அவர்களுக்கு நம்பிக்கையாக இருக்கிறது. ஏழையெளிய மக்களுடைய நம்பிக்கையைப் பெற்ற அரசாக எந்த அரசு இருக்கிறதோ அதுதான் நல்ல அரசு. நம்முடைய அரசியல் சட்டத்தினுடைய வழிநடத்தும் கோட்பாடுகள் வசதி படைத்தவர்களுக்கோ, எல்லாவிதமான ஆற்றல் படைத்தவர்களுக்கோ, அறிவார்ந்தவர்களுக்கோ மட்டுமல்ல, அந்த அடிப்படை நோக்கமும், குறிக்கோளும், அரசின் இயக்கமும், வாழ்வற்றவர்களுக்கு, வசதியற்றவர்களுக்கு, பாமரர்களுக்கு, படிப்பு இல்லாதவர்களுக்கு, நலிந்தவர்களுக்கும்தான், அதற்கே அரசு இயங்குகிறது என்று நம்முடைய அரசியல் சட்டத்தினுடைய முகப்பிலேயே குறிக்கோளாக நாம் வலியுறுத்தியிருக்கிறோம். அந்தக் குறிக்கோளை நிறைவேற்றுகிற ஒரு பேரரசாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இருக்கிறது.*

*போராளிகளுக்கு எப்போதும் சமரசம் கிடையாது. சமரசம் செய்துகொள்கிற பண்பு போராளிகளுக்குக் கிடையாது. தாம் ஏற்றிருக்கிற இலட்சியத்திலே சிறிதும் பிறழாமல் இருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள் களத்திற்கு வந்தார்களேயானால், அந்தக் களத்திலே நின்றார்களேயானால் அவர்களிடம் சமரசமே கிடையாது. பல தேர்தல்களிலே அவரோடு கூட்டணி வைத்து ஒரு வேட்பாளராக நிற்கிற வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. பல தேர்தல்களிலும் அந்த வாய்ப்பைப் பெற்றவன் நான். பல முறை போட்டியிட்டவன் நான், தன்னுடைய கட்சி என்றால் அதற்கு ஒரு முக்கியத்துவம், தோழமைக் கட்சியென்றால் அவன் தோற்றுப்போனாலும் பரவாயில்லை என்று என்னுகிற உணர்வோ, நான் என்னுடைய கட்சிக் கூட்டத்திற்குத்தான் போவேன், வேறு கட்சிக்காக என்றால் பேசமாட்டேன்; இங்கே 15 நிமிடம் பேசுவேன், அங்கே 5 நிமிடம்தான் பேசுவேன் என்று சிந்திப்பவரல்ல அவர். களத்திலே நின்றார்களேயானால் தோழமைக் கட்சியையும் வாழ வைக்கிறவர்களாக, (மேசையைத் தட்டும் ஒலி) தோழமைக் கட்சியையும் வெற்றி பெற வைப்பவர்களாக விளங்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் *1–00*

*வேறு கட்சியோடு கூட்டணி வைத்தால் தலைமையோடு ஒரு கூட்டணி வைக்க வேண்டும். அதற்குப் பிறகு மாவட்டத்தோடு ஒரு கூட்டணி வைக்க வேண்டும். அதோடு கடைசியாக, கடைசியிலே இருக்கிற ஒன்றியத்தோடு கூட்டணி வைக்க வேண்டும். அம்மாவோடு கூட்டணி என்றால், அதற்குப் பிறகு யாரும் அந்த இயக்கத்திலே அதைச் சொல்வதற்குக்கூட வாய்ப்பு இருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட ஒரு கூட்டணி தர்மத்தை கடந்த காலங்களிலே வேறு எந்தத் தலைமையும் தமிழகத்திலே செய்ததில்லை. களத்திலே நிற்கிறபோது கூட்டணியோடு, அந்தக் கூட்டணியையும் வெற்றிபெற வைக்கிறேன், கூட்டணியையும் உருவாக்குகிறேன் என்று ஒரு பேராற்றல் மிக்க 'பெண்ணிற் பெருந்தக்க' என்று வள்ளுவர் சொன்னாரே, அந்தப் பெருந்தன்மையின் சிகரமாக (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் அந்தப் பெருந்தன்மையின் சிகரமாய் இருக்கக்கூடிய ஒரு பெண்ணினப் பேரொளியாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பெருமையை அன்றைக்கும் பார்த்தோம், நேற்றைக்கும் பார்த்தோம்; அந்தப் பெண்ணினப் பேரொளி பல்லாண்டு, பல்லாண்டு முதலமைச்சராய் வாழ்ந்து தமிழக மக்களுக்கு பல, பல, பல, பல, பல்லாயிரம் நன்மைகள் செய்திட வாழ்த்தி, வரவேற்று, பாராட்டி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*



*2012 பிப்ரவரி 2*] [முனைவர் செ.கு. தமிழரசன்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

***திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கக்கூடிய இந்தத் தீர்மானத்திலே காங்கிரஸ் கட்சியின் சார்பாக பங்கேற்கக்கூடிய நல்வாய்ப்பினை அளித்த தங்களுக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*ஆளுநர் உரையைப் பொறுத்தவரையில், நாங்கள் மிக அதிகமாக எதிர்பார்த்ததன் காரணமாகத்தான் அதிலே எங்களுக்கு சற்று ஏமாற்றம்கூட ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். ஏனெனில், எங்களுடைய எதிர்பார்ப்பு அதிகமாக இருந்தது என்று கூறவேண்டும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும்தான் காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசிடம் நிறைய எதிர்பார்க்கிறோம். ஆனால், எதிர்பார்த்து, எதிர்பார்த்து, கோரிக்கை வைத்து, வைத்து, கடைசியில் மிஞ்சுவது வெறும் ஏமாற்றம்தான். (மேசையைத் தட்டும் ஒலி)*

[2012 பிப்ரவரி 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** இருந்தாலும்கூட, இன்றைக்கு 'தானே' புயலின் காரணமாக மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கடலூர் பகுதியைப் பொறுத்தவரையிலே, நான் யதார்த்தத்தைச் சொல்ல வருகிறேன். ஒரு மாநில அரசு என்ன செய்ய முடியுமோ அதை இந்த அரசு முழுவதுமாகச் செய்திருக்கிறது என்று நாங்கள் நிச்சயமாக நம்புகிறோம். என்ன செய்ய முடியுமோ யதார்த்தமாகச் செய்திருக்கிறீர்கள். மூன்று நாட்களிலே செய்யவில்லை, நான்கு நாட்களிலே செய்யவில்லை என்றெல்லாம் குறை கூறிக்கொண்டிருக்க விரும்பவில்லை. உண்மையான நிலைமையிலே 130 கிலோ மீட்டர் வேகத்திலே இந்தப் புயல் அடித்ததன் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கு என்ன உதவி செய்ய முடியுமோ அதை நிச்சயமாகச் செய்திருக்கிறீர்கள். அதைப் பொறுத்தவரையிலே, ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்ற வாக்குறுதி நிறைவேற்றப்பட்டால், மகிழ்வோரில் நிச்சயமாக நானும் ஒருவன். நிச்சயமாகச் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

ஒரு சிறிய கோரிக்கையை மட்டும் நான் தமிழக முதல்வர் அவர்களிடம் தெரிவிக்க விரும்புகிறேன். மரியாதைக்குரிய மத்திய அமைச்சர் திரு. ஜி.கே. வாசன் அவர்களுடன் நானும் நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் பகுதிகளுக்குச் சென்று பார்த்தபோது அந்தப் பகுதியிலே புயலின் பாதிப்பு இல்லாவிட்டாலும்கூட, பெய்த கடும் மழையின் காரணமாக பல்வேறு இடங்களிலே நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டு, கதிர்கள் சாய்ந்து போனதால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அப்பொழுது அதிகாரிகளும் வந்து கணக்கெடுத்துவிட்டுச் சென்றதாக என்னிடம் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தப் பகுதியிலே நெற்பயிர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் நல்ல முறையிலே இந்த நிவாரண உதவிகள் கிடைப்பதற்குத் தாங்கள் உதவிட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, எங்களது கோரிக்கை என்னவென்றால், விவசாயத்தைப் பொறுத்தவரை micro-irrigation போன்ற நல்ல திட்டங்கள், தஞ்சாவூர் மாவட்டம் மட்டுமல்ல, கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சி போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய



2012 பிப்ரவரி 2] [திரு. என்.ஆர். ரெங்கராஜன்]

தென்னை விவசாயிகளுடைய நலனைக் காக்கும் வகையிலே ஆளுநர் உரையிலே அறிவிக்கப்படவில்லை என்ற ஏக்கம் எங்களுக்கு இருக்கின்றது. குறிப்பாக, கடந்த முறை நான் பட்ஜெட் உரையிலே பேசும்போதுகூட நான் ஒரு கோரிக்கை வைத்தேன். முதல்வர் அவர்கள் அன்றைக்கு இல்லை. சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு இளநீர் கொடுக்கலாம் என்று ஒரு திட்டத்தைத் தொடங்கி, வெயில் காலங்களில் வாரத்திற்கு ஒரு முறையாவது கொடுத்தோம் என்று சொன்னால், உடலுக்கும் நல்லது, தென்னை விவசாயிகளுக்கும் ஒரு நல்ல விலை கிடைக்கக்கூடிய வாய்ப்பு வருங்காலத்திலே ஏற்படும். மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

கறவை மாடு கொடுக்கக்கூடிய திட்டத்தை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால், பால் விலையைப் பொறுத்தவரையில் நாங்கள் எதிர்க்கின்றோம் என்பதை நான் இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகின்றேன். அதேபோன்று, மின் கட்டண உயர்வு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'தானே' புயலால் நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களிலும் பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன; பயிர் பாதிப்பு இருக்கிறது; அங்கு சென்றபோது பார்த்தோம் என்று சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே எந்தப் பகுதியில் பாதிப்பு என்று சொன்னாலும், உடனடியாக அவர்களுக்கு நிவாரணம் வழங்கக்கூடியவர்கள் என்பதனை இந்த நாடு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே, நாகப்பட்டினம், கடலூர் போன்ற மாவட்டங்களில் வீசிய 'தானே' புயலின் தாக்கம் திருவாரூர் மாவட்டத்தில், நன்னிலம், குடவாசல் போன்ற பகுதிகளிலும் இருந்தது உண்மை. அதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 10 கோடியே 76 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாயை பயிர் நிவாரணமாக வழங்கியிருக்கிறார்கள் என்கிற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[*2012 பிப்ரவரி 2*

*பிற்பகல் 1–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு மின் கட்டண உயர்வு ஏற்படப் போகிறது என்ற ஒரு செய்தி எங்கு பார்த்தாலும் பரவி இருக்கிறது. நேற்று மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்களும், மரியாதைக்குரிய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் நல்ல விளக்கத்தை அளித்தார்கள். எனவே அதை ஏற்றுக்கொள்கிறோம். இருந்தாலும்கூட, எந்தக் காலத்திலும் இந்த மின் உயர்வு என்பது வந்துவிடக்கூடாது என்பதிலே நம்முடைய அரசு கவனமாக இருக்கவேண்டும் என்பதை எங்களுடைய வேண்டுகோளாக நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம். குறிப்பாக மின்வெட்டு மிக அதிகமாக இருக்கக்கூடிய நேரத்திலே, மதிப்புமிக்க முதல்வர் அவர்களுக்கு என்னுடைய பணிவான கோரிக்கை என்னவென்றால், கூடங்குளம் பகுதியில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய சிலர் தங்களுடைய சுயநலத்திற்காகப் போராட்டங்களை நடத்திக்கொண்டு, அந்தப் பகுதி மக்களைத் தூண்டிவிட்டு இந்த அணு மின் நிலையத்தைத் திறக்கக்கூடாது என்பதற்காக மிகக் கவனமாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்கு, ‘தினமலர்’ பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. அங்கே உதயகுமார் என்பவருக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட நூற்றுக்கும் மேற்பட்ட வழக்குகள் அவர்மீது பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இருந்தாலுங்கூட அவருக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று படத்தோடு செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். எனவே, நமது முதல்வர் அவர்கள் மனது வைத்து ஒத்துழைப்பு கொடுத்து, நிச்சயமாக கூடங்குளம் அணு மின் நிலையத்தைத் திறக்க வைக்க முயற்சி செய்து வெற்றி கண்டார்கள் என்று சொன்னால், இன்றைக்கு நமக்குத் தேவையான கிட்டத்தட்ட 1,000 மெகா வாட் மின்சாரம் கிடைக்கக்கூடிய வாய்ப்பிருக்கிறது. அதைச் செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு நாங்கள் இருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்திலே உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*2012 பிப்ரவரி 2*] [திரு. என்.ஆர். ரெங்கராஜன்]

அதேபோல், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2001 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த காலகட்டத்திலே பண்ணைக் குட்டைகள் அமைத்து, எல்லாப் பகுதிகளிலும் நீர் ஆதாரங்களைச் சேமிக்கக்கூடிய ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டம் தற்போது தொடருகிறதா என்பது தெரியவில்லை. எனவே, வருங்காலத்திலே பண்ணைக் குட்டை அமைக்கக்கூடிய திட்டங்களையும், ஏரிகளைத் தூர் வாரும் திட்டங்களையும் அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எங்கள் பகுதியைப் பொறுத்தவரையிலே, தென்னை விவசாயிகளுக்கு நீங்கள் உதவ வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை வைக்கின்றேன். அதேபோன்று பட்டுக்கோட்டையில் கடந்த ஆட்சிக் காலத்திலே தென்னை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ணைக் குட்டைத் திட்டத்தைப் பொறுத்தவரையில், அந்தத் திட்டம் இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையில் பல இடங்களில் அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது உறுப்பினர் அவர்கள் ஏதாவது ஒரு இடத்தைக் குறிப்பிட்டுச் சொன்னால் அங்கும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இந்தத் திட்டம் தொடரவேண்டும் என்ற எனது ஆசையைத்தான் கூறினேன்; வேறு ஒன்றும் இல்லை.

அதேபோல், பஸ் கட்டணத்தைப் பொறுத்தவரையிலே யதார்த்த நிலையைப் பார்க்கப்போனால், நிச்சயமாக பஸ் கட்டணத்தை உயர்த்தாமல் இன்றைக்கு நிர்வாகத்தை இயக்க முடியாது என்பது

[திரு. என்.ஆர். ரெங்கராஜன்] [2012 பிப்ரவரி 2

எங்களுக்குப் புரிகின்றது. ஆனால், அதைப் பொறுத்தவரையிலே long jump ஆகப் போகாமல் short jump ஆகப் போயிருக்கலாம். சிறிது சிறிதாக உயர்த்தியிருக்கலாம் என்ற கருத்தையும் நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு அடிக்கடி short jump செய்து, அடிக்கடி டீசல் விலையை ஏற்றிக்கொண்டே இருப்பதால்தான், நாங்கள் வேறு வழியில்லாமல் ஒரேயடியாக long jump செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** சிறிது சிறிதாக உயர்த்தியிருக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள், கடந்த வாரம் பத்திரிகையிலே ஒரு செய்தியை வெளியிட்டிருந்தார்கள். அதிலே மரியாதைக்குரிய மறைந்த முதல்வர்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள், புரட்சித் தலைவர் அவர்களுடைய நினைவிடங்களைச் சீர் செய்வதற்காக 8½ கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்ற செய்தியை நானும் பார்த்தேன். முன்னாள் முதல்வர்கள் பெருந்தலைவர் காமராஜர், பக்தவத்சலம் போன்றவர்களின் நினைவிடங்களும் மிகவும் மோசமாக இருக்கக்கூடிய நிலையை நானும் பார்த்தேன். எனவே, அவற்றுக்கும் தனியாக நிதி ஒதுக்கீடு செய்து, பழுது நீக்கம் செய்யவேண்டும் என்ற எங்களுடைய கோரிக்கையையும் உங்களிடம் வைத்து, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறக்கூடிய நேரத்திலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மற்றுமொரு சிறிய கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.



2012 பிப்ரவரி 2]

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, அந்த நினைவிடங்களை எல்லாம் புதுப்பிக்கும் பணி கூடிய விரைவில் நடைபெறும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** அதற்காக என்னுடைய நன்றியை காங்கிரஸ் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். தயவுசெய்து நான் பேசுவதைச் சற்று நீங்கள் கேட்கவேண்டும். அதை ஒரு கோரிக்கையாகத்தான் நாங்கள் கூறுகின்றோம். இன்று காலையில் நடந்த சம்பவத்தைப் பொறுத்தவரையிலே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்மீது உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டு, தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று காலையில் நடைபெற்ற அவை உரிமைக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவைத்தான் நான் இங்கே அறிவித்தேன். (குறுக்கீடு) So, please sit down. காலையிலேயே முடிந்து போன விஷயம் அது.

பிற்பகல் 1–10

## 6. அறிவிப்பு

### பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளையொட்டி 3–2–2012 அன்று பேரவை நிகழ்ச்சிகள் பிற்பகல் 1–00 மணியளவில் முடிவுறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாளையொட்டி 3–2–2012 அன்று திருக்கோயில்களில் நடைபெறும் சமபந்தி விருந்தில் மாண்புமிகு அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்வதற்கு ஏதுவாக, சட்டமன்ற நிகழ்ச்சிகள் நாளை பிற்பகல் 1–00 மணியுடன் முடிவுறும் என்பதைப் பேரவையின் அனுமதியோடு பேரவை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 பிப்ரவரி 2

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

***திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012 ஆம் ஆண்டில் நடைபெறும் முதல் சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரில், மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பங்கேற்க வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்'

என்ற குறளை இம்மாமன்றத்தில் நினைவுபடுத்தி என் உரையைத் தொடங்குகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள், தமிழக ஆளுநராகப் பொறுப்பேற்று முதன்முறையாக சட்டமன்றத்தில் உரையாற்றியிருக்கிறார். எனது அருமைச் சகோதரர், மாண்புமிகு உறுப்பினர் முனைவர் தமிழரசன் அவர்கள் சொன்னதுபோல, தமிழக அரசு எவ்வாறு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது; மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையிலே இந்த நிருவாகம் எப்படி நடந்து வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகின்ற ஒரு முன்னுரையாக மேதகு ஆளுநர் உரை அமைந்திருக்கிறது; நான் பாராட்டுகிறேன். அப்படித்தான் இந்த அரசு நடந்துகொண்டிருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும்.

பதவியேற்ற 8 மாத காலத்திலேயே சென்ற ஆட்சியில் நடந்த அவலங்களையெல்லாம் தீர்த்து வைத்து, அந்தச் சுமைகளையெல்லாம் தன்மீது சுமந்துகொண்டு, பல நலத் திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் சிறப்பாகச் செயல்படுத்திய பெருமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குதான் உண்டு என்றால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி)

நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, சென்ற ஆண்டு நடந்து முடிந்த தேர்தலில், தமிழக மக்கள் ஒட்டுமொத்தமாக, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள்மீது நம்பிக்கை வைத்து, பெரும்பான்மையோடு





வெற்றி பெறச் செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் சொன்னதில் எனக்கு எந்தவித மாற்றுக் கருத்தும் கிடையாது. அவர்கள் தனித்து நின்றிருந்தால்கூட, அவர்கள் வெற்றி பெற்றிருக்க முடியும் என்ற கருத்தை நான் அவர்களிடம் வலியுறுத்தி, அதை ஏற்றுக்கொள்கிற சூழ்நிலை இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், தமிழகத்தில் ஒரு ஆட்சி நடந்து வந்தது. அந்த ஆட்சி சரியாக இல்லாமல், ஊழல் மிகுந்த ஆட்சியாக, எந்தவொரு வளர்ச்சித் திட்டத்தையும் மக்களுக்காக அர்ப்பணிக்காமல், ஒரு குடும்பம் மட்டும் நன்றாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே, சட்டம்—ஒழுங்கு சீர்குலைக்கப்பட்ட சூழ்நிலையிலே, யார் சிறப்பாக ஆட்சி புரிய முடியும் என்று மக்கள் கருதும் சூழ்நிலையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நல்லாட்சி அமைப்பதற்காக நல்லதோர் கூட்டணியை அமைத்து, அந்த வெற்றியைத் தேடித் தந்து தமிழக மக்களுக்கு மகிழ்ச்சிகரமான செய்தியை அவர்கள் தந்திருக்கிறார்கள். ஒரு நாடு வளர்ச்சியடைய வேண்டுமென்றால், கல்வி, சுகாதாரம், தொழில், விவசாயம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் வளர்ச்சி என்ற அடிப்படையிலே செயல்பட வேண்டும். காவல் துறை உட்பட சிறப்பாக இருக்க வேண்டும்.

இங்கே பேசிய சிலர், காவல் துறை, சட்டம்—ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது என்று சொல்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலே சட்டம்—ஒழுங்கு சீர்குலைந்தது என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். இன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போதுகூட, சில காரணத்திற்காக சில மக்களின் உள் அழுத்தத்தினால், இன்று ஏற்படுகின்ற cultural explosion என்று சொல்கின்ற சூழ்நிலையிலே மக்களின் மனம் மட்டுமல்லாமல், மக்களின் பழக்கவழக்கங்களும் மாறிவருகின்ற சூழ்நிலையிலே, பல கொலை, கொள்ளைகள் நடப்பதால், அதனை சட்டம்—ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது என்று நாம் சுட்டிக்காட்டக்கூடாது என்பதை நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு கணவன், தன் மனைவி வேறு ஒருவருடன் தொடர்பு கொண்டிருக்கிறாள் என்பதால் அவளைக் கொலை செய்தால், சட்டமன்றத்தில் அதைச் சொல்லும்போது அந்தக் குற்றம் கண்டுபிடிக்கப்பட்டு, அந்தக் குற்றவாளி தண்டிக்கப்பட்டிருக்கிறாரா என்று கேட்டால், இந்த அரசு நிச்சயமாக அந்தத் தண்டனையை

[திரு. ரா. சரத்குமார்] [2012 பிப்ரவரி 2

சிறப்பாக வழங்கிக்கொண்டிருக்கிறது என்றுதான் நாம் சொல்ல வேண்டும். ஆக, ரவுடிகள் செய்கின்ற கொலைகள் என்பது வேறு, குடும்பத் தகராறுகள் காரணமாக நடக்கிற கொலைகள் என்பது வேறு. ஆனால் கொலை ஒன்றுதான். ஆனால், சட்டம் சிறப்பாகச் செயல்பட்டு, அந்தக் குற்றவாளியைக் கண்டுபிடித்து, குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தும் என்பது உண்மை.

விவசாயம், கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளிலே பல அரசாணைகளை உடனடியாக அமல்படுத்தி, இந்த அரசு சிறப்பாகச் செயல்பட்டு, தொலைநோக்குப் பார்வையுடன், தொலைநோக்குச் சிந்தனையுடன் செயல்படும் என்று உறுதியளித்திருப்பது பாராட்டத்தக்கதாக இருக்கிறது.

மேதகு ஆளுநர் உரையில் பல சிறந்த கருத்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. முக்கியமாகச் சொல்ல வேண்டுமென்றால், 'தானே' புயலின் சீற்றத்தினால் கடலூர், விழுப்புரம் மற்றும் நாகப்பட்டினம் போன்ற மாவட்டங்களிலுள்ள மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளானார்கள். போர்க்கால அடிப்படையிலே அரசு உடனடியாகச் செயல்பட்டிருக்கிறது. அது சாதாரணமான புயல் அல்ல. இப்படி ஒரு புயல் நம்மைத் தாக்கியதே இல்லை. சுனாமிக்குப் பிறகு, நாம் ஒரு பேரிழப்பைச் சந்தித்திருக்கிறோம் என்றால், அது 'தானே' புயலால்தான். 'தானே' புயல் பேரிழப்பை ஏற்படுத்தியவுடன், ஹெலிகாப்டரில் சென்று aerial view-ல் பார்த்தால்தான் அங்கே எவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பது தெளிவாகத் தெரியும் என்பதை உணர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உடனடியாகப் போர்க்கால அடிப்படையிலே நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டு, சிறப்பான முறையிலே தனது அமைச்சர் பெருமக்களையும் அனுப்பி, அங்கே பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணத்தை வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1–15

கடலூர், விழுப்புரம் மாவட்டங்களிலே பயிர்கள், முக்கியமாக முந்திரி, பலா போன்ற perennial crops நிரந்தரமாக அழிந்திருக்கின்றன. அந்த perennial crops அழிவைத் தடுப்பதற்கு, துன்பத்திலே இருக்கின்ற அந்த விவசாயிகள் அந்த perennial crops–ஐ மீண்டும் பயிரிடுவதற்காக, அந்தப் பயிர்களின் அவசியத்தை உணர்ந்து, இப்பயிர்களின் பராமரிப்பிற்கான ஓராண்டுச் செலவை அரசு ஏற்றுக்கொண்டு, வருடாந்திரப் பயிர் வகைகள் பாதிக்கப்பட்ட இடங்களில் மீண்டும் பயிர் செய்ய ஏதுவாக விதைகள், இடுபொருட்கள் அடங்கிய சிறு தளைகளை (Mini kits) விலையின்றி வழங்க முடிவு செய்திருப்பது மாண்புமிகு முதலமைச்சரின் தொலைநோக்குப் பார்வையை நமக்கு உணர்த்துகிறது.



2012 பிப்ரவரி 2] [திரு. ரா. சரத்குமார்]

அதேபோல், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் புயலால் வீடு இழந்து தவிப்பவர்களுக்குக் குடிசைகளே இல்லாத அளவிற்கு, 1,000 கோடி ரூபாய் செலவிலே ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டித் தருகிறேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் சொன்னது பாராட்டுக்குரியது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே அருமைச் சகோதரர் பேசும்போது, மத்திய அரசு, நாம் கேட்ட நிவாரணத்தை அளிக்கவில்லை என்று சொன்னார்கள்; அது உண்மைதான். கேட்டது கிடைக்கவில்லை என்ற ஏமாற்றம் தமிழக அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சருக்கும் இருக்கும். ஆகவேதான், 5,248 கோடி ரூபாய் கேட்ட இடத்திலே, 500 கோடி ரூபாய் வழங்குகிறேன் என்று சொல்லும்போது, நிச்சயமாக அந்த நிவாரணத் தொகையைக் கொண்டு, நிவாரணப் பணிகளை நாம் முழுமையாகச் செயல்படுத்த முடியாது. இருந்தாலும், தனது அமைச்சர் பெருமக்களை அனுப்பி, அங்குள்ள அந்த மக்களின் பாதிப்புகள் என்ன என்பதை உணர்ந்து, உடனடியாகச் சிறப்பான முறையிலே, வேறு யாரும் எடுத்திராத போர்க்கால நடவடிக்கையை war footing–ல் எடுத்திருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும். அந்த அளவிற்கு அவர்கள் அத்தியாவசியத் தேவைகளான குடிநீர், மின்சாரம் இவற்றையெல்லாம் உடனடியாக வழங்குவதற்கு, சிறப்பான முறையிலே நிவாரணப் பணிகளை மேற்கொண்டதற்காக எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு மாநிலத்தின் வளர்ச்சித் திட்டங்களும் சரி, நலத் திட்டங்களும் சரி, அவை தொலைநோக்குப் பார்வையோடு இருக்கும்போது, அதற்குப் போதுமான நிதியுதவி தேவை. இதைக் கருத்தில் கொண்டு, கடந்த ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செலவிடப்பட்ட 85 ஆயிரம் கோடி ரூபாயைவிட இரு மடங்காக வரும் 12–வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், 1,85,000 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது என்ற அறிவிப்புக்காக, இத்திட்டப் பணிகள் அனைத்தும் தமிழகத்தின் துரிதமான வளர்ச்சியை உறுதிப்படுத்தும் என்கிற வகையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

[திரு.ரா. சரத்குமார்] [2012 பிப்ரவரி 2

மற்றொன்று; இங்கு மாண்புமிகு முதலமைச்சருடைய நிர்வாகம் என்பது தொலைநோக்குச் சிந்தனையுடன் இருக்கிறது என்று நான் பலமுறை சொல்லியிருக்கின்றேன். "The Hon'ble Chief Minister by her able administrative qualities has performed selflessly for the benefit of the people of Tamil Nadu against all odds, in spite of precarious fiscal situation and gloomy economic environment in marching towards achieving her promise to the people of Tamil Nadu under her able leadership" என்றே சொல்லலாம்.

கடந்த ஆட்சியின் குறைகளையெல்லாம் சீர்படுத்துகின்ற கடுமையான பணியினைச் செய்கின்ற நேரத்திலும், இம்மாநிலம் பிரச்சினைகளைத் துணிச்சலோடும், நேர்மையோடும் எதிர்கொண்டு செயல்பட்டு வருகிறது. செய்கின்ற சேவைகள், ஒருசிலருக்கு வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாம். ஆனால், தமிழக மக்களுக்குத் தெரியும். தமிழக மக்களுக்கு ஒன்று என்றால், உடனடியாக அவர்கள் துயர்துடைக்க இருப்பவர்தான் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே எனக்கு ஒரு பாடல் நினைவுக்கு வருகிறது. தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழக மக்கள்மீது கொண்டிருக்கின்ற பாசத்தை நினைக்கின்றபோது, 'உன் கண்ணில் நீர் வடிந்தால், என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி' என்கிற அளவிலே (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் இருக்கும் ஒவ்வொரு குடிமகனும் சிறப்பாக இருக்க வேண்டும்; அவர்களுடைய வாழ்க்கை சிறப்பாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, அவர்களுக்காக எண்ணி, அவர்கள் உண்மையிலேயே சிறப்பாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தைப் பதிக்கின்ற வகையிலே, அவர்கள் ஆட்சி இருக்கிறது என்ற அளவிலே எனது கருத்தைச் சொல்லி, என் தொகுதி சம்பந்தமாக கீழ்க்காணும் கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்டு தென்காசி மாவட்டம் அமைக்க வேண்டுகிறேன். குற்றாலம் பேரூராட்சியின் வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டங்களை அரசு அமல்படுத்தி, ஆண்டு முழுவதும் மக்கள் வருகை தரும் வகையில் அதனைச் சுற்றுலாத் தலமாக அறிவித்திடவும், இப்பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை அமல்படுத்திடவும் வேண்டுகிறேன்.

தென்காசியில் கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பாலத்தின் மத்திய பகுதியை, இரயில்வே நிர்வாகம் விரைந்து கட்டாமல்



2012 பிப்ரவரி 2] [திரு. ரா. சரத்குமார்]

காலம் கடத்தி வருகிறது. உடனடியாக அப்பகுதியைக் கட்டி முடித்திட மத்திய அரசை, மாநில அரசு வலியுறுத்த வேண்டுகிறேன்.

தென்காசி தொகுதியிலுள்ள தென்காசி, வி.கே. புதூர் ஆகிய இரண்டு வட்டங்களில் தென்காசியில் மட்டும் கால்நடை மருத்துவமனை உள்ளது. வி.கே. புதூர் வட்டத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுகிறேன். மேலும், தமிழக அரசின் 2011–2012 ஆம் ஆண்டு மேதகு ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்ட கால்நடை மருத்துவக் கல்லூரியை திருநெல்வேலி மாவட்டம், ஊத்துமலையில் அமைத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

வீரகேரளம்புதூர் வட்டத்தில், ஆலங்குளம் ஒன்றியப் பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை 15 ஊராட்சிகளில் உள்ளது. இங்குள்ள கிராமங்களுக்கு மானூர்–சங்கரன்கோவில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது. கிராமங்களின் மக்கள் தொகை அடிப்படையில் பார்க்கும்போது, இது போதுமானதாக இல்லை. எனவே, ஊத்துமலை கிராமத்தை மையமாகக் கொண்டு அருகிலுள்ள 25 ஊராட்சிகளுக்குக் குடிநீர் வழங்கினால், மக்களுக்குப் போதுமான குடிநீர் கிடைக்கும். இதைக் குடிநீர் வடிகால் வாரியம்மூலம் ஒரு சிறப்புத் திட்டமாக எடுத்துச் செயல்படுத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

வி.கே. புதூர் வட்டத்தில் அனைத்துச் சாலைகளும் பழுதடைந்த நிலையிலும், இடையிலே பாலங்கள் இல்லாமலும் உள்ளன. இதற்காகச் சிறப்புத் திட்டம் தீட்டி செயல்படுத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பாவூர்சத்திரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் விளையும் காய்கறிகள் மற்றும் பூக்களைப் பாதுகாத்திட குளிர்சாதன வசதியுள்ள கிடங்குகள் கட்டித் தர வேண்டுகிறேன்.

தென்காசி தொகுதியில் விவசாயிகளின் நெல்லை அரசே கொள்முதல் செய்திட வழியில்லாமல் உள்ளது. எனவே, சுந்தரபாண்டியபுரம், வி.கே. புதூர் ஆகிய இடங்களில் கொள்முதல் நிலையங்களை இந்த ஆண்டே அமைத்திட அரசு ஆணையிட வேண்டுகிறேன்.

[திரு. ரா. சரத்குமார்] [2012 பிப்ரவரி 2

ஊத்துமலையைச் சுற்றியுள்ள கிராமங்களில் புஞ்சை நிலங்கள் அதிகம் உள்ளதால், விவசாயிகள் பலன் பெற ஆடு வளர்ப்புக்கு அரசு உதவிடவும், ஆடு வளர்ப்புச் சங்கம் அமைத்து கடன் வழங்கிடவும் வேண்டுகிறேன்.

தென்காசி நகருக்கு புறவழிச் சாலை (Bye-pass road) அமைக்க நிலம் கையகப்படுத்துதல் போன்ற பூர்வாங்கப் பணிகளுக்காக 9.07 கோடி ரூபாயை ஒதுக்கி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவிப்பதோடு, இந்த புறவழிச் சாலைப் பணியை விரைந்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்காசி தொகுதி, குற்றாலம் பேரூராட்சியில் ஐந்தருவி, பழத்தோட்ட அருவியின் பகுதியில் தோட்டக் கலைத் துறை சார்பாக அமைக்கப்பட்டு வரும் பூங்காவை விரைவுபடுத்தி முடிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், குற்றாலத்தில் ஒரு கொள்கை விளக்கப் பூங்கா (Theme Park) அமைக்க வேண்டுகிறேன்.

தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தென்காசி பகுதியில் விவசாயிகளுக்கு விதை சேமிப்புக் கிடங்கு கட்ட 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக மேலகரம் கிராமத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் தாழ்வாக உள்ளதாகவும், இப்பகுதியில் இந்தப் பணியை மேற்கொள்ள இயலாது எனப் பொதுப் பணித் துறை தெரிவித்துள்ளது. எனவே, வேளாண்மைத் துறைக்குச் சொந்தமான வேறொரு இடத்தை உடனடியாகத் தேர்வு செய்து, விதை சேமிப்புக் கிடங்கைக் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தென்காசியிலுள்ள பட்டுக் கூடு அங்காடியை மேம்படுத்த வேண்டுகிறேன். பெருகிவரும் மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டு, தென்காசி நகராட்சியில் மேலும் ஒரு காவல் நிலையம் ஏற்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

குற்றாலத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அலுவலகம் ஒன்றைத் திறக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். குற்றாலத்தில் ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்படும் சாரல் விழாவில், திருக்குற்றாலக் குறவஞ்சியைப் பாடிய திரிகூட ராசப்பக் கவிராயருக்கும் விழா எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.



2012 பிப்ரவரி 2] [திரு. ரா. சரத்குமார்]

குற்றால நீர்வீழ்ச்சிப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில், trekking வசதியை ஏற்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கேரளாவில் தென்மலை கல்லடா அணைப் பகுதியைச் சுற்றுச்சூழல் சுற்றுலாப் பகுதியாக மேம்படுத்தியுள்ளது போல், குற்றாலத்திலும் ஏற்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தென்காசியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பாவூர்சத்திரம் பேருந்து நிலையம் பெருந்தலைவர் காமராஜர் சிலையை அடுத்து சுமார் 2 கி.மீ. நீளத்திற்குச் சாலையை மேம்பாடு செய்ய நெடுஞ்சாலைத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன். மேட்டுப்பாளையத்தில் உள்ள பிளாக் தண்டர் போன்றும், சென்னையில் உள்ள கிஷ்கிந்தா போன்றும், தென்காசி தொகுதி குற்றாலம் பகுதியில் தண்ணீர் விளையாட்டு பொழுதுபோக்குப் பூங்கா ஒன்றை ஏற்படுத்தி ஆண்டு முழுவதும் குற்றாலத்திற்கு சுற்றுலாப் பயணிகள் வரும் வகையில் மேம்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் உரையிலே பல அம்சங்கள் இருந்தாலும், பசுமைப் புரட்சித் திட்டத்தை உடனடியாக அமலுக்குக் கொண்டு வருவோம் என்று சொல்லியிருப்பதும், கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக மடிக் கணினிகள் கொடுப்பது என்பதும் பாராட்டுக்குரியவை ஆகும். மேலும், தமிழக அரசு உண்மையாக, நேர்மையாக, உறுதியாக, சிறப்பாக நடைபெறும் என்கிற உத்தரவாதத்தை அளிக்கின்ற வகையிலே இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

கடைசியில், ஒரேயொரு குறளை மட்டும் சொல்லி, எனது உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

‘அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்’

என்று சொல்லி, மீண்டும் ஒரு முறை மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பான இந்த ஆட்சி, தொடர்ந்து சிறப்பான வழியிலே நடக்கும் என்பதை உறுதி செய்யும் வகையிலே இந்த ஆளுநர் உரை இருந்தமைக்கு என் சார்பிலும் சமத்துவ மக்கள்

[திரு. ரா. சரத்குமார்] [2012 பிப்ரவரி 2

கட்சியின் சார்பிலும் நன்றி கூறி விடைபெறுகின்றேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

பிற்பகல் 1–20

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கருத்துகளைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளும், ஆயிரம் கோடி ரூபாயில் ஒரு இலட்சம் வீடுகளும், 25,335 குக்கிராமங்களுக்கு சாலை, குடிநீர், தெரு விளக்கு வசதி, வாடகையில் இயங்கி வரும் அனைத்து மாணவர் விடுதிகளுக்கும் அரசின் சொந்தக் கட்டடம் ஆகியன பாராட்டுக்குரிய நல்ல அம்சங்களே. ஆளுநர் உரையில், ஏற்கெனவே அமலாகி வருகின்ற சில திட்டங்களைக் குறிப்பிட்டிருந்தாலும், தமிழக மக்களின் எதிர்பார்ப்புகளையும், தேவைகளையும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் அரசியல் கடமை என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாநிலங்களின் அதிகாரங்களைப் பறிக்கும் வகையில், ஒரேமாதிரியான அணுகுமுறையைத் திணிப்பது போன்ற நடவடிக்கைகளைக் கையாண்டு வரும் மத்திய அரசின் போக்கினைச் சுட்டிக்காட்டியிருப்பது, மாநில அரசின் கடமையை, உரிமையை வலியுறுத்துவது, நல்ல அம்சமே.

"உலகப் பொருளாதாரத்தில் தொடர்ந்து காணப்படும் மந்த நிலையின் காரணமாக தேசிய அளவில், 2011–2012 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சி மதிப்பீடு கணிசமான அளவு குறைக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஏற்படும் எதிர்மறை விளைவுகளால் மாநிலப் பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்படுவது தவிர்க்க இயலாததாகும்" என்று பக்கம் 9–இல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆம், உலகமயம், தனியார்மயம், தாராளமயம் ஆகிய கொள்கைகளின் விளைவால் இந்தியாவிலும், தமிழகத்திலும் ஏற்பட்டுள்ள பாதிப்பினை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகிறது.



2012 பிப்ரவரி 2] [திரு. ப. டில்லி பாபு]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வறுமை ஒழிப்புத் திட்டம், வறுமையை ஒழிப்பதற்குப் பதிலாக நாட்டை பட்டினிச் சாவுக்கு இட்டுச் சென்றுள்ளது. தினமும் இருபது ரூபாய் வருமானம் ஈட்ட முடியாதவர்கள் 70 சதவீத மக்கள் இன்று இந்தியத் திருநாட்டில் வாழ்கிறார்கள் என்று பொருளாதார நிபுணர் திரு. அசீம் தாஸ்குப்தா அவர்கள் அறிக்கையைப் பாராளுமன்றத்திலே சமர்ப்பித்திருக்கிறார்கள்.

தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தில் வழங்கப்படும் தினக்கூலி ரூ.119/– பெரும்பாலும் வழங்கப்படுவதில்லை. இன்றைய விலைவாசி உயர்வுக்கு ஏற்ப தமிழகத்தில் தினக்கூலி ரூ.100/–ஐ உயர்த்தி ரூ.150/– ஆக வழங்கிட இவ்வரசு முன்வர வேண்டுகிறோம். அதேபோல, 100 நாட்கள் வேலைவாய்ப்பினை 200 நாட்கள் என அதிகப்படுத்திட வேண்டுகிறோம்.

தமிழகத்தில் வீடற்ற குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட மீண்டும் சிறப்பு உத்தரவு பிறப்பித்து, அரசின் புறம்போக்கு நிலங்களில் கால் நூற்றாண்டு காலம், அரை நூற்றாண்டு காலமாக வாழ்ந்துவருவோருக்கு—அது கோவில் புறம்போக்கு நிலமாக இருந்தாலும் சரி, மற்ற புறம்போக்கு நிலமாக இருந்தாலும் சரி—பட்டா வழங்கிட இவ்வரசு முன்வர வேண்டுகிறோம்.

மத்திய அரசின் உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் தற்போதைய வடிவத்தை எதிர்ப்பது, சட்டத்திலிருந்து விலக்களிக்க வேண்டும் என்பது, சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் என மத்திய அரசைக் கோருவது தமிழக அரசின் வரவேற்கத்தக்க நடவடிக்கைகளாகும்.

அதேபோல, அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் உரிய ஒதுக்கீடு அளவிலான மண்ணெண்ணெய், சர்க்கரை, கோதுமை, பருப்பு வகைகள் 100 சதவீதம் கிடைத்திட மத்திய அரசை மீண்டும் வற்புறுத்த வேண்டுகிறோம். இன்றைக்கும் மண்ணெண்ணெய் கிடைக்காமல் பரிதவிக்கிற 20 சதவீதக் குடும்பங்கள் தமிழகத்தில் உண்டு.

[திரு. ப. டில்லி பாபு] [2012 பிப்ரவரி 2

வன உரிமைச் சட்டம் இந்திய நாட்டில் அமல்படுத்தப்பட்டு சுமார் ஆறு ஆண்டுகாலம் ஆகியும், துரதிருஷ்டவசமாக தமிழகத்தில் மட்டும் அமல்படுத்தப்படவில்லை. நீதிமன்றம் இச்சட்டத்தினை அமல்படுத்த உத்தரவிட்டும், நிலப் பட்டா வழங்கலாம் என்று வழி காட்டியும் இன்னும் சட்டம் அமலாக்கப்படாமல் சுமார் நான்கு இலட்சத்திற்கு மேற்பட்ட பழங்குடி மக்கள் வாழ்ந்து வரும் மலைப் பகுதிகளில் இன்றுவரை எந்த நில உரிமையும் பெறாமலே உள்ளனர். பழங்குடியின மக்களது வாழ்வுரிமைப் பிரச்சினையில் எந்த ஆட்சியானாலும் ஒரே பார்வைதான் உள்ளது. கடந்த ஆட்சியில் கொண்டு வந்த எத்தனையோ விஷயங்களை மாற்றிய இவ்வரசு, மலைவாழ் மக்கள், பழங்குடியின மக்களது நிலங்களுக்கு, வீடுகளுக்கு பட்டா வழங்கிட தடை விதிக்கும் 1989 ஆம் ஆண்டு தடையாணை எண் 1168–ஐ மட்டும் மாற்றாமல் இருப்பதை இவ்வரசின் கவனத்திற்கு மீண்டும் கொண்டுவருவதுடன், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இத்தடையாணையை இரத்துச் செய்து மலைவாழ் மக்களுக்கு பட்டா வழங்கிட வேண்டுகிறேன்.

அதேபோல, ஆதி திராவிட மக்களது நீண்டகால கோரிக்கையான பஞ்சமி. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுக்கு பட்டாக்கள் வழங்குவதிலே தடைகள் இருக்கின்றன. அதைப் பொறுத்தவரையிலும், மத்திய அரசு அதைப் பரிசீலனை செய்துதான் அந்தத் தடைகள் நீக்கப்பட வேண்டும். ஆகவேதான், மலைவாழ் மக்கள் குடியிருக்கின்ற இடங்களிலே பட்டா வழங்குவதிலே சில தடைகள் இருந்தாலும்கூட, சிலவற்றில் நியாயமான முறையில் ஆராய்ந்து மத்திய அரசுக்கு பரிந்துரை அனுப்பப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1–25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்ததற்கு நன்றி. திராவிட முன்னேற்றக் கழக



2012 பிப்ரவரி 2] [திரு. ப. டில்லி பாபு]

ஆட்சிக் காலத்தில் 1989 ஆம் ஆண்டு வன நிலங்களில் மலைப் பகுதிகளில் வீடு கட்டிக் குடியிருக்கக்கூடிய பகுதிகளுக்கும் அங்கு உழுது பயிர் செய்யும் நிலங்களுக்கும் பட்டா வழங்குவதற்கு தடை பிறப்பித்து, 1989 முதல் ஏறக்குறைய 20 ஆண்டுகாலமாகிவிட்டது. அந்தத் தடையாணை இன்றுவரை இரத்து செய்யப்படவில்லை. அந்தத் தடையாணை இரத்து செய்யப்படுவதன் மூலமாக அந்தப் பகுதி மக்களுக்கு பட்டா கிடைக்கும் என்று நான் கருதுகிறேன்.

ஆதி திராவிட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று பஞ்சமி நிலம், பஞ்சமர்களான ஆதி திராவிட மக்களுக்கு ஒப்படைவு செய்யப்படவேண்டும். தமிழகத்தில் சுமார் ஒரு இலட்சத்து பத்தாயிரம் ஏக்கர் நிலம், பெரும்பான்மையான நிலம், தலித் மக்களுக்குச் சென்று சேரவில்லை. திருவண்ணாமலை மாவட்டம், வட அனந்தல்பட்டி கிராமத்தில்கூட ஒரு மாதத்திற்கு முன்பாக சுமார் 17 ஏக்கர் பஞ்சமி நிலத்தில் வீடற்ற தலித் மக்கள் வீடுகட்டுவதற்காகச் சென்றபோது அனுமதி மறுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டனர். ஆக, அத்தகைய நிலங்களை அந்த மக்களுக்கு வழங்கிட வேண்டுகிறோம். பழங்குடி மக்களின் நீண்ட நாள் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்.

தமிழகத்தில் வாழும் 36 வகையான பழங்குடி மக்களில் சுமார் மூன்றில் ஒரு பங்கு பழங்குடி மக்கள் மட்டுமே இனச்சான்று பெற்றுள்ளனர். மீதமுள்ள இரண்டு பங்கு மக்களுக்கு இன்னும் இனச்சான்று கிடைக்கவில்லை. விண்ணப்பித்தால் ஒரு வருடம், இரண்டு வருடம் என இழுத்தடிக்கப்படுகிறது. 15 தினங்களில் சாதிச் சான்றிதழ் வழங்குவதை இவ்வரசு உறுதிப்படுத்த வேண்டுகிறேன். பழங்குடியினர் நலத் துறையினரும், வருவாய்த் துறையினரும் இணைந்து. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தொடர்ந்து இதே கோரிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறார். அந்தப் பகுதியிலே என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். குறிப்பாக கடந்த முறையும் நான் சொல்லியிருக்கிறேன். குரும்பாஸ், குருமன்ஸ் என்பதற்கு எஸ்.டி. என்றும், குரும்பா என்பது எம்.பி.சி. என்றும் இருக்கிறது. அப்படி ஏதாவது தவறு

[திரு. பி. தங்கமணி] [2012 பிப்ரவரி 2

நடந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் அரசு ஒரு கட்டுப்பாட்டை வைத்திருக்கின்றது. இப்பொழுது கமிட்டி ஒன்றை அமைத்திருக்கின்றார்கள். அந்த கமிட்டியின் மூலமாக உண்மையாக யார், யார் குருமன்ஸ் மலைவாழ் மக்கள் இருக்கின்றார்களோ அவர்களுக்கு சான்றிதழ் வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றார்கள் என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதுவும் இல்லாமல் அம்மா அவர்கள் ஒரு திட்டம் ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறார்கள். 10 ஆம் வகுப்பில் படிக்கின்ற அத்தனை மாணவர்களுக்கும் பள்ளிகளிலேயே சான்றிதழ் வழங்க வேண்டுமென்று இந்த ஆண்டு 10 ஆம் வகுப்பில் படிக்கின்ற கிட்டதட்ட பத்து இலட்சம் மாணவர்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்கியிருக்கின்றோம். அதில் மலைவாழ் மக்கள் இருந்தால் அவர்களுக்கும் சாதிச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது என்பதும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெற்றோர்கள் சாதிச் சான்றிதழ் பெற்றிருந்தும், அவர்கள் பெற்ற பிள்ளைகளுக்கு மறுக்கப்படுகிறது. அதற்கான விவரம்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் ஏற்கெனவே அளித்திருக்கின்றேன். இரண்டு குழந்தைகள் பெற்றிருந்தால் ஒரு குழந்தைக்கு. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூரிலே உள்ள நேர்வு பற்றி அவர் கொடுத்திருந்தார். பெற்றோர்கள் பெற்ற சான்றிதழே தவறு என்று ஒரு கேஸ் போட்டிருக்கின்ற காரணத்தினால், அதில் உண்மையைக் கண்டறிந்து அதன் பின்னால் அதற்கான சான்றிதழ் வழங்கப்படும் என்று ஏற்கெனவே தெரிவித்திருக்கின்றோம். தெரிந்தும் அந்தக் கேள்வியைக் கேட்டுக்கொண்டு இருக்கின்றார். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கு இந்த சான்றிதழ் வழங்குவதில் எந்தவிதமான தடையும் கிடையாது. உள்ளபடியே அந்த சான்றிதழை வைத்து ஏதாவது தவறு நடந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான்,



2012 பிப்ரவரி 2] [திரு. பி. தங்கமணி]

அதை விசாரித்து, வழங்க வேண்டும் என்று ஆணையிட்டிருக்கின்றார்கள். அதற்கும் ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறார்கள். நிச்சயமாக வருங்காலத்தில் அந்தத் தடை நீக்கப்பட்டு, உரிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சாதிச் சான்றிதழ் என்பது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. எங்கள் மாவட்டத்தில்கூட காட்டுநாயக்கர் சாதியில் ஏற்கெனவே உறவினர்கள் சாதிச் சான்றிதழ் வாங்கியிருக்கிறார்கள். பெற்றோர்கள் வாங்கியிருக்கிறார்கள். வேலைக்குப் போய் இருக்கிறார்கள். ஆனால், இப்போது இருக்கக்கூடிய தலைமுறையினருக்கு சாதிச் சான்றிதழ் மறுக்கப்படுகிறது. உயர் நீதிமன்றத்திற்குச் சென்று . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் என்ன கேட்க வேண்டுமோ அதைச் சீக்கிரம் கேட்டு முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** அதற்குத் தீர்ப்பும் பெற்றாகிவிட்டது. தீர்ப்பு பெற்றதற்குப் பிறகும்கூட, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோ அல்லது கோட்டாட்சியர் அவர்களோ முடிவை எடுக்க மறுக்கிறார்கள். அதை கமிட்டிக்கு அனுப்புகிறார்கள். இப்படியெல்லாம் அனுப்பி அவர்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. எனவே, இதில் ஒரு திட்டவட்டமான முடிவை அரசு எடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காட்டுநாயக்கர் என்பவர் எஸ்.டி. வகுப்பைச் சேர்ந்தவர்கள். தொட்டிநாயக்கர் என்பவர் எம்.பி.சி. என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களுடைய பெற்றோர்கள் ஏற்கெனவே சான்றிதழ் வாங்கிக்கொண்டு வெளி மாநிலத்திற்கும், வெளி மாவட்டத்திற்கும் சென்றுவிட்டார்கள் என்று சொன்னீர்கள். எந்த ஆதாரமும் இல்லாமல் அவர்கள் குழந்தைகளுக்கு எப்படி எஸ்.டி. சான்றிதழ் கொடுப்பார்கள், எப்படி மலைவாழ் மக்கள்

[திரு. பி. தங்கமணி] [2012 பிப்ரவரி 2

என்று சான்றிதழ் கொடுப்பார்கள் என்பதை நீங்கள் நன்றாக யோசித்துப் பார்க்கவேண்டும். அதற்காகத்தான் இப்போது மாண்புமிகு அம்மா அவர்கள் தலைமையிலே ஒரு கமிட்டி போட்டிருக்கிறார்கள். அம்மா அவர்களுடைய அரசு ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறது. அந்தக் கமிட்டி ஒவ்வொரு பகுதியிலும் ஆய்வு செய்து, தகுதியான நபர்களுக்கு அந்த சான்றிதழை வழங்கவேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். வருங்காலத்தில் அந்தப் பிரச்சினை இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு சி.பி.ஐ.(எம்) உறுப்பினர் பேசுவதை, 'தெரிந்தே பேசுகிறார், தெரிந்தே பேசுகிறார்' என்று சொல்கிறார். அவருக்குத் தெரியாததனால்தான் தெரிந்துகொள்வதற்காகப் பேசுகின்றார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு உறுப்பினர் மூன்றாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்கிறார். தொடர்ந்து அதையே சொல்வதன் காரணமாகத்தான் 'தெரிந்தே பேசுகிறார்' என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. அரசு உயர் அதிகாரிகளால் அளிக்கப்பட்ட அந்தச் சான்றிதழைக்கொண்டு அவர்கள் பெற்ற பிள்ளைகளுக்கு விண்ணப்பிக்கும்போது, இன்னொரு அதிகாரி வந்து இந்தச் சான்றிதழ் செல்லாது என்று சொல்வது எந்த விதத்தில் நியாயமென்று தெரியவில்லை. இருந்தாலும், அரசு பல்வேறுபட்ட சிறப்பு முகாம்களை நடத்துகிறது. கால்நடை சிறப்பு முகாம், பட்டா



2012 பிப்ரவரி 2] [திரு. ப. டில்லி பாபு]

மாறுதல் சிறப்பு முகாம், ஓய்வூதிய சிறப்பு முகாம் என்று இப்படி பல சிறப்பு முகாம்கள் நடத்துகிறது. தமிழகத்தில் பழங்குடியின மக்கள் பெரும்பான்மையாக வாழக்கூடிய 16 மாவட்டங்களில் வருடத்தின் ஏதாவது ஒரு மாதத்தில் சிறப்பு முகாம் நடத்தி அனைவருக்கும் சாதிச் சான்றிதழ் வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, அதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். சாதிச் சான்றிதழ்கள் வழங்குவதிலே எங்கெங்கே குறைபாடுகள் இருக்கின்றனவோ அவற்றை விரைவாக ஆய்ந்து, அந்தக் குழுவின் மூலமாக உடனடியாக முனைந்து நடவடிக்கை எடுப்பதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட குறைபாடுகள் எங்கே இருக்கிறது என்பதை நீங்கள் சுட்டிக்காட்டுவீர்களானால் அந்தக் குழுவின் மூலமாக உடனடியாகப் பரிசீலனை செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கு மீண்டும் ஒரு முறை சொல்லிக்கொள்கின்றேன். சிறப்பு முகாமே வேண்டியதில்லை. இப்போது பத்தாம் வகுப்பு படிக்கின்ற அத்தனை மாணவர்களுக்கும் மலைவாழ் மக்களாக இருந்தாலும் கடந்த டிசம்பர் 31 ஆம் தேதிக்குள் அவர்களுக்கான சாதிச் சான்றிதழ் கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்டு, வழங்கப்பட்டுள்ளது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஏற்கெனவே சான்றிதழ் வாங்காதவர்களுக்கு மட்டும் இந்த கமிட்டி மூலம் ஆய்வு செய்து அவர்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பசுமை வீடுகள் திட்டத்தில் வழங்கப்படுவதுபோல் ‘தானே’ புயலால் பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகளுக்கும் 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாயை வழங்கிட அரசு முன்வர வேண்டும். அதேபோல் 20 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளைப் பழுதுபார்த்திட 25,000 ரூபாயை வழங்கிட வேண்டுகிறோம்.

தமிழக முதல்வர் அவர்கள் “உச்ச நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவேன்” என்று மிகக் கண்ணியத்துடன் சட்டமன்றத்திலே அறிவித்தும் பல தனியார் பள்ளிகள் பழைய பாடத் திட்டத்தின்படியே இன்றைக்கும் பாடத்தை நடத்தி வருகிறார்கள். தனியார் பள்ளிகளிலும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் சமச்சீர் கல்வியை தமிழக அரசு கறாராக அமலாக்க வேண்டுகிறோம். சென்னையிலேகூட அயனாவரம், கல்கி ரங்கநாதன் மான்டேக் பள்ளியிலே பழைய பாடத் திட்டத்தின்படி இன்றும் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஈரோடு பகலவன், தந்தை பெரியார் சமூக விடுதலைக்காகப் போராடியபோது, அரசியல் மாற்றம் மட்டுமே சமூக விடுதலைக்கு வித்திடுமென்று அரசியலில் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரில் அமைக்கப்பட்ட அண்ணா நூற்றாண்டு நூலகம், நூலகமாகச் செயல்பட வேண்டும். நூலகத்திற்காக அமைக்கப்பட்ட ஆடிட்டோரியத்தை செய்தித் தொடர்புத் துறையிலிருந்து மீண்டும் நூலகத் துறைக்கே மாற்றுவதன் மூலமாக அதைப் பராமரித்துக்கொள்ள முடியும். உறுப்பினர்களின் மூலமாக . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அண்ணா நூலகத்தைப் பற்றி இங்கே சொன்னார்கள். ஒரு நூலகம் என்றால் அவர்கள் சொல்லியதைப்போல, அதை நூலகமாகக் கட்டியிருந்தால் பரவாயில்லை. ஆனால், அந்த நூலகத்திலே நூலகத்திற்குத் தேவையில்லாத அளவிற்கு 1,300 பேர் அமரக்கூடிய ஒரு கலையரங்கம். 800 பேர் அமர்ந்து பார்க்கக்கூடிய ஒரு



திறந்தவெளி அரங்கம். அதுவும் பற்றாமல் 400 பேர் அமர்ந்து பார்க்கக்கூடிய இன்னொரு கலையரங்கம். அதுவும் பற்றாமல் 130 பேர் அமர்ந்து பார்க்கக்கூடிய ஓர் ஆய்வரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு நூலகத்திலே 4 அரங்கங்கள் எதற்கு? கட்டியது எதற்காக? கட்டிவிட்டு, அதற்கான பராமரிப்புச் செலவை யார் மேற்கொள்வது? அந்த நூலகத்திற்கு சென்னை நகரத்தில் மட்டும் 158 கிளை நூலகங்கள் இருக்கின்றன. அந்தக் கிளை நூலகங்களுக்கு சென்னை நூலகத்தின் மூலமாக ஒரு ஆண்டுக்கு வருகின்ற வருவாய் 12 கோடி ரூபாய். அந்த 158 நூலகங்களுக்கு ஏற்படுகின்ற செலவு, ஊழியர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளம் 4 கோடி ரூபாய், கட்டடங்கள் கட்டுவது உட்பட. அது இல்லாமல் ஒரு ஆண்டுக்கு 25 சதவிகித தொகை புத்தகங்கள் வாங்குவதற்காக ஒதுக்கப்பட வேண்டும். அதற்கு 4 கோடி ரூபாயை எடுத்து வைத்துவிட வேண்டும். ஆனால், அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு ஆகின்ற செலவு எவ்வளவு தெரியுமா? 8 கோடி ரூபாய். ஒரே நூலகத்திற்கு செலவு செய்யப்படுகின்ற தொகை 8 கோடி ரூபாய். அந்த 8 கோடி ரூபாய் எதிலிருந்து எடுக்கப்படுகிறதென்றால், இந்த நூற்றாண்டு நூலகத்திலிருந்து எடுக்கப்படுகிறது. இந்தத் தொகை இதே சென்னையில் இருக்கின்ற 158 நூலகங்களுக்கும் செலவு செய்யப்பட வேண்டிய தொகை. அதிலிருந்து எடுத்துக் கொடுக்கப்படுகிறது. அப்படியே இருந்தாலும் இன்னும் 4 கோடி ரூபாய் குறைகின்றது. கலையரங்கத்தைக் கட்டி வைத்துவிட்டு, அந்தக் கலையரங்கத்தை சும்மா வைத்திருக்கச் சொல்கிறீர்களா? வழக்கு போட்டிருக்கிறார்கள். வழக்கினாலே அந்த நூலகத்தைப் பயன்படுத்தாமல் வைத்திருக்கிறார்கள். கலையரங்கத்தைப் பயன்படுத்தாமல் வைத்திருக்கிறார்கள். வருமானத்திற்கு வழி இல்லாமல் வைத்திருக்கிறார்கள். இப்போது அந்தக் கலையரங்கத்தை செய்தித் துறைமூலம் வாடகைக்கு விட்டதால் ஒரு நாளைக்கு ரூ.2 இலட்சம் வரை வருமானம் வருகிறது. அதைவிட்டுவிட்டு செம்மொழி மாநாடு, கனிமொழி மாநாடு நடத்துவதற்காகவா கலையரங்கம் கட்டப்பட்டது? இதற்கு அவர்கள் பதில் சொல்லவேண்டும்.

பிற்பகல் 1–35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, சீக்கிரம் பேசி முடியுங்கள்.(குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

[2012 பிப்ரவரி 2

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கற்கை நன்றே, கற்கை நன்றே; பிச்சைப் புகினும் கற்கை நன்றே" என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே, படிப்பதில்போய் இலாப நஷ்டக் கணக்கு பார்க்க முடியாது. பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் இயங்கிக்கொண்டிருக்கக்கூடிய, ஆசிய கண்டத்திலேயே புகழ் பெற்ற ஒரு நூலகம் அது. உங்களுக்குத் தெரியும்; சென்னை நகரத்தில் இருக்கக்கூடிய நடுத்தரக் குடும்பத்தில் இருக்கக்கூடிய குழந்தைகள், இளைஞர்கள், பெண்கள் அனைவரும் அந்த நூலகத்திற்குச் சென்று படிக்கிறார்கள். நான்கு அரங்கங்கள் சும்மா இருக்கின்றன என்றால், அவற்றில்கூட நீங்கள் புத்தகங்களை வையுங்கள்; படிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் சொன்னதைத் தவறாக புரிந்துகொண்டார்கள். அந்தக் கலையரங்கத்தில் நூலகம் வைக்க முடியாது. அது கலையரங்கமாகக் கட்டப்பட்டிருக்கிறது. நூலகத்திலே எதற்குக் கலையரங்கம் கட்டப்பட்டது? முதலில் நீங்கள் அங்கு சென்று பார்த்திருக்கிறீர்களா? பதில் சொல்லுங்கள். அங்கு கலையரங்கம் எதற்கு? நூலகத்திலே கலையரங்கம் எதற்கு என்று தயவுசெய்து சொல்லவேண்டும். சரி, ஒரு கலையரங்கம் கட்டினீர்கள். உலகம் முழுவதிலும் இருந்து வந்து ஒரு ஆய்வரங்கம் நடத்தலாம். ஒரு கலையரங்கம் கட்டியிருந்தால் நியாயம். திறந்தவெளிக் கலையரங்கம் எதற்கு? மானாட மயிலாட ஆடுவதற்காகவா? ஒரு நூலகத்திலே திறந்தவெளி கலையரங்கம் எதற்கு? ஒரு நூலகத்திற்குச் செல்பவர்கள் அங்கு அமைதியாகப் படித்துப் பயன்பெறவேண்டும். ஆனால் என்ன காரணத்திற்காக, ஏதோ ஒரு உள்நோக்கத்திற்காக நான்கு கலையரங்கங்கள் கட்டப்பட்டுள்ளன. இன்றைக்கு மற்ற எல்லா நூலகங்களுக்கெல்லாம் செலவு செய்யப்படவேண்டிய தொகையிலிருந்து ஒரே நூலகத்திற்கு, 8 கோடி ரூபாய் இன்றைக்குச் செலவு செய்யப்படுகிறது. இன்னொன்று நீங்கள் சொன்னீர்கள்; ஏழையெளிய மக்களுக்காக அது கட்டப்பட்டதென்று. ஆனால் ஓர் உண்மையை நான் இப்போது சொல்கிறேன். வழக்கு நீதிமன்றத்தில்



2012 பிப்ரவரி 2] [திரு. சி.வி. சண்முகம்]

நிலுவையில் இருந்தாலும் இப்போது சொல்கிறேன். அந்த நூலகத்தை ஒரு நாளைக்குப் பயன்படுத்துபவர்கள் 500 பேரிலிருந்து 700 பேர்தான். அதிலும் குறிப்பாக மாணவர்கள் என்று சொல்கிறீர்கள். அந்த மாணவர்கள் யார் தெரியுமா? உயர் கல்வி படிக்கின்ற மாணவர்களும், ரிசர்ச் செய்கின்ற மாணவர்களும் ஒரு நாளைக்கு 25 பேர்களுக்கு மேல் படிப்பதில்லை. இதுதான் உண்மை. இது அங்கே பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, அத்துடன் விட்டுவிடுங்கள். (குறுக்கீடு) இப்படியே திரும்பத் திரும்ப பதில் பேசிக்கொண்டிருந்தீர்கள் என்றால் அவர் பேசி முடிக்க முடியாது. (குறுக்கீடு) சரி, சீக்கிரம் சொல்லுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நூலகத்தில் கலையரங்கம் எதற்கு என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். கலை என்பதும் ஒரு கல்விதான். தேவைப்படுகின்றபோது அந்தக் கலையரங்கத்தினைப் பயன்படுத்தலாம். தேவைப்படவில்லை என்று சொன்னால், இப்போது பல கட்டடங்களை பலமாதிரி மாற்றிக்கொண்டிருக்கிறோம். அதேமாதிரி நூலகத்திற்காக அந்தக் கலையரங்கத்தை வேறுமாதிரிப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆகவே, பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவாக, அவரது பெயரில் இருக்கின்ற அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நூலகத்தை மீண்டும் நூலகமாகத் தொடர்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்ய வேண்டும், அந்த நூலகம் அங்கே தொடரவேண்டும் என்று மீண்டும் பணிவோடும் அன்போடும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. ப. டில்லி பாபு, சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) அமைச்சர்கள் விளக்கம் தானே சொன்னார்கள்? உங்கள் கட்சி உறுப்பினர்தானே பேசிக்கொண்டிருக்கிறார்? நீங்களே திரும்பக் கேட்டுக்கொண்டிருந்தால் எப்படி அவர் பேசி முடிக்க முடியும்? உங்கள் உறுப்பினரிடமே சொல்லிக் கேட்டிருந்தால் விளக்கம் ஒரே நேரத்தில் முடிந்திருக்கும். திரு. ப. டில்லி பாபு, சீக்கிரம் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

[2012 பிப்ரவரி 2

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான விளக்கத்தை அளித்திருக்கிறார்கள். ஒரு நாளைக்கு 2 இலட்சம் ரூபாய் வருமானம் அதிலிருந்து ஈட்டப்படுகிறது. அது இப்போது செய்தித் துறைக்கு விடப்பட்டிருக்கிறது. அதனை மீண்டும் நூலகத் துறைக்கு மாற்றினால் அந்தப் பராமரிப்புச் செலவுகளை நூலகத் துறை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகப் புரிந்துகொள்கிறார். அந்த 2 இலட்சம் ரூபாயும் நூலகத்திற்குத்தான் கொடுக்கப்படுகிறது. இதனை உறுப்பினர் அவர்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். அந்த வருமானம் நூலகத்திற்குத்தான் கொடுக்கப்படுகிறது. நூலகத்தினுடைய பராமரிப்புச் செலவிற்குத்தான் அது பயன்படுத்தப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டில்லி பாபு, நன்றி சொல்லி முடியுங்கள். இந்த சப்ஜெக்ட் எதற்கு? (குறுக்கீடு) மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நூலகம் அங்கு செயல்படவில்லை; தொடர்ந்து செயல்படவேண்டுமென்று இன்று காலையில்கூட ஒரு தவறான கருத்தினைப் பதிய வைத்தார்கள். மீண்டும் மீண்டும் சொல்கிறேன், இன்றையவரைக்கும் அங்கு அந்த நூலகம் செயல்பட்டுக்கொண்டுதான் இருக்கிறது. வழக்கு நிலுவையில் இருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிடுகின்றபோது ஒருங்கிணைந்த அறிவு சார்ந்த பூங்கா கட்டி முடித்த பிறகுதான் நூலகம் அங்கு மாற்றப்படும் என்று சொன்னோமே தவிர, இன்றே உடனடியாக மாற்றப்பட வேண்டுமென்று ஆர்டர் போடவில்லை. அந்த அரசாணையிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருங்கிணைந்த அறிவு சார்ந்த



2012 பிப்ரவரி 2] [திரு. சி.வி. சண்முகம்]

பூங்கா கட்டி முடிக்கப்பட்ட பிறகு, அதிலே உலகத்தரம் வாய்ந்த நூலகம் கட்டி முடிக்கப்பட்ட பிறகுதான், இங்கு இருக்கின்ற நூலகம் மாற்றப்படும் என்று சொன்னோமே தவிர, உடனடியாக இன்றே மாற்றப்பட வேண்டுமென்று சொல்லப்படவேயில்லை.

பிற்பகல் 1–40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, உரையை சீக்கிரம் முடியுங்கள். வேறு சப்ஜெக்ட்டிற்குப் போங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைகளை இழந்து, கால்களை இழந்து, கண்பார்வை இழந்து வாழ்விழந்த மாற்றுத் திறனாளிகளுக்கு வாழ்க்கையில் மாற்றம் தந்திட உதவித் தொகையை உயர்த்தித் தர வேண்டுகிறேன்.

வரலாற்றில் பதியப்பட்ட வாச்சாத்தி தீர்ப்பானது, 19 ஆண்டுகளுக்குப் பிறகு, போராடி உண்மைக்கு நீதி கிடைத்த வரலாறாகும். பாதிக்கப்பட்ட வாச்சாத்தி மக்களுக்கு இன்னும் சட்ட ரீதியான தீர்வு, உதவித் தொகை சரி பாதிக்கு மேல் கிடைக்காமல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளுக்கு எந்தவிதமான தடையுமில்லாமல், மனு செய்கின்ற யாராக இருந்தாலும் சரி, அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கவேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே வழங்கப்பட்ட தொகை 500 ரூபாய்தான். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்துதான் ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும் தேசிய அடையாள அட்டை பெறவேண்டுமென்று ஒரு விதி இருந்தது. அதுகூட மாற்றப்பட்டு, இன்றைக்கு யார் மனு செய்திருந்தாலும் அவர்களுக்கு உடனடியாக பயனாளிகளைத் தேர்வு செய்வதற்கு மாவட்ட அலுவலர்களே அந்தந்தப் பகுதிகளிலே முகாம் நடத்தி நேரடியாக வழங்கப்பட வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு தடையில்லாமல் வழங்கவேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. எந்தெந்தப்

[திருமதி பா. வளர்மதி] [2012 பிப்ரவரி 2

பகுதிகளிலே கிடைக்கவில்லை என்று சொன்னால் உடனடியாகக் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு, உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாச்சாத்தி வழக்கில் பாதிக்கப்பட்ட மலைவாழ் மக்களுக்கு சட்ட ரீதியான தீர்வு, உதவி இன்னும் சரி பாதி தொகை கிடைக்கவில்லை. தமிழக அரசு உடனடியாக தீர்வு, உதவி வழங்கிட வேண்டுகிறேன்.

அதேபோல வழக்கில் தண்டனை பெற்ற குற்றவாளிகள்மீது துறை ரீதியான நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறேன்.

தமிழகத்தில் படித்து முடித்துவிட்டு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள 62 இலட்சம் இளைஞர்களை தமிழகத்திலுள்ள காலிப் பணியிடங்களில் நிரப்ப வேண்டும்.

அரூரில் மாலிப்டினம், நாமக்கல்லில் பிளாட்டினம், சேலத்தில் பாக்சைட் போன்ற தாதுக்கள் உள்ள பகுதிகளில் தொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலமாக பல ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திட இவ்வரசு முன்வர வேண்டுகிறேன்.

ஆளுநர் உரையில் புதிய மருத்துவக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், கலைக் கல்லூரிகள் மற்றும் அணைக்கட்டு பாசனத் திட்டங்கள், புதிய வேலைவாய்ப்புகள் இவையெல்லாம் புதிய அறிவிப்புகளாக வரும் என்று தமிழக மக்கள் எதிர்பார்த்தார்கள். நாங்களும் எதிர்பார்த்தோம். இவை இடம்பெறவில்லை என்றாலும், இவ்வரசின் உறுதியான சில கொள்கைகளினால் மத்திய அரசை வற்புறுத்தி புதிய திட்டங்களையும், நிதி ஆதாரங்களையும் பெற்றிட எடுத்திடும் முயற்சிகளுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி துணை நிற்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு, உரையை சீக்கிரம் முடியுங்கள். புதிய சப்ஜெக்ட்டிற்குப் போகாதீர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதிக்குட்பட்ட கம்பைநல்லூர் காகித



2012 பிப்ரவரி 2] [திரு. ப. டில்லி பாபு]

ஆலையில் கடந்த 16–12–2011 அன்று 2 தொழிலாளர்கள் விஷ வாயு தாக்கி இறந்தார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கருணையுடன் உடனடியாக ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கியமைக்காக தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், காகித ஆலையை மீண்டும் திறப்பதற்கு வருவாய்க் கோட்டாட்சியர் தலைமையில் உத்தரவிடப்பட்டு, நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்கள் அமலாக்கப்படாமல் நிர்வாகம் இரவோடு இரவாக திறந்து, அங்கு மீண்டும் இரகசியமாக உற்பத்தி செய்யப்படுவதால் கழிவுகள் வெளியேற்றப்பட்டு, மீண்டும் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தருமபுரி மாவட்டம் பின்னுக்குத் தள்ளப்பட்ட மாவட்டம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு, உரையை சீக்கிரம் முடியுங்கள். இன்னும் நிறைய உறுப்பினர்கள் பேசவேண்டும்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கீடுகள் வந்தன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குறுக்கீடுகள் வராத அளவிற்கு நீங்கள் பேசியிருக்க வேண்டும்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திற்கு சிப்காட் வருவதை நாங்கள் எதிர்க்கவில்லை. சிப்காட் தொழிற்பேட்டை வரவேண்டும். ஆனால், அதேவேளையில், பல நூற்றுக்கணக்கான அரசு தரிசு நிலங்கள் இருக்கின்ற நிலையில் தரங்கம், அதகப்பாடி, அதியமான்கோட்டை, பாலசங்கமணஹள்ளி உட்பட்ட கிராமங்களில் சுமார் 40, 50 ஆண்டுகளாக உழுது பயிர் செய்து வரக்கூடிய விவசாய நிலங்களைக் கையகப்படுத்தும் முயற்சி நிறுத்தப்படவேண்டும். அரசு, தரிசு புறம்போக்கு நிலங்களிலே சிப்காட் தொழிற்பேட்டையைக் கொண்டுவருகையில், விவசாயிகளுடைய விளை நிலங்கள் பாதிக்காத வகையில், அதைக் கொண்டுவரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பெண்ணாகரம், ஊத்தமலை பகுதிகளில் 75 ஆண்டுகாலமாக . . .

*[2012 பிப்ரவரி 2*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள். (குறுக்கீடு) திரு. டில்லி பாபு, நீங்கள் உரையை முடிப்பதுபோல் தெரியவில்லை. உரையை சீக்கிரம் முடியுங்கள்.*

**திரு. ப. டில்லி பாபு:** *75 ஆண்டுகாலமாகக் குடியிருக்கக்கூடிய 450 குடும்பங்களை வெளியேற்றுவதற்கான முயற்சி நடைபெற்றுவருகிறது. அந்த மக்களுக்கே நிலம் வழங்கப்பட்டு அவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அதைத் தமிழக அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*

*அதேபோல, சென்னை, பெரம்பூர் ஐ.சி.எப். நிறுவனத்தில் டாக்டர் அம்பேத்கர் சிலை வைக்கப்பட்டு ஆறு மாத காலமாகத் திறக்கப்படாமல் இருக்கிறது. 'Institute of Ambedkar' என்ற அந்தப் பெயர் இருந்தும், அங்கே அம்பேத்கரின் சிலையைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. பல்வேறுபட்ட சிலைகள், மரியாதைக்குரிய வி.பி. சிங் அவர்களின் சிலை, மரியாதைக்குரிய இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் சிலை, இவ்வளவு சிலைகளெல்லாம் இருக்கின்றபோது, அம்பேத்கர் சிலை அந்த நிறுவனத்திலே திறப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதைத் தமிழக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மீறி கோவில்பட்டி . . . (மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 1–45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

****திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "ஓலைக் குடிசைகளிலே பிறந்தவர்களுடைய குரலும் கோட்டையிலே ஒலிக்கச் செய்வதுதான் உண்மையான ஜனநாயகம்" என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் ஜனநாயகம் பற்றிக் கூறுகின்றபோது கூறினார்கள். பேரறிஞர் அண்ணாவின் கூற்றிற்கேற்ப, வாழும் பேரறிஞர் நம் அம்மா அவர்கள், இன்றைக்கு எண்ணற்ற ஏழையெளியவர்களையெல்லாம் அடையாளம் கண்டு, அவர்களை இந்த மாபெரும் அவைக்கு அழைத்துவந்து பேச வைத்து அழகு பார்த்து, உண்மையான*



*2012 பிப்ரவரி 2] [திரு. ஆர்.பி. உதயகுமார்]*

*ஜனநாயகத்தை வாழ வைத்துக்கொண்டிருக்கின்ற இந்தியத் திருநாட்டினுடைய வழிகாட்டி, வாழும் மனித தெய்வம் நம் அம்மா அவர்கள். அடுத்த வீட்டிற்குக்கூட அடையாளம் தெரியாமல் இருந்த என்னை, இந்த மாபெரும் அவையிலே சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றுவதற்குப் பொன்னான வாய்ப்பை வழங்கி, வரலாற்றுச் சிறப்புமிக்க ஆளுநர் பேருரைக்கு, நன்றி கூறுகின்ற தீர்மான விவாதத்தில் உரையாற்றுகின்ற வரலாற்று வாய்ப்பினை எளியவனான எனக்கு, தாய் உள்ளத்தோடு வாரி வழங்கியிருக்கின்ற வாழும் மனித தெய்வம், எம் அம்மா அவர்களே, "நம்பினோர் கெடுவதில்லை" இது ஆன்றோர் வாக்கு. ஆம், வாழும் மனித தெய்வம், எம் அம்மா அவர்களை நம்பினோர் கைவிடப்படார். வாழும் மனித தெய்வம் எம் அம்மா அவர்களை நம்பாமல் கெட்டவர்கள் ஆயிரம் உண்டு. ஆனால், நம்பிக் கெட்டவர்கள் இந்த அவனியிலே யாரும் இல்லை என்பதை யாவரும் அறிவர்.*

*'அஞ்சுவது யாதொன்றுமில்லை, இனி அஞ்ச வருவதும் இல்லை' என்கின்ற பொன்மொழியை இதயத்தில் வைத்து, இவ்வையகத்திலே வீர வரலாறு படைத்து வருகின்ற வாழும் வேலுநாச்சியார் எம் அம்மா அவர்களே, எல்லையில்லா துன்பங்கள், துயரங்கள், தொல்லைகள், அடுக்கடுக்காய், அலை அலையாய் ஆயிரமாயிரம் வந்தாலும், அவற்றையெல்லாம் விவேகமிக்க வீரத்தால், ஈடில்லா ஈகை குணத்தால், மாற்றாரும் போற்றுகின்ற மனித நேயத்தால், தொலைநோக்கு மதிநுட்பத்தால், ஆழ்ந்த அறிவாற்றலால், உறங்காத உழைப்பால், அயராத அர்ப்பணிப்பு உணர்வால், தரணி போற்றும் தர்ம சிந்தனையால், மனித சக்தியாலும், ஆண்டவன் ஆசியாலும் தூள் தூளாக்கி வெற்றிச் சரித்திரம் படைத்து வருகின்ற புறநானூற்றுத் தாயே, எம் அம்மா அவர்களே, வருகின்ற சோதனைகளையெல்லாம் வென்று அதன் வேதனைகளையெல்லாம் தனதாக்கிக்கொண்டு, சாதனைகளையெல்லாம் இந்நாட்டிற்கு வாரி, வாரி வழங்கி வருகின்ற வாழும் மனித தெய்வமே, நித்தம் நான் வணங்குகின்ற எங்கள் குடும்ப தெய்வமே, தேசியமும், தெய்வீகமும் இரு கண்களாகக் கொண்ட, தெய்வீகத் திருமகனின் மறு பிம்பமாக, அரசியலையும், ஆன்மீகத்தையும் இரு கண்களாகக் கொண்டு, இந்த பாரத தேசத்தை ஆளப்போகின்ற தெய்வீகத் திருமகளே, வாழும் பசும்பொன்னே, எம் அம்மா அவர்களே, தங்கள் பொற்பாதம் பணிந்து வணங்கி, என் நன்றியைக் காணிக்கையாக்கி வணங்குகின்றேன்.*

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2012 பிப்ரவரி 2

பிற்பகல் 1–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் ஆளுநர் உரை பற்றிக் கூறுகின்றபோது சொன்னார்கள், it should be a message of hopes and ideals என்று. ஆளுநர் உரை என்பது, நாட்டு மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துகின்ற உரையாகவும், கொள்கைகளை விளக்குகின்ற உரையாகவும் அமைந்திட வேண்டுமென்று சொன்னார்கள். பேரறிஞர் அண்ணாவின் கூற்றுக்கு ஏற்ப வாழும் பேரறிஞர் நம் அம்மா அவர்களின் புனித ஆட்சியிலே வறுமையை ஒழிக்கின்ற அட்சய பாத்திரமாய் வந்திருக்கின்றது ஆளுநரின் பேருரை. இன்றைக்குக் காலையிலே பேசியிருக்கின்ற கருணாநிதியின் கட்சிக்காரர்களுக்குச் சொல்கிறேன், இன்றைக்குக் காணாமல் போயிருக்கின்ற கருணாநிதியின் கடந்த கால ஆட்சியிலே அல்லல்பட்டு, துன்பப்பட்டு, வேதனைப்பட்டு, துயரப்பட்டுக் கொண்டிருந்த மக்களின் வாழ்விலே ஒளியேற்றி வைத்து நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்ற பேருரையாகவும், “எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலைவேண்டும்” என்ற வாழும் மனித தெய்வம் எம் அம்மா அவர்களின் கொள்கையை வரிக்கு வரி தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கின்ற பேருரையாகவும் அமைந்திருக்கின்றது என்பது யாவரும் அறிந்ததே. ஆனாலும், மக்களால் புறக்கணிக்கப்பட்டிருக்கிற கட்சியிலிருந்து தப்பிப் பிழைத்திருக்கின்ற ஒன்றிரண்டு பேர் இங்கு வந்து அமர்ந்து கொண்டு புகார்ப் பட்டியல் வாசிப்பது எப்படி இருக்கிறது தெரியுமா? ஆயிரம் ஓட்டைகள் கொண்ட சல்லடை, கொண்டை ஊசியைப் பார்த்துச் சொன்னதாம்; “ஏய்; கொண்டை ஊசியே, கொண்டை ஊசியே, உன் கொண்டையிலே பார் ஒரு ஓட்டை” என்று. அதைப்போல, ஆயிரம் ஆயிரம் ஓட்டைகளைத் தன்னகத்தே கொண்டவர்களெல்லாம் இங்கே வந்து அது ஓட்டை, இது ஓட்டை என்று கூறினால், மீண்டும் மக்கள் நமக்குத் தந்து விடுவார்கள் அவர்களின் ஒட்டுமொத்த ஓட்டை என்று பகல் கனவு கண்டு கொண்டிருக்கின்றார்கள். ஆனால், மக்களால் புறக்கணிக்கப்பட்டு, வெறுக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்டிருக்கின்ற கட்சியைச் சேர்ந்தவர்களே, உங்களின் கனவு பலிக்காது. ஏனென்றால், என்றைக்குமே காகிதப் பூ மணந்ததில்லை, கறந்த பால் மடி புகுந்ததில்லை, கருவாடு மீன் ஆனதில்லை. மக்கள் நலனுக்கான திட்டங்களைத் தீட்டுகின்றபோது அதிலே சுயநலம் இல்லாத பொதுநலம் மேலோங்கி இருக்க வேண்டுமென்பது மக்களின் எதிர்பார்ப்பு. நாட்டை ஆளுகின்ற ஆட்சியாளர்களால் அப்படித் தீட்டப்படுகின்ற திட்டங்கள் மக்களிடம் என்றைக்கும் சாகா வரம் பெற்றுவிடுகின்றன.



2012 பிப்ரவரி 2] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

மறைந்த நம் புரட்சித் தலைவர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தை இந்த நாட்டிற்குக் கொண்டு வந்தார்கள். இன்றைக்கும் அந்தத் திட்டம் மக்களிடம் சாகா வரம் பெற்றிருக்கிறது என்றால், அந்த சத்துணவுத் திட்டத்திலே சுயநலத்தையும், குடும்ப நலத்தையும் எள்முனையளவும் காண முடியாது.

அதைப்போல புரட்சித் தலைவரின் ஒரே அரசியல் வாரிசு, வாழும் புரட்சித் தலைவர் நம் அம்மா கொண்டு வந்திட்ட தொட்டில் குழந்தைத் திட்டம், மழைநீர் சேகரிப்புத் திட்டம், உழவர் பாதுகாப்புத் திட்டம், விலையில்லா மிதி வண்டி வழங்குகின்ற திட்டம், ஆலயங்கள் தோறும் அன்னதானம் வழங்குகின்ற திட்டம், இதுபோன்ற ஆயிரமாயிரம் திட்டங்கள் மக்களிடத்திலே என்றைக்கும் சாகா வரம் பெற்றிருக்கின்றன.

மேலும், வாழும் மனித தெய்வம் அம்மா அவர்கள் வெற்றிகரமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற விலையில்லாத மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி, கறவைப் பசுக்கள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள், மடிக் கணினிகள் வழங்குகின்ற திட்டங்களும், பசுமை வீடுகள் கட்டித் தருகின்ற திட்டமும், இதைப்போன்று மக்களின் வாழ்வை வளப்படுத்துகின்ற ஆயிரமாயிரம் திட்டங்களும் மக்களிடம் சாகா வரம் பெற்று சகாப்தம் படைத்து வருகின்றன. மக்கள் நலனை மறந்து தன் நலமும், தன் குடும்ப நலமும்தான் முக்கியம் என்றிருந்த ஆட்சியாளர்கள் தந்திட்ட திட்டங்களையெல்லாம் மக்கள் விரட்டியடித்திருக்கிறார்கள் என்பதை இந்த நாடு நன்கறியும்.

அதுமட்டுமல்ல, அன்னைத் தமிழகத்தை ஆழிப் பேரலை வந்து ஆட்டி வைத்தபோது அவனியே நடுநடுங்கியது. ஆனால், வாழும் மனித தெய்வம் எம் அம்மா அவர்கள், ஆழிப் பேரலை வந்த வேகத்தைவிட, சுனாமி வந்த வேகத்தைவிட, வேகமாக பாதிக்கப்பட்ட இடத்திற்கு நேரிலே சென்று நிவாரணப் பணிகளை மேற்கொண்டு, சுனாமி வந்த சுவடே தெரியாமல் மக்களை வாழ வைத்தவர், வாழும் மனித தெய்வம் எம் அம்மா அவர்கள் அயல்நாட்டிலே உள்ள அரசியல் தலைவர்களும் மனதாரப் பாராட்டினார்கள் எம் அம்மா அவர்களின் மனிதநேயமிக்க, புயல்வேக நிருவாகத் திறமையை.

அதைப்போல, இப்போது வந்திட்ட 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்வதிலே உலகத் தலைவர்களுக்கு வழிகாட்டியாக விளங்குகிறார் என்று தரணியே போற்றுகின்றது. 'தானே' புயல் வந்தாலும், அல்லது யாரேனும் தானே புயலைக் கிளப்பி தமிழகத்திற்கு ஆபத்தை உருவாக்க நினைத்தாலும் அதை எதிர்கொண்டு அன்னைத் தமிழகத்தைப் பாதுகாத்து வாழவைத்திட வாழும் மனித தெய்வம் எம் அம்மா அவர்களிடம் இருக்கின்றது மக்கள் சக்தி, தெய்வ சக்தி என்பதை யாவரும் அறிவர்.

அதைப்போல, சட்டம்—ஒழுங்கைப் பற்றி இந்த அவையிலே ஐயப்பாட்டை எழுப்பினார்கள், தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள். கடந்த தி.மு.க. ஆட்சியிலே மதுரையிலே நடைபெற்ற கொலைகளும், கொள்ளைகளும், வன்முறைகளும், கட்டப் பஞ்சாயத்துகளும். அதிலே முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் மகன் மு.க. அழகிரி, தன் கூலிப் படையின்மூலம் பங்கெடுத்திருப்பது அன்றைக்குக் கருணாநிதியின் ஏவல் துறையாக இருந்த காவல் துறைக்குத் தெரியவில்லையென்றாலும், மக்களுக்கு நன்றாகத் தெரிந்த காரணத்தால்தான் தி.மு.க—வுக்கு கடந்த தேர்தலிலே மரண அடி கொடுத்தார்கள். 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதைப் போல, அன்றைக்கு மதுரையிலே நடந்திருக்கின்ற அந்தச் சம்பவங்கள் எல்லாம் கருணாநிதியை இன்றைக்கு இந்த நாட்டை விட்டே விரட்டுகிற நிலையை உருவாக்கியிருக்கின்றன. அதுமட்டுமல்ல, கருணாநிதியின் கடந்தகால ஆட்சியிலே குற்றங்கள் நடைபெறுகின்றன என்றால், அதிலே குற்றவாளி, கருணாநிதியின் எந்தக் குடும்பத்திற்கு வேண்டியவர் என்பதைக் கண்டுபிடிப்பதே காவல் துறைக்குக் கடினமான பணியாக இருந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. கடந்த காலத்திலே காவல் துறை கருணாநிதியின் குடும்ப உறுப்பினர்களின் ஏவல் துறையாக, அசிங்கமாகக் காட்சி அளித்தது. ஆனால், இன்றைக்கு வாழும் மனித தெய்வம் எம் அம்மா அவர்களின் தலைமையிலே கண்ணியமிக்க காவல் துறை சிங்கமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நாடு நன்கு அறியும்.

*பிற்பகல் 1—55*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு கோயில்முன் அதன் கோபுரத்திற்குக் கீழே அமர்ந்து பிச்சை





எடுத்துக்கொண்டிருக்கின்ற ஒருவன், கோயிலுக்கு வருகின்ற அனைவரும் கோபுரக் கலசத்தைப் பார்த்து வணங்கிவிட்டுச் சொல்வதைத் தவறாகப் புரிந்துகொண்டு, கோயிலுக்கு வருகின்ற பக்தர்கள் எல்லாம் தன்னைப் பார்த்துத்தான் வணங்கிவிட்டுச் செல்கின்றார்கள் என்று நினைத்துக் கொண்டானாம். ஒரு நாள், அந்தப் பிச்சைக்காரன் பிச்சை எடுப்பதற்குத் தாமதமாக வந்தபோது பக்தர்கள் அனைவரும் அந்தக் கோபுரக் கலசத்தை வணங்கிவிட்டுச் செல்வதை எதிர் திசையில் நின்று பார்த்திருக்கின்றான். அப்போதுதான் அவனுக்குப் புரிந்ததாம், ஆகா, பக்தர்கள் அனைவரும் வணங்கியது கோபுரக் கலசத்தைத்தானே தவிர தன்னை அல்ல என்று. அதைப்போல, இங்கே சிலபேர் கோபுரக் கலசத்திற்கும் தனக்கும் வேறுபாடு தெரியாமல் கூப்பாடு போடுகின்றார்கள். அவர்களுக்கு மக்கள் தக்க பாடத்தைப் புகட்டினார்கள் கடந்த உள்ளாட்சித் தேர்தலிலே. ஆனாலும், இன்னும் புரியாததுபோல் புலம்பிக்கொண்டிருக்கின்றார்கள், கவலையில்லை. கூடிய சீக்கிரத்திலே வருகின்ற தேர்தலிலே மக்கள் புரிய வைப்பார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். அனைத்தும் தெரிந்தவர் ஆண்டவன். அந்த ஆண்டவனே அறியாதது ஒன்றே ஒன்றுதான். அது அடுத்தவரைக் கெடுக்க நினைப்பது. அதைப்போல வாழும் மனித தெய்வம் எம் அம்மா அவர்களும் அனைத்தும் அறிந்தவர். ஆனால், அவரும் அறியாதது ஒன்றே ஒன்று. அது அடுத்தவரைக் கெடுக்க நினைப்பது என்பதை இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள்.

ஆகவே, இவ்வையகத்திலே தர்மம் அழிந்து அதர்மம் தலைதூக்குகின்றபோதெல்லாம் கடவுள் மனித உருவிலே அவதாரம் எடுத்து வருவார் என்பது கீதையின் வாக்கு. அந்த சத்திய வாக்கிற்கிணங்க, அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டிட மனித உருவிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒப்பற்ற தலைவி, தெய்வத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டி (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை, எத்தனை பிறவி எடுத்தாலும் அத்தனைப் பிறவிகளிலும் வாழும் மனித தெய்வம் அம்மா அவர்களின் உண்மைத் தொண்டனாய் வாழ்வதே இப்பூமியிலே பிறவி எடுத்ததற்குக் கிடைத்த பெருமையெனக் கொண்டு வாழ்ந்து வருகின்ற கடைக்கோடித் தொண்டனான எனக்கு, கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவு அளிக்கும் கடவுளைப்போல கருணை செய்து,

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2012 பிப்ரவரி 2

ஆளுநர் பேருரை மீதான விவாதத்திலே உரையாற்றுவதற்கு வாய்ப்பை வழங்கிய வாழும் மனித தெய்வம் அம்மா அவர்களே, தங்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, என் உயிரை மலர் மாலைகளாக என் உள்ளத்தால் தொடுத்து, தங்கள் பொற்பாதங்கள் பணிந்து வணங்கி சமர்ப்பித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆளுநர் உரை என்பது, அரசு இந்த நிதியாண்டில் பட்ஜெட்மூலம் நிறைவேற்றக்கூடிய திட்டங்களின் ஒரு முன்னோட்டமாகும். அந்த வகையில் அரசு நிறைவேற்றக்கூடிய பல திட்டங்களைத் தெளிவுபடுத்தியிருக்கின்றீர்கள். இந்தக் கல்வியாண்டு முதல், முப்பருவத் தேர்வு முறையை, 8 ஆம் வகுப்பு வரை அனைத்துப் பள்ளிகளிலும் அறிமுகப்படுத்துதல், 12–வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1 லட்சத்து 85 ஆயிரம் கோடி ரூபாய் தமிழக திட்டப் பணிகளுக்காகச் செலவிடத் திட்டமிடுதல், ரூபாய் 539 கோடியில் 3,000 பேருந்துகள் வாங்குதல், 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட கடலூர், விழுப்புரம், நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் குடிசை வீடுகளுக்குப் பதிலாக ரூபாய் 1,000 கோடியில் 1 லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டும் திட்டம், Master Plan இல்லாத விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி, நகராட்சிகளில் Master Plan திட்டம் தீட்டுதல், அடுத்த 2 ஆண்டுகளில் 4,704 மெகா வாட் கூடுதல் மின்சாரம் கிடைக்கும் வகையில் புதிய திட்டங்களைச் செயல்படுத்துதல், ரூபாய் 50 கோடியில் 146 கிலோ மீட்டர் பிளாஸ்டிக் சாலைகள் அமைத்தல் ஆகிய திட்டங்களை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம்.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்று வள்ளுவப் பெருந்தகை தெளிவாக அறிவுறுத்தியிருக்கிறார்.



2012 பிப்ரவரி 2]

பிற்பகல் 2–00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ம. கலை அரசு:** இன்று தமிழகத்தில் இருக்கக்கூடிய முக்கிய பிரச்சினைகளை, அரசின் செயல்பாட்டிலுள்ள சில, பல குறைகளைச் சுட்டிக்காட்டுவதை எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற வகையில் எனது கடமையாகக் கருதுகின்றேன். இதைக் கூறுவது அரசைப் புண்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடோ அல்லது அவமதிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடோ அல்ல. எனவே மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் வேறு மாதிரி எடுத்துக்கொள்ளக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஒவ்வொரு அசைவையும் இந்த உலக மக்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள். இரண்டு ஆண்டுகளில் 4,704 மெகா வாட் கூடுதல் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்குக் கிராமப்புறங்களிலும் சரி, நகர்ப்புறங்களிலும் சரி, 6 முதல் 8 மணி நேரம் மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறது. விவசாயிகள், வியாபாரிகள், தொழிற்சாலைகள், தொழிற்சாலைகளில் பணியாற்றக்கூடியவர்கள்—தற்பொழுது தேர்வு நேரம்—மாணவர்கள், இப்படி பலதரப்பட்ட மக்களும் மின்சாரத் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு எத்தனை முறை விளக்கம் சொல்வது? தூங்குபவரை எழுப்பலாம், தூங்குபவரைப் போல் நடிப்பவரை எப்படி எழுப்ப முடியும்? ஆரம்பத்திலிருந்து பலமுறை விளக்கம் சொல்லியாகிவிட்டது. உடனடியாக ஆறு மாதத்திற்குள்ளாகவோ, ஒரு வருடத்திற்குள்ளாகவோ அந்த அளவு மின்சாரம் உற்பத்தி செய்துவிட முடியாது. அதற்குக் கால அவகாசம் வேண்டும். அம்மா அவர்கள் மக்களுக்குக் கொடுத்திருக்கின்ற வாக்குறுதிகளை நிறைவேற்றக் கால அவகாசம் கேட்டிருக்கின்றார்கள். 2013–க்குப் பின்பு ஓரளவு மின்சாரப்

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2012 பிப்ரவரி 2

பற்றாக்குறை நீக்கப்படும் என்றும், அதற்கு முன்பாகவே வருகின்ற ஜூன் மாதத்திலிருந்து படிப்படியாகத் தீர்க்கப்படும் என்பதைப் பலமுறை சொல்லியிருக்கிறேன். மீண்டும் ஒருமுறை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், இருக்கக்கூடிய பிரச்சினை என்னவென்றால் மின்சாரம் இல்லாமல் மாணவர்கள் எப்படிப் படிப்பார்கள்? இரண்டு ஆண்டு காலம் கழித்து நம்முடைய பிரச்சினை தீரப்போகிறது என்று சொன்னால், தற்போது என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு மூல காரணமே, கடந்த கால ஆட்சிதான் என்பதையும் விளக்கிச் சொல்லியிருக்கின்றேன். பலமுறை அம்மா அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு குறைந்தபட்சம் 3 அல்லது 3½ ஆண்டு காலம் வேண்டும். விவாதத்திலே பேசுவதற்காக நீங்கள் எதை வேண்டுமானாலும் பேசிவிட்டுப் போகலாம். மின்சாரம் உற்பத்தி செய்வதற்கென்று சில வழிமுறைகள் இருக்கின்றன. கடந்த காலத்தில் வருங்காலத்தை உணர்ந்து திட்டமிட்டுச் செயலாற்றியிருந்தால் இந்தப் பிரச்சினை வந்திருக்காது. இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைக்கு முழுமுதல் காரணமே உங்களுடைய ஒத்துழைப்போடு நடந்த கடந்த கால தி.மு.க. ஆட்சிதான் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நாம்



2012 பிப்ரவரி 2] [திரு. ம. கலை அரசு]

நடவடிக்கை எடுக்கவேண்டுமேயொழிய, கடந்த கால ஆட்சியில் நடைபெற்ற தவறு என்று சொல்லி நாம் தட்டிக் கழித்துவிட முடியாது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் நல்ல ஆட்சியைத் தருவார்கள், எந்தப் பிரச்சினையையும் உடனடியாகத் தீர்த்து வைப்பார்கள் என்ற ஓர் உயரிய நோக்கத்திற்காகத்தான் மக்கள் வாக்களித்து உங்களை ஆட்சியில் அமர வைத்திருக்கிறார்கள். "கடந்த கால ஆட்சியில் நடந்த தவறு, கடந்த கால ஆட்சியில் நடந்த தவறு" என்று சொல்லி நம்முடைய கடமையைத் தட்டிக் கழித்துவிட முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் புரிந்து பேசுகிறாரா, புரியாமல் பேசுகிறாரா என்பது தெரியவில்லை. இந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பதற்குரிய வழிமுறைகளே கிடையாது. மின்சாரத்தை நினைத்தபடி எங்காவது கொள்முதல் செய்யலாம் என்றால் அதுவும் முடியாது. கொள்முதல் செய்யலாம் என்று சொன்னால்கூட, அதற்கும் யாரேனும் உற்பத்தி செய்தால்தான் அதையும் வாங்கமுடியும். ஆகவே, கொள்முதல் செய்வதற்குக்கூட வழியில்லாமல், போதுமான அளவிற்கு உற்பத்தி இல்லை. உற்பத்தி இல்லை, இல்லை என்று பலமுறை சொல்லியிருக்கிறோம். அந்த உற்பத்தியைத் தொடங்குவதற்கு வேண்டிய முயற்சிகளைத்தான் அம்மாவின் அரசு எடுத்திருக்கிறது. தட்டிக் கழிக்கவில்லை. நீங்கள் ஆலோசனை சொல்லித்தான் அம்மா அவர்கள் செயல்பட வேண்டுமென்ற அவசியமே இல்லை. அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே, மின்சாரப் பற்றாக்குறை பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்து, இன்று போர்க்கால அடிப்படையிலே பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகள் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே முடிவடைந்து, இந்த 5 ஆண்டுகளுக்கு மட்டுமல்ல, அடுத்து வருகின்ற காலங்களுக்கும், நிச்சயமாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு தேவையான அளவுக்குத் திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2012 பிப்ரவரி 2

பிற்பகல் 2–05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது.

**திரு. ம. கலை அரசு:** மின்சாரத்தை உடனே கொடுத்தால் முடித்துவிடலாம். நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய குற்றங்களுக்கு அடிப்படையே குடிதான். குடியினால் பல்வேறு குடும்பங்கள் பாழாகின்றன. குடித்துவிட்டு வாகனம் ஓட்டுவதனால் பல்வேறு விபத்துகள் ஏற்படுகின்றன. பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் குடிப்பதனால் சமுதாயம் சீரழிகிறது. ஆகவே, டாஸ்மாக் மது கடைகளை ஒழித்துவிட்டு, அதனால் வரக்கூடிய வருமானத்தை வேறுபல நல்ல திட்டங்களின் மூலமாகக் கொண்டு வருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற கூட்டத் தொடரில்கூட இதே பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பினார்கள். நான் அன்றைக்கு அளித்த அதே பதிலைத்தான் இப்பொழுதும் நினைவுபடுத்த விரும்புகிறேன். மதுவிலக்கை அமல்படுத்துவது என்பதிலே கொள்கை மாறுபாடு என்பது அம்மாவின் அரசுக்குக் கிடையாது. மதுவினுடைய தீமைகளை அம்மா அவர்கள் உங்களைவிட நன்கு உணர்ந்திருக்கிறார்கள். அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் நடைமுறையில் குஜராத் ஒன்றைத் தவிர, இந்தியாவிலே இருக்கின்ற அனைத்து மாநிலங்களிலும், பக்கத்தில் இருக்கிற பாண்டிச்சேரி உட்பட, எந்த மாநிலத்திலும் மதுவிலக்கு அமல்படுத்தப்படவில்லை. அதனால், தமிழகத்திலே மட்டும் அதை அமல்படுத்துவது என்பது நடைமுறைக்குச் சாத்தியம் இல்லை. கள்ளச்சாராயப் பேர்வழிகளுக்கும், அல்லது பக்கத்து மாநிலங்களிலே இருக்கின்ற கடத்தல் பேர்வழிகளுக்கும், சமுதாய விரோதிகளுக்கும், சமூக விரோதிகளுக்கும்தான் அது கைகொடுக்குமே தவிர—அதிலே இன்னும்கூட சிலபேர் சொல்கிறார்கள், அது எந்த அளவுக்கு உண்மை என்று தெரியவில்லை. இதை வலியுறுத்துபவர்களே, கள்ளச்சாராயத்தை ஊக்கப்படுத்த வேண்டும், அதிலே தொழில்



2012 பிப்ரவரி 2] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

செய்ய வேண்டுமென்ற உணர்வோடுகூட இதைச் சொல்கிறார்களோ என்று சிலர் சந்தேகப்படுவதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆக, நடைமுறைச் சாத்தியம் இல்லாத ஒன்றை—மற்ற மாநிலங்களிலும் இந்தியா முழுவதும் இதைச் செய்ய வேண்டியது மத்திய அரசு. இதை மத்திய அரசு இந்தியா முழுவதும் அமல்படுத்த வேண்டும். அப்படி அமல்படுத்திவிட்டுப் போகட்டும். அதற்குரிய வருமான இழப்பு எவ்வளவு வருகிறதோ அந்தந்த மாநிலங்களுக்கு மத்திய அரசு அதை ஈடாகக் கொடுத்துவிட்டு இந்தியா முழுவதும் அமல்படுத்தினால்தான் இது நடைமுறையில் சாத்தியம். இல்லையென்றால். சமுதாய விரோதிகளுக்குத்தான் அது பயன்படும். நமது அரசுக்கு வர வேண்டிய, கஜானாவுக்கு வரவேண்டிய பணம் அங்கே சமுதாய விரோதிகளுக்குச் சென்றுவிடும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். அதனுடைய தீமைகளைப்பற்றி விரிவாக மக்கள் மனதிலே கொள்ள வேண்டுமென்பதற்காக பல கோடி ரூபாய் செலவு செய்து மதுவின் தீமைகளை அரசு இன்றைக்கு விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதையும் உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக, மதுவைத் தமிழகத்திலே தடை செய்யவேண்டுமென்று சொல்கின்றார்கள். அங்கே அவர்களுடைய நிறுவனர் இருக்கின்ற இடத்திற்கு 10 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற பாண்டிச்சேரியிலே இருக்கின்ற கள்ளுக் கடைகளும் பிராந்திக் கடைகளும் தடை செய்யப்பட வேண்டும். இல்லையென்றால், அங்கே கடைகளை அடைக்கின்ற போராட்டம் நடத்துவேன் என்று அறிவித்து அந்தப் போராட்டத்தை நடத்துவதற்குத் தைரியம் இருக்கிறதா என்பதைத் தெரியப்படுத்த வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நிறைய விளக்கம் சொல்லிவிட்டார்களல்லவா!

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தைரியம் இருக்கிறதா என்றெல்லாம் கேட்கிறார்கள். எங்களுடைய தைரியத்தை நாங்கள் வெளிப்படுத்தத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, உங்களுடைய உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வேலூர், திருவள்ளூர் மாவட்டங்களை புகையில்லா மாவட்டங்களாக அறிவித்திருப்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நாங்கள் மனதார வரவேற்கின்றோம், பாராட்டுகின்றோம். இந்தியாவிலேயே கடந்த முறை மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு அன்புமணி ராமதாஸ் அவர்கள், புகையில்லா நாட்டை உருவாக்க வேண்டுமென்று சட்டம் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டத்தை இன்றைக்கு அமல்படுத்த வேண்டுமென்று உறுதியெடுத்திருக்கக்கூடிய தமிழக அரசை நாங்கள் பாராட்டுகின்றோம்.

அணைக்கட்டு தொகுதி என்பதில், பெயரில்தான் அணைக்கட்டு என்று இருக்கிறது. ஆனால், அங்கே இருக்கக்கூடிய ஏரிகளிலோ, குளங்களிலோ நீர் கிடையாது. அணைக்கட்டு தொகுதியிலே இருக்கக்கூடிய மேலரசம்பட்டு அணையைக் கட்டி முடிப்பதற்கு ஆணை பிறப்பித்தும், திட்டத்தைத் தீட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்தும், இதுநாள்வரையில் அந்த அணையைக் கட்ட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்த அணையைக் கட்டி முடிப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 2–10*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கோரிக்கை உடனடியாக நிறைவேற்றப்படும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு அம்மா அவர்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, அணையையே கட்டித் தருகிறேன் என்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். உட்காருங்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைகின்ற வகையில் நெடுஞ்சாலைத் துறையிலே இருக்கக்கூடிய சுங்கச் சாவடிகளில் கரும்பு லாரிகள் இலவசமாகச் சென்று வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். நாங்கள் போராடிப் போராடி வேலூர் மாவட்டத்திலே இருக்கக்கூடிய பள்ளிகொண்டா, வாணியம்பாடி சுங்கச் சாவடிகளில் கரும்பு லாரிகள் இலவசமாகச் சென்று வருவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆசியோடு ஏற்பாடு செய்திருக்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபோல தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து சுங்கச் சாவடிகளிலும் கரும்பு லாரிகள் இலவசமாகச் சென்று வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

புதிய ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் தரம்வாய்ந்த மருத்துவமனைகளைச் சேர்க்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். காரணம், நோயால் பாதிக்கப் பட்டவர்களுக்கு சாதாரண மருத்துவமனைகளில் சிகிச்சை அளித்தால் அவ்வளவு எளிதில் குணமடைவதற்கு வாய்ப்புகள் இல்லை. ஆகவே, வேலூரில் இருக்கக்கூடிய சி.எம்.சி. மருத்துவமனை போன்ற மருத்துவமனைகளிலும் இந்தத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சி.எம்.சி. மருத்துவமனை மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[2012 பிப்ரவரி 2

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் போதிய பேராசிரியர்கள் கிடையாது. அதேநேரத்தில் அங்கு பணியாற்றக்கூடிய மருத்துவர்களும் போதிய அளவில் இல்லை. வேலூர் மாவட்டத்தில் அரசு மருத்துவமனைகளில் dialysis unit வசதி இதுவரையில் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, உரையை முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது. இன்னும் நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டும். நேரத்தைப் பாருங்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் பேச்சை முடித்துவிடுகின்றேன். வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒரு dialysis unit-ஐ உடனடியாக ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். மருத்துவமனையிலிருந்து வெளியேற்றப் படுகின்ற கழிவுநீர் அருகில் இருக்கக்கூடிய சப்தலிபுரம் ஏரியில் கலந்துவிடுவதால் அந்தப் பகுதி முழுவதும் சுகாதாரச் சீர்கேட்டினால் பாழடைந்து கொண்டிருக்கிறது. அதனால் குடிநீரும் பாதிக்கப்படுகிறது. மக்கள் சுகாதாரமற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கு ஒரு சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கும் ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, உட்காருங்கள். நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவ்வளவு நேரம் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது ஒடுக்கப்பட்ட மக்களினுடைய குரலாக



2012 பிப்ரவரி 2] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

விளங்குகின்ற புதிய தமிழகம் கட்சியினுடைய கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன். கடந்த 8 மாதங்களுக்கு முன்பு தமிழகத்தில் நிலவிய அபரிமிதமான விலைவாசி ஏற்றம், தீராத மின்வெட்டு, அரசு இயந்திரத்தின்மீது ஒரு குடும்பத்தினுடைய ஆட்சி, அதனால் பல அதிகார மையங்கள், தொடர்ந்து சீரழிந்து வந்த சட்டம்—ஒழுங்கு மற்றும் 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் என்ற பல்வேறு நிலைகளிலேயிருந்து தமிழகத்தைக் காப்பாற்றுகின்ற பொறுப்பையேற்று, ஓர் ஆட்சி மாற்றத்தை நிகழ்த்தி, கடந்த 8 மாத காலமாக தமிழகத்திற்குப் பல்வேறு விதமான நல்ல திட்டங்களை அளித்து வருகின்ற இன்றைய அரசை நான் முதற்கண் பாராட்டுகிறேன்.

பிற்பகல் 2—15

அதே சமயத்தில் ஆளுநர் உரையில் குறிப்பிடப்படாத பல்வேறு அம்சங்கள், குறிப்பிட்டு இருக்கவேண்டிய முக்கியமான சில கருத்துகள் ஆகியவற்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சுயநிதி பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுடைய ஒட்டுமொத்தமான நிதிச் சுமையையும் ஏற்கக்கூடிய வகையில், இன்றைய அரசு அறிவித்திருக்கிறது. அதற்காக நான் பாராட்டுகிறேன். அதேசமயத்தில், இதில் ஒரு சிறிய குறைபாடு இருக்கிறது. என்னவெனில், சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் ஒடுக்கப்பட்ட மாணவர்கள் அந்தச் சலுகையைப் பெற வேண்டுமென்று சொன்னால், அவர்களுடைய பெற்றோருடைய ஆண்டு வருமானம் ரூபாய் 2 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைய விலைவாசியின்படி, ரூபாய் 2 இலட்சம் என்று சொன்னால், மாத வருமானம் 16,000 ரூபாய் உள்ளடக்கிய ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும்தான் அந்தச் சலுகையைப்பெற வாய்ப்பிருக்கிறதே தவிர, 16,000 ரூபாய்க்குமேல் மாத வருமானம் பெறக்கூடியவர்களின் பிள்ளைகளுக்கு அந்த வாய்ப்பில்லாமல் போய்விடும். எனவே, ஒரு மிகப் பெரிய நல்ல காரியம் செய்ய வருகின்றபோது, அது முழுமையாக ஒடுக்கப்பட்ட மக்களுடைய பிள்ளைகள் அனைவருக்கும் சென்றடையக்கூடிய வகையில், இந்த வருமான உச்ச வரம்பை நீக்கிட வேண்டுமென்று நான் தமிழக அரசை வலியுறுத்துகிறேன்.

அதேபோல், இப்போது +1, +2 மாணவர்களுக்கு மடிக் கணினி வழங்கப்படுகிறது. BC/SC/MBC வகுப்பினர் எல்லா மாணவர்களுக்கும் வழங்கப்படுகிறது. இதிலே நான் வைக்கக்கூடிய வேண்டுகோள்,

ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள், உயர் கல்வி பயிலக்கூடிய மாணவர்கள், MBA பயிலக்கூடியவர்கள், MCA பயிலக்கூடியவர்கள் மற்றும் Ph.D. பயிலக்கூடியவர்களுக்கு இந்த வாய்ப்புகள், அதாவது மடிக் கணினி பெறக்கூடிய வாய்ப்புகளெல்லாம் இல்லாமல் இருக்கின்றன. எனவே, அந்த விதியைத் தளர்த்தி, ஒடுக்கப்பட்ட மாணவர்களுக்காவது, உயர் கல்வி பயிலக்கூடியவர்களுக்கும் மடிக் கணினி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், இலவச சைக்கிள், இப்போது +1, +2 மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது. அது பிற்படுத்தப்பட்ட மாணவர்களாக இருந்தாலும், தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களாக இருந்தாலும்கூட, குறைந்தபட்சம் 9 ஆம் வகுப்பிலிருந்தே அதைக் கொடுத்தால், அவர்களுக்கு நன்றாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மடிக் கணினியைப்பற்றிச் சொன்னார்கள். பதினொன்றாவது, பன்னிரண்டாவது, கல்லூரியில் படிக்கிறவர்கள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் படிக்கிறவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். MBA/MCA படிப்பவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை, அவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒரு மடிக் கணினி கொடுத்தால், அந்த மடிக் கணினியை கண்டிப்பாக ஐந்தாண்டு காலத்திற்கு பயன்படுத்தலாம். பன்னிரண்டாவது படிக்கும்போதே அந்த மடிக் கணினியை அந்த மாணவர்களுக்குக் கொடுக்கிறோம். பன்னிரண்டாம் வகுப்பு படித்த பிறகுதான், அவர்கள் கல்லூரியில் BCA/MCA/MBA படிக்கப் போகிறார்கள். ஆகவே, அந்த மடிக் கணினியை அவர்கள் ஐந்தாண்டு காலம் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.





**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது +2 படித்த பிறகு, அவர்கள் உயர் கல்விக்குப் போனால், அவர்களுக்குப் பலன் கிடைக்கும். ஆனால், ஏற்கெனவே இப்போது உயர் கல்வி பயின்று கொண்டிருக்கக்கூடிய மாணவர்களுக்கு அது பயனளிக்கக்கூடிய வகையில், அவர்களுக்கெல்லாம் வழங்கப்பட வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

அடுத்தது, நியமனப் பதவிகள். அரசு வழக்கறிஞர் நியமனப் பதவிகள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, MBA/MCA படிப்பவர்களுக்கும் மடிக் கணினி வழங்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, நல்ல ஒரு கருத்தைச் சொன்னார்கள். மடிக் கணினியை நீண்டகாலமாகப் பயன்படுத்த வேண்டும். அதனடிப்படையில், இன்று பொறியியல் கல்லூரிகளில் படிப்பவர்களுக்கு மடிக் கணினியை வழங்கிவிட்டால், அவர்கள் எதிர்காலத்திலே MCA/MBA படிக்கும்போது தொடர்ந்து அந்த மடிக் கணினியைப் பயன்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசில் பல்வேறு நியமனப் பணிகள் உள்ளன. ஆனால், அந்த நியமனப் பணிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட மக்களுக்குரிய வாய்ப்புகள் வழங்கப்படுவதில்லை. இந்த ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடனேயே, தமிழகத்தில் இருக்கக்கூடிய உயர் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் பல்வேறு அமர்வு நீதிமன்றங்களிலே அரசு வழக்கறிஞர்கள், கிரிமினல் கோர்ட்டுகள், சிவில் கோர்ட்டுகளில் நியமிக்கப்பட்டனர். ஆனால், ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு தமிழகத்தில் 4 பேருக்கு மட்டும்தான் அந்தப் பதவி வழங்கப்பட்டது. எனவே, ஒரு ஆட்சி மாற்றம் நடைபெறுகின்றபோது, ஏற்கெனவே இருக்கக்கூடியவர்கள் மாற்றியமைக்கின்றபோது, இதையெல்லாம்

கணக்கிலே வைத்து, இப்போது அடுத்த கட்டமாக நியமிக்கப்படுகின்றபொழுதாவது, குறைந்தது 22 சதவீதம் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த வழக்கறிஞர்கள் அரசு வழக்கறிஞர்களாக இருக்கக்கூடிய வகையிலே, ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

பிற்பகல் 2—20

எங்களைப் பொறுத்தமட்டிலும் கொள்கைரீதியாக புதிய தமிழகம் கட்சி மதுவிலக்கிலே தீவிரமாக இருக்கக்கூடிய கட்சி. ஆனால், இப்பொழுது மது ஒழிக்கப்படுவதற்கான வாய்ப்புகள், அதிலிருந்து மீட்கப்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை. இப்பொழுது மாவட்ட அளவிலே ஆயிரக்கணக்கான இடங்களிலே Bar நடத்துவதற்கு டெண்டர் விடப்படுகிறது. ஒரு மாவட்டத்திலே ஒரு Bar கூட ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் எடுக்க முடியாத அளவிற்கு இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏன் அந்த வாய்ப்பைக் கொடுக்கக்கூடாது? நாங்கள் அதை ஆதரிக்கக்கூடியவர்கள் இல்லை. ஆனால், ஒரு சிறு தொழில் என்று வருகின்றபொழுது அந்த வாய்ப்பை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒடுக்கப்பட்ட சமுதாயத்திற்காகக் குரல் கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு, ஒடுக்கப்பட்ட சமுதாய மக்களைப் பாதிக்கின்ற வகையிலே, அவர்கள் Bar நடத்துவதற்கு டெண்டர் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைப்பது, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதா அல்லது அவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதா?

அதுமட்டுமல்ல, Bar வைக்கின்ற விஷயத்தைப் பொறுத்தமட்டிலும், அது எந்தவிதத்திலும் ஜாதி அடிப்படையிலோ அல்லது மத அடிப்படையிலோ வழங்கப்படுவதில்லை. அரசின் நடைமுறை விதிகளின்படி அது வழங்கப்படுகிறதே தவிர, அதிலே ஒதுக்கீடு முறையெல்லாம் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது ஒரு தொழில். அரசினுடைய நிறுவனமாக இருந்தாலும், அது ஒரு வியாபார அமைப்பு. அது தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம். அதிலே ஒதுக்கீடு முறையெல்லாம் சட்டப்படி வராது. அரசின் விதிமுறைப்படிதான் ஒதுக்கப்படுகிறது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர், அன்புகூர்ந்து உரையை முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இப்பொழுதுதான் பேசத் தொடங்கியிருக்கிறேன். அதாவது கொள்கை அடிப்படையில் மதுவை எதிர்க்கிறோம் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. நீங்கள் சொன்னதுபோல, மத்திய அரசோ அல்லது மாநில அரசோ முடிவெடுத்தால், அதை வரவேற்கக்கூடியவர்கள் நாங்களாகத்தான் இருப்போம். ஆனால், ஒரு தொழில் என்று வருகின்றபொழுது கிராமத்திலே இருக்கக்கூடிய இளைஞர்கள், இப்பொழுது வேலைபார்ப்பதற்காக 50,000 ரூபாய் கட்ட முன் வருகிறார்கள். குடிக்கக்கூடியவர்களில் பெரும்பாலானவர்கள் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால், தொழில் என்று வருகின்றபொழுது அவர்களுக்கு ஏன் அந்த வாய்ப்பு மறுக்கப்படுகிறது என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். வேலைவாய்ப்பிலே ஆதி திராவிட மக்களுக்கு வாய்ப்பு அளியுங்கள் என்று சொன்னால், அது ஏற்புடைய கருத்து. ஆனால், போகிற போக்கைப் பார்த்தால், குடிக்கின்ற எண்ணிக்கையிலும் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று நீங்கள் கேட்காமலிருந்தால், அதுவே பெரிய விஷயம் போல் தோன்றுகிறது. (சிரிப்பு) வேலைவாய்ப்பிலே ஒதுக்கீடு கொண்டுவர முடியுமே தவிர, வியாபார நிறுவனங்களில், வணிக நிறுவனங்களில் ஒதுக்கீடு முறையைச் செயல்படுத்துவது என்பது நடைமுறையில் சாத்தியமாகாது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிட மக்கள் வந்தால், அவர்களுக்கு உதவி செய்வதற்குத் தயாராக இருக்கிறோம். அவர்கள் முன்வந்தால், அவர்களும் அங்கே ஏலத்திலே கலந்துகொண்டு எடுத்துக்கொள்ளலாம். அதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

[2012 பிப்ரவரி 2

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. போட்டி, ஏலம் என்பது அல்ல. நீங்களாகவே அதை ஒதுக்கீடு செய்கிறீர்கள். கொடுக்கிறபோது இதனைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதுவிலக்குக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்று சொன்னால், நாங்கள் அதனை வலிமையாகச் செய்துவிடுவோம். எல்லா கடைகளையும் மூடவேண்டும், பூட்டுப் போடவேண்டுமென்று நாங்கள் போராடுவோம். இப்பொழுது பிரச்சினை அதுவல்ல. அது ஒரு தொழிலாக நடத்தப்படுகின்றது. ஏற்கெனவே இட ஒதுக்கீடுகள் கொடுக்கப்படுவதுபோல அந்தத் தொழிலில், இதனையும் நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தது,. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) என்ன பேச வந்தீர்கள்? மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில அபகரிப்பைப் பொறுத்தவரையில், நிறைய பேர் மீது வழக்குப் போட்டிருக்கிறீர்கள். நிலங்களை மீட்டெடுக்கிறீர்கள், பாராட்டுகிறோம். ஆனால், அதேசமயத்தில், ஏற்கெனவே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, தூத்துக்குடி மாவட்டம், தெய்வசெயல்புரத்தில் ஒரே ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆயிரம் ஏக்கர் நிலத்தை அபகரித்து வைத்திருக்கிறார்கள். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு, மூன்று பேர் மட்டும் அந்த நிலத்தை அனுபவித்து வருகிறார்கள். மாறி, மாறி ஆளுங்கட்சியினுடைய ஆதரவைப் பெற்றுக்கொண்டு, அவர்கள் பாதுகாத்துக் கொள்கிறார்கள். ஒருவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒன்றியப் பெருந்தலைவராகக்கூட இருக்கிறார். அவர்மீது F.I.R. போடப்பட்டு வழக்கு நிலுவையில் இருக்கிறது. அந்த வழக்கின்மீது நடவடிக்கை எடுக்காத காரணத்தினால்தான் தொடர்ந்து மீண்டும் மீண்டும் பிரச்சினை செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு மாவட்ட பொறுப்பாளர்மீது வெடிகுண்டு வீசித் தாக்குகிற அளவுக்கெல்லாம் நிலைமை மோசமாக இருக்கின்றது. எனவே, கடுமையான நடவடிக்கை எடுத்து, அந்த ஆளுங்கட்சியைச் சார்ந்த. . .



2012 பிப்ரவரி 2]

பிற்பகல் 2–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது அந்த வழக்கு முறையாகப் பதிவு செய்யப்பட்டு, F.I.R. போடப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இதை அவர் எப்படிச் சொல்கிறார் என்று எனக்குப் புரியவில்லை. அதாவது அவர்கள்மீது ஏற்கெனவே வழக்கு போட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் சார்பாக டாக்டர் அவர்கள் பேசுகிறார்கள். (குறுக்கீடு) உங்கள் இரண்டு பேரில் யார் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள், சொல்லுங்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், தெய்வசெயல்புரம் கிராமத்தில் நடந்த நில மோசடியிலே சம்பந்தப்பட்டவர்கள்மீது ஒரு சிறு நடவடிக்கைகூட இதுவரை எடுக்கப்படவில்லை. அதிலே யாருமே கைது செய்யப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் அவர்கள்மீது ஏற்கெனவே போட்ட ஒரு வழக்கு refer செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் வெடிகுண்டு வீசியிருக்கிறார்கள். எங்களுடைய கட்சித் தலைவர்களைத் தாக்கி, அவர்கள் மருத்துவமனையில் ஒரு மாதம் treatment–லே இருந்து கொண்டிருக்கிறார்கள். மருத்துவமனைக்குள்ளேயே சென்று அடிக்கிறார்கள். இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே, மண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தவறான தகவலைத் தெரிவிக்கக்கூடாது. 1,000 ஏக்கர் நிலத்தை அபகரித்தவர்கள்மீது முதல் தகவல் அறிக்கை மட்டும்தான் போடப்பட்டது. மேற்கொண்டு எந்தவிதமான

நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதன் காரணமாகத்தான் ஒரு நல்ல தொண்டராக இருக்கக்கூடிய மாரியப்பன் என்பவர்மீது,—அவர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்—அவர் வீட்டிலேபோய் வெடிகுண்டு வீசுகிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாவட்டச் செயலாளர் கனகராஜ், அவர்கள்மீது தாக்குதல் நடத்துகிறார்கள். எந்த நேரத்திலும் அவருக்கு ஆபத்து வரக்கூடிய நிலைமையெல்லாம் இருக்கிறது என்பதை நான் அறிவேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையை உன்னிப்பாகக் கவனித்து, யாராக இருந்தாலும் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வேண்டுகோள் வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Dr, Krishnasamy, time is over. (குறுக்கீடு) அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்... (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் பேசுவதற்கு மைக் கொடுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் மிகப் பெரிய எதிர்பார்ப்புகளோடு ஆட்சி மாற்றத்தை உருவாக்கினார்கள். எனவே, இந்த ஆட்சியினுடைய எல்லாவிதமான நல்ல திட்டங்களையும் மக்களுக்குக் கொண்டு செல்லவேண்டிய பொறுப்பு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் எந்த அளவிற்கு முன்னிலைப்படுத்தப்படுகிறார்களோ, அந்த அளவுக்குத்தான் இந்த ஆட்சியினுடைய திட்டங்களும் மக்களைச் சென்றடையும். ஆனால், பிரதான ஆளுங்கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களையே அதிகாரிகள் உதாசீனப்படுத்துவதை எல்லாம் கோவை மற்றும் இதர மாவட்டங்களில் நாம் பார்க்கிறோம். எனவே, நான் வைக்கக்கூடிய வேண்டுகோள் என்னவென்று சொன்னால், அரசினுடைய எந்தத் திட்டங்களாக இருந்தாலும், அது சட்டமன்ற உறுப்பினர்கள் வாயிலாகத்தான் அந்தத் திட்டங்கள் மக்களிடம் கொண்டு செல்லப்பட வேண்டும் என்ற ஒரு புதிய விதிமுறையை உருவாக்கவேண்டும். அதுபோல, ஒரு ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தாலுங்கூட, அவருக்கு ஒரு செயலாளர் இருக்கிறார். ஒன்றியப் பெருந்தலைவர்களுக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகமே இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்ன இருக்கிறது? எப்படிச் செயல்படுவது? (குறுக்கீடுகள்) அலுவலகம் இருக்கிறது; அலுவலர்கள் எங்கே இருக்கிறார்கள்? அலுவலகத்தை நாம்தான் திறந்துவைத்து செயல்பட வேண்டி இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு



என்ன மரியாதை இருக்கிறது? அரசின் திட்டங்களை அவர்கள் எப்படிச் செயல்படுத்துவது? அது எப்படியோ Constitution இயற்றப்பட்டபோது, சட்டமன்ற உறுப்பினர்களுடைய செயல்பாடுகள் குறித்து ஒரு தெளிவான நிலை இல்லாதிருக்கிறது. எனவே, அரசினுடைய திட்டங்களைப் பொதுமக்களிடத்தில் கொண்டுபோக வேண்டும் என்றால், அதற்கு குறைந்தபட்சம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலாவது அந்த மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலகம் கொடுத்து, ஒரு Co-ordinator அல்லது Nodal Officer என்று ஒரு அதிகாரியைக் கண்டிப்பாக நியமிக்க வேண்டும். அப்படி இல்லாமல் ஒரு சட்டமன்ற உறுப்பினர் பணியாற்றுவது எளிதானதல்ல. ஒரு B.D.O., அலுவலகத்திற்கும், ஒரு தாசில்தார் அலுவலகத்திற்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் மனுக்களைக் கொண்டுசெல்ல முடியுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல; நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இதே நிலைமைதான். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இன்று ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கினாலும் இதே நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தேவையானவற்றைச் செய்துகொள்ள 50,000 ரூபாய் வழங்கப்படுகிறது. ஆனால், ஊராட்சி மன்றக் குழுத் தலைவராக இருக்கின்றவர்களுக்கெல்லாம் கொடுப்பது ரூ.1,500 மட்டும்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் எப்படிச் செயல்படுவது என்பதைத்தான் நான் கேட்கிறேன். நாங்கள் ஒரு மனுவை வாங்கினால், அந்தச் சட்டமன்ற உறுப்பினரே அதை எப்படி B.D.O., அலுவலகத்திலோ, தாலுகா அலுவலகத்திலோ கொடுக்க முடியும்? ஏன், எங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே ஒரு அறையை ஒதுக்கி. . . (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் நான் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செய்து கொடுத்திருக்கிறது. ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று தனியாக அலுவலகம் இருக்கிறது. அவர்களுக்கு உதவியாளர்கள் வேண்டுமென்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பளத்தைக் கவனித்துப் பார்த்தால் தெரியும். ஒட்டுமொத்த சம்பளம் ரூ.50,000 என்று இல்லை. அதிலே பிரித்துப் போடப்பட்டிருக்கும். உங்களுடைய சம்பளம் எவ்வளவு? உங்களுடைய உதவியாளருக்குக் கொடுக்க வேண்டிய சம்பளம் எவ்வளவு என்று பிரித்துப் போடப்பட்டிருக்கும். உங்களுக்கு வேண்டிய உதவியாளர்களுக்கு அதைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பிற்பகல் 2–30

அதேபோல, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்துவதையும் சட்டமன்ற உறுப்பினர்கள்தான் முடிவு செய்கிறீர்கள். உறுப்பினரின் கோரிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர், திட்ட அலுவலர் மற்றும் மாவட்ட அதிகாரியிடம் சென்று முறையிட்டால் அந்த வேலைகள் நடைபெறும். மக்களுடைய பிரதிநிதிகளாகிய நீங்கள் நேரடியாகச் சென்று தாராளமாக மக்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லலாம். அதற்கு எந்தத் தடையும் இல்லை. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாகச் செயல்படுவதற்கு எந்தத் தடையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி, "மாநிலச் சட்டமன்றம்" என்ற மானியக் கோரிக்கையின் மீது விவாதம் நடைபெறும். அந்த விவாதத்திலே நீங்கள் பேசலாம். எனவே, இப்போது நேரத்தை வீணாக்க வேண்டாம். Please sit down. (குறுக்கீடு) அப்போதுதான் தகுந்த பதில் உங்களுக்குக் கிடைக்கும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இணைப்பு அதிகாரி செயல்பட வேண்டும். சட்டமன்ற உறுப்பினருக்கும், பிற அலுவலகங்களுக்கும் இடையிலே கண்டிப்பாக ஒரு அதிகாரி இருக்க வேண்டும்.

அடுத்து, இன்னொரு முக்கியமான பிரச்சினை குறித்துப் பேசிவிட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். இந்த ஆட்சி





மாற்றத்திற்குக் காரணமான பல்வேறு விஷயங்களில் ஒன்றான விலைவாசி உயர்வைப்பற்றி ஒரே ஒரு வார்த்தை சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, உங்களுக்கு நிறைய சந்தர்ப்பங்கள் வரும், அப்போது நீங்கள் பேசலாம். அடுத்த உறுப்பினர்கள் பேசவேண்டும். எனவே, நிலைமையை எண்ணிப் பாருங்கள். Please sit down. (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஆட்சிக்கு வந்து 8 மாதங்கள் ஆகிவிட்டன. இந்த ஆட்சி வருவதற்கு முன்பாக, விலைவாசி உயர்வைப்பற்றி கடந்த ஆட்சியிலே அதிகமாகப் பேசப்பட்டது. ஆனால், ஆட்சிக்கு வந்த 8 மாதங்களிலே மிளகாய் விலை ரூ.120/–லிருந்து ரூ.160/– ஆகக் கூடியிருக்கிறது. ஒரு கிலோ துவரம் பருப்பு விலை ரூ.60/–லிருந்து ரூ.70/– ஆகவும், கடலை எண்ணெய் ரூ.90/–லிருந்து ரூ.105/–ஆகவும், பாமாயில் ரூ.55/–லிருந்து ரூ,.65/–ஆகவும், ரிபைண்டு ஆயில் ரூ.60/ –லிருந்து ரூ.80/–ஆகவும், காராமணி ரூ.35/–லிருந்து ரூ.50/–ஆகவும், மொச்சைப் பயிறு ரூ.35/–லிருந்து ரூ.45/–ஆகவும், பட்டாணி ரூ.25/–லிருந்து ரூ.35/–ஆகவும் கூடியிருக்கின்றது. இதைத் தடுப்பதற்கு நடவடிக்கை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விலைவாசி ஏற்றத்தைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஏறியிருக்கிற விலைவாசியைக் கட்டுப்படுத்துகின்ற வகையில், விலை ஏறியிருக்கிற மிளகாய் மற்றும் புளி போன்ற பொருட்களுக்காக ரூ.50 கோடி நிதியை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். விலையேற்றம் இல்லாமல் இருக்கிற அளவிற்கு இன்றைக்கு அனைத்துப் பொருட்களும் ஒரே வாரத்தில் விலை குறைந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மிளகாய் ஏற்கெனவே ரூ.100/–, ரூ.150/–, ரூ.200/– என்று விற்றுக் கொண்டிருக்கிற விலையிலிருந்து தற்போது குறைந்து ஏறத்தாழ

[திரு. செல்லூர் கா. ராஜு] [2012 பிப்ரவரி 2

ரூ.85/–க்கு விற்றுக்கொண்டிருக்கிறது. புளியும் அதேமாதிரிதான். அந்த மாதிரி விலை ஏறியிருந்த பொருட்கள் எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அறிவிப்பினால் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியின்மூலமாக பொருட்கள் வாங்கப்பட்டு விலைவாசி கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரையின்மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையைப் பொறுத்தவரையில், இந்த அரசு வறுமை ஒழிப்புத் திட்டம், சமூகப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டம், நகர்புற மற்றும் கிராமப்புற ஏழை மக்களுக்கான பல்வேறு சிறப்புத் திட்டங்களை எல்லாம் விரிவாக வரவேற்கத்தக்க அளவிலே இங்கே தெரிவித்திருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கின்றோம். அதேநேரத்தில், மத்திய அரசாங்கம் கடைப்பிடித்து வரக்கூடிய வறுமைக் கோட்டுப் பட்டியல் அடிப்படையில் மாநில அரசாங்கத்தினுடைய பல்வேறு திட்டங்கள் இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, இந்த அவையில் வறுமைக் கோட்டுப் பட்டியல் என்பதே தமிழகத்தில் இல்லை என்று அறிவித்த பின்பு, இன்றைக்கும் அரசு செயல்படுத்தி வரும் நலத் திட்டங்களுக்கு அந்தப் பட்டியலைக் கடைப்பிடித்து வருவதால், உண்மையான ஏழைகள் அதிலே பயனடைய முடியாத நெருக்கடி இருக்கிறது என்பதனை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதன்மைத் துறையான வேளாண்மைத் துறைக்கு பல்வேறு சிறப்புத் திட்டங்களை அறிவித்திருக்கின்றார்கள். குறிப்பாக, நெல் மற்றும் கரும்பு போன்ற விவசாயப் பொருட்களுக்குரிய விற்பனைக்கு அரசு நிர்ணயிக்கக்கூடிய விலையினைக் கூடுதலாக உயர்த்தி வழங்க வேண்டும். (குறுக்கீடுகள்)



2012 பிப்ரவரி 2] [டாக்டர். க. கிருஷ்ணசாமி]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சபையில் அமைதி காக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–35

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** தற்போது வேளாண்மைத் துறை மும்முனை மின்சார கிடைக்காததால் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. இரண்டு தினங்களாக நமது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் விரிவான விளக்கத்தை அதற்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இரண்டு ஆண்டுக்காலம் அதனைச் சரிசெய்வதற்கு ஆகிற இடைவெளியைக் குறைத்து, இடைக்காலத்தில் தங்களுக்குரிய மும்முனை மின்சாரம் இப்போது கிராமங்களிலே ஒன்றரை மணி நேரம், இரண்டு மணி நேரம் என்கிற அளவிலேகூட நிறுத்தப்படுவதால் விவசாயிகள் பெரும் வேதனைக்குள்ளாகியிருக்கிறார்கள். அந்தக் கால அளவையாவது, மும்முனை மின்சாரம் எத்தனை மணி நேரம் விவசாயிகளுக்குக் கிடைக்கும் என்பதை நிர்ணயம் செய்து, விவசாயத்தைப் பாதுகாப்பதற்குரிய, அந்த நெருக்கடியிலிருந்து நம்முடைய விவசாயப் பெருமக்களைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கையை மின்சாரத் துறைமூலமாக மேற்கொள்ள வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, சென்ற நிதிநிலை அறிக்கையிலே, சோலார் சிஸ்டத்தின்மூலமாக விவசாயிகளுடைய மின் மோட்டார்களை இயக்குவதற்கான சிறப்புத் திட்டத்தையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தத் திட்டத்தினால் விவசாயிகள் பயன்பெறுவதற்குக் கூடுதல் மின்சாரத்தை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்ட சூரிய ஒளி மின் சக்தியின்மூலமாகப் பெறக்கூடிய மின்சாரத்தைப் பயன்படுத்தி, விவசாய மின் மோட்டார்களை இயக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை ஆய்வு செய்தபோது, ஒரு விவசாய மோட்டாரை இயக்குவதற்கு, ஏறத்தாழ 16 இலட்சம் ரூபாய் முதலீடு தேவைப்படும் என்பதால், மிகப் பெரிய செலவு ஏற்படும் என்பதால், நடைமுறையில் அது சற்று சாத்தியமில்லாமல்

இருக்கிறது. வருங்காலத்திலே பல்வேறு ஆய்வுகளின்மூலமாக, அந்தச் செலவுகளைக் குறைப்பதற்கும், சூரிய ஒளி மின்சக்திக்கு ஆகும் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கான ஆய்வுகள் உலக அளவிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த ஆய்வுகளுக்குப் பின்புதான், அது சாத்தியமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. அதோடு, இன்றைக்கு நீர்வள ஆதாரத்தைப் பெருக்குவதற்காக பல்வேறு சிறப்புத் திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கிற அதே நேரத்தில், காவிரி–குண்டாறு–அக்கினியாற்றுத் திட்டத்தை நிறைவேற்ற இருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விவசாயப் பெருமக்கள்மீது அக்கறைகொண்டு அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்திற்கும் 64 கோடி ரூபாய் சென்ற நிதிநிலை அறிக்கையிலேயே ஒதுக்கியிருப்பதையும் நாங்கள் மனதார வரவேற்றுப் பாராட்டியிருக்கின்றோம். அந்தத் திட்டத்தை உடனடியாக, காலதாமதமில்லாமல் துவக்கி, புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுடைய துயர் துடைப்பதற்கு, அதனை விரைந்து செயலாற்ற வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறோம்.

இன்றைக்குக் கூடங்குளத்திலே இருக்கக்கூடிய அணு மின் நிலையம் சம்பந்தமாக நம்முடைய மாநில அரசு என்ன நிலை எடுத்திருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தி, அங்கு நடக்கிற விரும்பத்தகாத பிரச்சினைகளைத் தடுத்து நிறுத்துவதற்குரிய முன்முயற்சிகளை நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் எடுக்க வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறோம்.

சுகாதாரத் துறைமூலம் இன்றைக்குப் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அந்தத் திட்டங்களின் வாயிலாக இன்றைக்குப் பல்வேறு சிறப்பான முன்னேற்றங்கள் மாநிலத்தில் காணப்படுகின்றன. நம்முடைய தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலே, பல்வேறு திட்டங்கள் முன்மாதிரித் திட்டங்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சுகாதாரத் துறையிலே எங்கள்



புதுக்கோட்டை மாவட்டம் சம்பந்தமாக நீண்ட நாள் கோரிக்கை ஒன்று இருக்கிறது. மருத்துவக் கல்லூரி வேண்டுமென்கிற கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களும் கனிவோடு பரிசீலித்து, அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமாய் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவான காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள்; இது சிறப்பான திட்டம்; வரவேற்கக்கூடிய திட்டம். இந்தத் திட்டத்தினுடைய வருமான வரம்பு ரூ.72 ஆயிரம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதைக் கூடுதலாக்கி, கிட்டத்தட்ட 1 இலட்சம் ரூபாய் என்ற அளவிற்கு வருமான வரம்பை நிர்ணயிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறோம்.

அதோடு, புதுக்கோட்டையில் பாலிடெக்னிக் கல்லூரி இல்லை. புதுக்கோட்டை மாவட்டத் தலைநகர் என்பதால், அங்கு அதைத் தொடங்கிட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். உயர் கல்வித் துறையிலே துணைப் பேராசிரியர்கள் நியமனம் சம்பந்தமான அறிவிப்புகள் ஆளுநர் உரையில் இடம்பெறாமல் இருக்கிறது. அதுகுறித்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் இருக்கக்கூடிய 69 அரசுக் கலைக் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்களை நியமிப்பதற்கான ஆணைகளை வழங்கி, தற்போது அது ஆசிரியர் தேர்வு வாரியத்திலே இருக்கிறது. தேர்வு வாரியத்தின்மூலம் முறைப்படி தேர்வு நடத்தப்பட்டு, தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்துக் கல்லூரிகளுக்கும் உதவிப் பேராசிரியர்கள் உரிய முறையில் நியமிக்கப்படுவார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.

[2012 பிப்ரவரி 2

*பிற்பகல் 2–40*

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. நம்முடைய மாநிலத்தில் இன்றைக்கு ஏழையெளிய மாணவர்கள் படித்து வரக்கூடிய தொழிற்பயிற்சி நிலையங்கள் (I.T.I) அனைத்திலுமே, அரசால் எந்தவொரு விடுதியும் தொடங்கப்படாமல் இருக்கின்ற நிலை இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கனிவோடு பரிசீலித்து, விடுதி வசதியை மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்து புதுப்பித்தலைத் தவறவிட்டவர்களுக்கு உரிய கால நீட்டிப்பையும் நம்முடைய அரசு வழங்க வேண்டும். பட்டதாரி ஆசிரியர் நியமனத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு தெரிவித்திருக்கக்கூடிய விளக்கத்திற்கும், இதற்கு முன்பு அரசு வெளியிட்டிருக்கக்கூடிய அறிவிப்பிற்கும் சற்று வித்தியாசம் இருக்கிறது. ஏனென்று கேட்டால், பதிவு மூப்பிலிருந்து ஏதோ பரீட்சை எழுதி, அதிலிருந்து தேர்வு செய்யப்படுவார்கள் என்று செய்தித்தாள்கள் மூலமாகப் பார்த்தோம். அதனுடைய நிலைமைகளை விரிவாகத் தெளிவுபடுத்தி அவற்றைச் சீரமைக்க வேண்டுமென இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று, இன்றைக்கு பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. பஞ்சாப், மேற்கு வங்காளம், கேரளா போன்ற மூன்று மாநிலங்களிலே இருக்கக்கூடிய நிதி நெருக்கடியைப் போக்குவதற்காக சிறப்பு நிதிகளை மத்திய அரசாங்கம் அறிவித்திருக்கிறது. ஆனால், அதிலும் தமிழகத்தை மத்திய அரசாங்கம் விட்டிருப்பது ஒரு வேதனைக்குரிய செய்தியாகும். அதோடு இன்றைக்கு, தமிழ்நாட்டு மக்களிடத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கக்கூடிய சிறப்புத் திட்டத்தில், நில அபகரிப்பு வழக்குகள் சம்பந்தமாக காவல் நிலையங்களிலே நிறைய வரவேற்புகளை மக்கள் பெற்றிருக்கிறார்கள். அதேபோன்று, தமிழகத்தை இந்தியாவின் முன்மாதிரி மாநிலமாக உருவாக்குவதற்குரிய பல சிறப்புத் திட்டங்களை அறிவித்திருக்கிற நேரத்தில், இன்றைக்கு நில அபகரிப்பு போன்று ஊழல் செய்யக்கூடிய பேர்வழிகளை விசாரித்து, நடவடிக்கை எடுக்கக்கூடிய அந்தச் சட்டத்தில் 'லோக் அயுக்தா' என்கிற ஒரு தன்னாட்சி அமைப்பையும் தமிழகத்திலே ஏற்படுத்தி, அப்படி சட்டவிரோதமாகச் சொத்து



2012 பிப்ரவரி 2] [திரு. எஸ்.பி. முத்துக்குமரன்]

சேர்த்திருப்பவர்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்வதற்கு தமிழகத்திலேதான் ஒரு முன்மாதிரியான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் என்கிற செய்தியையும் உருவாக்கித் தந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு அரசுத் துறைகளிலே பல்வேறு காலியிடங்கள் இருக்கின்றன என்று செய்தித்தாள்களிலே செய்தி வரப்பெற்றிருக்கிறது. குறிப்பாக, வருவாய்த் துறை உள்ளிட்ட துறைகளில் கூடுதலாக காலிப் பணியிடங்கள் இருக்கின்றன.

நேற்று, தஞ்சை மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே பணியாற்றுகின்ற ஒருவர் பணியை முறையாகச் செய்யவில்லை என்பதற்காக பிரம்பால் அடித்த செய்தியும் இன்றைக்குப் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதுபோன்ற நெருக்கடிகளைக் குறைக்க. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், பள்ளி அக்ரஹாரம்–1 என்கிற நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள், தஞ்சாவூர் முதுநிலை மண்டல மேலாளருடன் ஆய்வு மேற்கொண்டதாகவும், அப்பொழுது சில முறைகேடுகளைக் கண்டறிந்து, அதனடிப்படையில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். இப்பொழுது அங்குள்ள நிலைமை என்னவென்று நான் முதலிலே தெரிவித்துவிடுகிறேன். பேச்சுவார்த்தைமூலம் நிலைமை சீர்செய்யப்பட்டு, எல்லோரும் பணிக்குத் திரும்பிவிட்டார்கள் என்ற செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அங்கேயிருக்கிற முதுநிலை மண்டல மேலாளர் அவர்களோடு ஆய்வுக்குச் சென்றபோது ரூ.1,35,000/– கணக்கில் வராத பணம் இருந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, 1,066 மூட்டைகள் நெல் கூடுதலாக இருந்திருக்கிறது. அதிலே 527 மூட்டைகள் நெல் கொள்முதல் செய்து, பட்டியலிடப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அது வியாபாரியுடைய நெல்.

[திரு. இரா. காமராஜ்] [2012 பிப்ரவரி 2

ஆனால், விவசாயிகள் பெயரில் அது பட்டியலிடப்பட்டிருந்ததால், அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைப் பொறுத்தவரையில், அதிகாரிகள், அங்கே பணிபுரிகின்ற பணியாளர்கள் மற்றும் விவசாயிகள் போன்றவர்களிடம் அவரவர் பிரச்சினைகளை ஆய்வு செய்து, அதனடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய நிலைமை இரண்டு மூன்று மாதங்களுக்குக் காவிரி டெல்டா மாவட்டங்களில் நிலவும். எனவே, இதுபோன்ற சிறு, சிறு பிரச்சினைகள் ஆங்காங்கே வருகின்றன. இதனைப் பட்டியலிட்டவர்கள்மீது தவறு இருக்கிறது. தவறின் அடிப்படையிலேதான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துகுமரன் அவர்கள், சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பிரம்பால் அவரை அடித்திருக்கிறார்கள் என்கிற செய்தியைச் சொன்னார்கள். அதில் உண்மையில்லை என்பதனையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் பிரம்பால் அடித்தார் என்ற செய்தி வரவில்லை. கையால் அறைந்தார் என்ற செய்திதான் வந்தது. இல்லையென்றாலும் பரவாயில்லை. ஆனால், நெல் கொள்முதல் நிலையங்களில் இன்றைக்கு போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால், உரியகால அவகாசத்துக்குள் பதிவேடுகளை ஒழுங்காகப் பராமரிக்க இயலவில்லை என்பதால்தான் இந்த குறைபாடு ஏற்பட்டது என்று சொல்கிறார்கள். அதை நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையும் வைத்திருக்கிறார்கள். அதோடு, நேற்றையதினம் நான் குறிப்பிட்டபோது, எங்களுடைய பகுதியில் 'ஜோதி' என்ற நெல் கொள்முதல் செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தேன். அந்தக் கோரிக்கையை



2012 பிப்ரவரி 2] [திரு. சு. குணசேகரன்]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்திருக்கிறாரா, அதற்கு பதில் ஏதும் உண்டா என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் போதுமான பணியாளர்கள் இல்லை, அதனால் பிரச்சினை வருகிறது என்ற ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அதில் உண்மை இல்லை. காவிரி டெல்டா மாவட்டங்களைப் பொறுத்தவரையில் தஞ்சாவூரில் 397 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும், நாகப்பட்டினத்தில் 242 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும், திருவாரூரில் 416 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும், கடலூரில் 124 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும் திறக்கப்பட்டு, அதற்குரிய பணியாளர்கள்—பட்டியல் எழுத்தர், அவருக்கான உதவியாளர்கள் அனைவரும் பணியமர்த்தப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதனையும் இந்த அவைக்குத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, சிவகங்கை மாவட்டத்தில் 'ஜோதி' என்ற நெல்லை நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்மூலம் கொள்முதல் செய்ய வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் நேற்றிலிருந்து கூறிக்கொண்டு இருக்கிறார்கள். நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, இதுவரை சுதந்திர இந்தியாவில் இல்லாத அளவில் ஜூன் 6 ஆம் தேதியே மேட்டூரிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்ட காரணத்தினால் குறுவையில் 5.26 இலட்சம் மெட்ரிக் டன் நெல் இன்று கொள்முதல் செய்யப்பட்டு, மிகப் பெரிய வரலாற்றை புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் படைத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையில் 2011 குறுவைப் பருவத்தில் சாதனை அளவாக 1.20 இலட்சம் மெட்ரிக் டன் டி.கே.எம். என்ற சிவப்பு ரக நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. கொள்முதல் செய்யப்பட்ட இவ்வகை நெல்லிலிருந்து பெறப்பட்ட அரிசி கன்னியாகுமரி போன்ற தென் மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் கோரியபடி, சிவகங்கை மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள 'ஜோதி' எனப்படும் சிவப்பு ரக நெல் அரசால் கொள்முதல் செய்யப்படும்.

[திரு. இரா. காமராஜ்] [2012 பிப்ரவரி 2

இளையான்குடி, காளையார்கோவில் தாலுகாகளில் சுமார் 1,700 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ள இவ்வகை நெல் தற்போதுதான் அறுவடைக்குத் தயாராகி வருகின்றது. இந்த ரக நெல் சுமார் 6,000 மெட்ரிக் டன் கொள்முதல் வரும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. தற்போது சிவகங்கை மாவட்டத்தில் இயங்கி வரும் ஒன்பது நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்மூலம் 84 மெட்ரிக் டன் நெல் மட்டுமே கொள்முதலுக்கு வந்துள்ளது. 1–2–2012 முதல் மேலும் 37 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கவும், விவசாயிகள் கொண்டு வரும் 'ஜோதி' ரக நெல் உட்பட அனைத்து ரக நெல்லையும் கொள்முதல் செய்ய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள். (குறுக்கீடு) திரு. எஸ்.பி. முத்துக்குமரன் போதும் நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு அமைச்சர் அவர்கள் விரிவான பதிலைத் தெரிவித்துவிட்டார்கள். நேரம் முடிந்துவிட்டது. அன்பு கூர்ந்து உட்காருங்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்லிவிட்டு முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள், சீக்கிரம் நன்றி சொல்லி உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய புதுக்கோட்டை தொகுதியில் முக்கியமான கோரிக்கை ஒன்றை இங்கே முன்வைக்க விரும்புகின்றேன். என்னவென்று கேட்டால், என்னுடைய புதுக்கோட்டை நாடாளுமன்ற தொகுதி, சென்ற தி.மு.க., காங்கிரஸ் அரசாங்கம் இருந்தபொழுது அவர்களுடைய கூட்டுச் சதியால் அந்த புதுக்கோட்டை நாடாளுமன்ற தொகுதி என்கிற பெயர் காணாமல் போய்விட்டது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் வாயிலாக எப்படியாவது ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியாவது எங்களுக்கு புதுக்கோட்டை என்கிற பெயரில் பெற்றுத் தருவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அதேபோன்று, சமுதாயத்தில்



2012 பிப்ரவரி 2] [திரு. எஸ்.பி. முத்துக்குமரன்]

நலிவுற்ற நிலையில் இருக்கக்கூடிய தச்சு, கொல்லர் தொழில்களை செய்யக்கூடிய அந்த சமூகத்தைச் சேர்ந்த மக்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் எனவும் . . .

*பிற்பகல் 2–50*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை தொகுதி கடந்த மத்திய அரசின் நடவடிக்கையால் காணாமல் போய்விட்டது என்று சொன்னார். Delimitation அடிப்படையில் அது பிரிக்கப்பட்டிருந்தது. திரும்பவும் delimitation நடப்பதற்கு 5 பொதுத் தேர்தல்கள் நடைபெற வேண்டும். ஆக, 30 வருடங்கள் கழித்துத்தான் காணாமல் போனதே கண்டுபிடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள். விரைவில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், தமிழக முதல்வர் அவர்களுக்கும், எனக்கு இந்த வாய்ப்பினை வழங்கிய மருத்துவர் அய்யா அவர்களுக்கும், சின்ன அய்யா அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் குக்கிராமங்களில் அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காக 'தாய்' திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தி வரும் தமிழக அரசை பாட்டாளி மக்கள் கட்சி மனதார வரவேற்கிறது. மேலும், புதிய ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 1.34 கோடிக்கும் மேலான குடும்பங்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருவதையும் பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்கிறது. மேலும், பிளாஸ்டிக் கழிவுகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் சீர்கேட்டைத் தவிர்க்கும் வகையில் பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்ட தார்ச் சாலைகளை அமைக்கும் திட்டத்தையும் பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்கிறது. மேலும், முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில் தமிழகத்தின் உரிமை நிலைநாட்டப்படும் என்று அறிவித்ததையும் பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்கிறது. அதே சமயத்தில், கடந்த காலங்களில் தேவிகுளம், பீர்மேடு போன்ற பகுதிகள் கேரள மாநிலத்திற்குத் தாரைவார்க்கப்பட்டதன் காரணமாக, இன்றைக்கு

[திரு. அ. கணேஷ்குமார்] [2012 பிப்ரவரி 2

பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதால் அதை மீட்டெடுப்பதற்காகவும் தமிழக அரசு முன்வர வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி கேட்டுக்கொள்கிறது.

'தானே' புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், உழவர்களுக்கும் எவரும் எதிர்பார்க்காத அளவிற்கு சலுகைகள் வழங்கப்போவதாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அவரது அறிவிப்பை எதிர்நோக்கி மகிழ்ச்சியான செய்திக்காக நாங்களும் காத்துக் கொண்டிருக்கிறோம். ஒருநாட்டில் எல்லா வளமும் வேண்டுமென்றால் அங்கு அமைதியும், பாதுகாப்பும் நிலவ வேண்டியது அவசியமாகும். தமிழகத்தில் அண்மைக் காலமாக சாதி, மத மோதல்கள் இல்லாமல் இருப்பது மிகுந்த நிம்மதியை அளிக்கிறது. அதே நேரத்தில், நாள்தோறும் காலையில் எழுந்து நாளேடுகளைப் பார்த்தாலே கொலை, கொள்ளை, வழிப்பறி போன்ற செய்திகள் நிறைந்திருக்கின்றன. எனவே, இதுபோன்ற குற்றங்களுக்கெல்லாம் தாய் மதுதான் என்பதை தமிழக அரசு உணர வேண்டும். ஏற்கெனவே மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் பூரண மதுவிலக்கை அமல்படுத்த முடியாது என்பதற்கான காரணத்தைத் தெளிவுபடுத்தியிருந்தாலும்கூட, குறைந்தபட்சம் மதுக் கடைகளின் எண்ணிக்கையையாவது கூடுதல்படுத்தாமல், இருக்கின்ற மதுக்கடைகளின் நேரத்தையாவது குறைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

கூடங்குளம் அணு உலைப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வுகாண தமிழக முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அணு உலை காரணமாக தங்களது உயிருக்கும், வாழ்வாதாரத்திற்கும் பாதிப்பு ஏற்படும் என்ற அச்சத்தில் போராட்டம் நடத்திவரும் மக்களில் ஒரு பிரிவினர்மீது தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். மேலும் இதுபோன்ற தாக்குதல் நடைபெறாமல், இப்பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காண்பதற்கும் தமிழக அரசு முன்வர வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், தமிழகத்தில் **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 பிப்ரவரி 2]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், அது நீதி விசாரணையில் இருக்கும் பொருள் என்பதால், அந்த சப்ஜெக்ட்டுக்குள் போகவேண்டாம். நீதி விசாரணையில் இருக்கும் பொருள் குறித்துப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. அ. கணேஷ்குமார்:** எனது தொகுதி சார்ந்த ஒருசில கோரிக்கைகளை மட்டும் தமிழக அரசின் முன்பு எடுத்து வைக்க விரும்புகிறேன். பிரசித்திபெற்ற மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோயில் அமைந்துள்ள தொகுதியான எனது செஞ்சி தொகுதியில், அதுவும் அந்த மேல்மலையனூர் ஊராட்சிப் பகுதிக்கு மாதந்தோறும் இலட்சக்கணக்கான மக்கள் வந்து செல்கின்றார்கள். அங்கு பல்வேறு குற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதனைத் தடுக்கும் வகையில் அந்தப் பகுதியில் ஒரு தனி காவல் நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டும். அந்தப் பகுதியில் உள்ள காவல் நிலையம் கிட்டத்தட்ட 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள காரணத்தினால் அந்தப் பகுதியில் எந்தவொரு பிரச்சினையாக இருந்தாலும் அங்கே சென்று தீர்வு காண்பது ஒரு கடினமான விஷயமாக இருப்பதாலும், காவல் துறையினர் உடனடியாக அந்த இடத்திற்கு வருவதற்குக் காலதாமதம் ஏற்படுவதன் காரணமாகவும், மேல்மலையனூர் ஊராட்சியிலேயே ஒரு தனி காவல் நிலையம் அமைத்துத்தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–55

விழுப்புரம் மாவட்டத்தில் மிக அதிகமான வர்த்தகம் நடைபெறக்கூடிய செஞ்சியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வெளியூர்களிலிருந்து பல விவசாயிகள் தங்களது நெல்லை விற்பனைக்குக் கொண்டுவருகிறார்கள். அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஒரு கண்காணிப்பாளர் பணியில் இல்லாத காரணத்தினால் அங்கு பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டு பல நாட்கள் அங்கு விவசாயிகள் கொண்டுவந்த நெல்லை விற்பனை செய்யமுடியாமல் ரோட்டிலேயே வைத்துக்கொண்டு போராட்டம் நடத்தியதைக் கடந்த ஒருசில வாரங்களில் நாம் கண்டிருக்கிறோம். எனவே, விவசாயம் மிகுந்த செஞ்சி பகுதியில் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைத்துத் தரும்படி அன்போடும் பணிவோடும் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. கணேஷ்குமார்] [*2012 பிப்ரவரி 2*

செஞ்சி பகுதிக்குட்பட்ட என்.ஆர். பேட்டை என்கிற நரசிங்கன்பேட்டை என்ற பகுதியில் மக்கள் பல ஆண்டுகளாக வசித்து வருகிறார்கள். அந்தப் பகுதியில் அவர்களுக்குப் பட்டா கிடையாது. அந்த இடம் நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் அரசின் பரிசீலனையில் உள்ளதாக கடந்த 10 ஆண்டுகளாக அவர்களுக்குப் பதில் தெரிவிக்கப்பட்டு வருகிறது. அந்த நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் தக்க விசாரணை நடத்தி அந்த பகுதி மக்களுக்கு விரைவில் பட்டா கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் தமிழக அரசைப் பணிவோடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

செஞ்சி தொகுதிக்குட்பட்ட கிராமப்புறப் பள்ளிகளில், மேல்நிலைப் பள்ளிகளில் P.G. Assistants என்று சொல்லக்கூடிய முதுநிலை ஆசிரியர்கள் 20 சதவிகிதத்திற்கும் குறைவாகத்தான் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக கடந்த 3 மாதத்திற்கு முன்பாகவே ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்ற அறிவிப்பு வெளிவந்த பிறகும், இன்றைக்குக்கூட அந்த நிலை நீடித்துக்கொண்டிருக்கிறது. எனவே, அந்தப் பகுதி கிராமப்புறப் பகுதியாக இருப்பதால் அவர்களின் அடிப்படை வசதிகள் அனைத்தும் தமிழக அரசால் நிறைவேற்றப்பட்டு இன்றைக்கு பள்ளிகளில் அடிப்படை வசதிகள் அனைத்தும் வந்துவிட்ட பிறகும், ஆசிரியர்கள் நியமனம் இல்லாத காரணத்தினால் தேர்ச்சி சதவிகிதம் அங்கு குறைந்துகொண்டே செல்கிறது. எனவே, அந்த ஆசிரியர் நியமனங்களை மிக விரைவில் முடிக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பேசிக்கொண்டிருக்கின்ற உறுப்பினர் அவர்கள், அந்தப் பள்ளியிலே நிறைய ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் கருத்தில்கொண்டுதான் தமிழகத்தின் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னாலே, கல்வித் துறையில் 25 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு--25 ஆண்டுகளில் சுமார் 1 இலட்சம் ஆசிரியர்களை நியமித்திருக்கும் நிலையில்--இந்த ஒரே ஆண்டில் மட்டும் 56,000 ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று



*2012 பிப்ரவரி 2*] [திரு. என்.ஆர். சிவபதி]

கட்டளையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனடிப்படையில் இப்போது பகுதிநேர ஆசிரியர்கள் நியமனம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. முறையாக ஆசிரியர் தேர்வாணையம்மூலம் தேர்வு செய்யப்பட்டு உரிய முறையில் அனைத்து ஆசிரியர்களும் விரைவிலேயே பணியமர்த்தப்படுவார்கள் என்பதைத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. அதுபோல் அந்தப் பகுதியில் அடிக்கடி இரவு நேரங்களில் மின்வெட்டு ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. அடுத்த மாதத்தில் அனைத்து மாணவர்களும் தேர்வைச் சந்திக்க இருப்பதால், இரவு நேரங்களிலாவது அந்த மின்வெட்டைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிரசித்திபெற்ற செஞ்சிக் கோட்டைக்குட்பட்ட பகுதியில் பிரசித்திபெற்ற ஆஞ்சநேயர் கோயில் தொல்பொருள் துறை வசம் உள்ளது. அங்கு ஆண்டுதோறும் புத்தாண்டு தினத்தன்று சுமார் இரண்டு இலட்சம் பொதுமக்கள் ஒன்றுகூடி, அன்னதானம் வழங்குவது வழக்கம். ஆனால், இந்த ஆண்டு ஏதோ ஒருசில காரணங்களினால், அதனுடைய தொன்மை அழிந்துவிடும் என்ற காரணத்தினைக் காட்டி, தொல்லியல் துறை அன்னதானம் வழங்க இசைவை மறுத்துவிட்ட காரணத்தினால், அங்கு வந்த மக்கள் அனைவரும் ஏமாற்றம் அடைந்தனர். இதுபோன்ற ஆன்மீகத் தலத்தில் தொல்லியல் துறை வசம் உள்ள அந்த ஆஞ்சநேயர் கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் அன்னதானத்தைத் தொடர்ந்து நடத்திட அரசு அனுமதி அளித்திட வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, செஞ்சி தொகுதிக்குட்பட்ட மேல்மலையனூருக்கு அருகே தேவனூரில் அனைத்து வசதிகளும் கொண்ட கால்நடை மருத்துவமனை ஒன்று உள்ளது. ஆனால், அங்கு போதுமான அளவில் மருத்துவர்கள் இல்லாத காரணத்தினால், ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் மட்டும்தான் அந்த மருத்துவமனை இயங்குகிறது. இதனால் மக்கள் அவதியுறுகிறார்கள். எனவே, 24 மணி நேரமும்

[திரு. அ. கணேஷ்குமார்] [2012 பிப்ரவரி 2

அனைத்து வசதிகளும் கொண்ட அந்த கால்நடை மருத்துவமனையைத் திறந்துவைத்து, அந்தப் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் ஆவன செய்ய வேண்டும் என்று பணிவுடன் கேட்டு நான் பேசுவதற்கு வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 3–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (3–2–2012) வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–00 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

12. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் முப்பத்தென்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

13. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் இருபத்தாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

14. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் நாற்பத்திரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

15. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு



2012 பிப்ரவரி 2]

நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

7. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2012).

8. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2012).

9. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2012).

10. 2012 ஆம் ஆண்டு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2012).